


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CLASS NO. 394.8113
ACCESSION NO. 6018

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி

AMIRALI PUBLIC LIBRARY
Pradeshiya Sabha
Sammanthurai
14 FEB 2016

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6018

23 ජූලි 1985

PUBLIC LIBRARY
SAMMANTHURAI
26-7-1985

FOR REFERENCE
USE ONLY.

85/07/25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கும் ஓர் இதயம்

AMIR ALI PUBLIC LIBRARY
SAMMANTHURAI
25-7-1985

ஜுனைதா ஷெரீப்

FOR REFERENCE
USE ONLY.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்

வெளியீடு - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கும் ஓர் இதயம்

ஆசிரியர் : கே. எம். எம். ஷெரீப்

வெளியீடு : இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்,
சாய்ந்தமருது, கல்முனை. (இலங்கை)

அச்சகம் : கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

முதற்பதிப்பு : பெப்ரவரி 1985.

உரிமை : ஆசிரியருக்கு.


| | |
|---|---|
| வகுப்பு எண்: | 894-8113 |
| வரவுப்பதிவு எண்: | 6018 |


# AVALUKKUM ŌR ITHAYAM

Author : K. M. M. Sheriff

Publishers : Islamic Book Publishing Centre,
(Sainthamaruthu, Kalmunai. Sri Lanka)

Printers : Catholic Press, Batticaloa.

First Edition : February 1985.

Copy Right : Author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

என்னை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
இறைவனடி எய்திய
வாய்மையே உருவான
என் இனிய தந்தைக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்கதையாக ஒலிபரப்பிய இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவினருக்கும், குறிப்பாக அதன் பணிப்பாளர் அல்ஹாஜ் வீ. ஏ. அப்துல் கபூர் அவர்களுக்கும்;

தொடர் நவீனமாக வெளியிட்ட 'வீரகேசரி - மித்திரன்' நிறுவனத்தினருக்கும்;

தற்போது புத்தகமாக வெளியிடும் இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தினருக்கும், குறிப்பாக அதன் பணிப்பாளர் ஜனாப். எஸ். எச். எம். ஜெமீல், நிர்வாக செயலாளர் ஜனாப். அ. ஸ. அப்துஸ்ஸமது ஆகியோருக்கும்;

இந்நாவலைத் தனது முத்து, முத்தான கையெழுத்தில் பிரதியாக்கம் செய்து தந்த எனது மருமகள் ஜனாபா சுபைதா மீரான்சாஹிப் ஆசிரியை அவர்களுக்கும்

எனது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

ஜுனைதா ஷெரீப்

காத்தான்குடி.
20 - 02 - 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் இரண்டாவது வெளியீடாக ஜுனைதா ஷெரீப் அவர்களின் 'அவளுக்கும் ஓர் இதயம்' என்னும் இந்நாவலை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆண்டுக்கொரு நூலாவது வெளியிடல் வேண்டுமெனும் அவாவில் ஆரம்பிக்கப்பட்ட எமது இயக்கம், எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளிப்பதையே தமது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்விலட்சியப் பாதையிலே இயக்கத்தை வழிநடாத்திச் செல்லும் இன்றைய நம்பிக்கையாளர் சபையினரான அ. ஸ. அப்துஸ்ஸமது, மருதூர் ஏ. மஜீத், வீ. எம். இஸ்மாயில், அன்பு முஹையதீன், பாலமுனை பாறூக், எம். ஏ. உதுமாலெவ்வை, பஸீல் காரியப்பர், மாறன் யூ. செயின், எஸ். ஏ. ஆர். எம். செய்யத் ஹசன் மௌலானா, ஏ. யூ. எம். ஏ. கரீம், ஏ. கே. எம். நியாஸ் எல்போர் என்றும் நன்றிக்குரியோராவர்.

எழுத்தாளரின் இன்றைய இலக்கிய வடிவங்கள் முக்கியமாகக் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என்பனவாகும். இவை கல்வி வளர்ச்சியோடும் மிக நெருங்கிய தொடர்புடையவை. எனவே இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் கல்வி மேம்பாட்டுக்கு ஒத்தாசையாய் உள்ளோம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீப காலமாக இலங்கை முஸ்லிம் இலக்கிய கர்த்தாக்களின் சிருஷ்டி வேகம் அதிகரித்துவருவதைக் காண்கிறோம். அவர்களது ஆக்கங்கள் நூலுருப் பெறும்பொழுது நிரந்தர இலக்கியத்தரத்தைப் பெறும் என்பதனாலேயே நூல் வெளியீட்டுத்துறையில் நாம் அக்கறை செலுத்துகிறோம்.

ஜுனைதா ஷெரீப் நாடறிந்த நல்ல எழுத்தாளர். நூற்றுக்கணக்கான நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகளை அவர் எழுதியுள்ளதோடு, அவற்றிற் பெரும்பாலானவை வானொலியில் ஒலிபரப்பப்பட்டும்; பத்திரிகை, சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டும் உள்ளன. 'அவன் ஒன்று நினைக்க....' எனும் நாவல் ஏற்கனவே புத்தகமாக வெளிவந்துள்ளது. 'அவளுக்கும் ஓர் இதயம்' எனும் இதனைத்தொடர்ந்து இன்னும் பல நாவல்கள் நூலுருப் பெறவுள்ளன.

எமது சமுதாயத்தின் அவலநிலை ஒன்றினைப் படம்பிடித்துக்காட்டி, அதற்கான தீர்வையும் இந்நாவல் கூறுகிறது. எமது குடும்பங்கள் அநேகமானவற்றின் உழைப்பாளியாக ஒருவரே இருப்பார். ஏனையோர் அனைவரும், எண்ணிக்கையில் எத்தனை பேராயினும் சரி, அத்தனிமனித உழைப்பிலேயே தங்கியிருப்பர். அது மட்டுமல்லாது அத்தனி உழைப்பாளியின் திறமை, சக்தி என்பவற்றை விமர்சித்து, அவரது வருமானம் போதாது எனக் குறைகாண்போராயும் இருப்பர். இதனால் எண்ணற்ற குடும்பங்கள் பொருளாதாரச் சீரழிவுக்குட்பட்டுத் தலைதூக்க முடியாமல் அல்லலுறுகின்றன.

இந்நிலைமையை மாற்றி ஒரே குடும்பத்திலுள்ள பலர் உழைக்க ஆரம்பித்தால் செழிப்பும், செழுமையும் அங்கு குடிபுகும் என்பதே இந்நாவலின் தாற்பரியம்.

''பதினெட்டுக் கால்களும் கைகளும் எதற்காக ஓய்ந்து கிடக்கணும்? ஏன் எங்க குடும்பம் சும்மா இருந்து பசியுடனும் பட்டினியுடனும் காலம் கடத்தணும்'' எனச் சல்மா கேட்கும் கேள்வியை எமது குடும்பம் ஒவ்வொன்றும் தம்மைத்தாமே கேட்டால் குடும்பம் செழிக்கும்; ஊர் உயரும்; நாடு மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள மிகப்பெரிய முஸ்லிம் கிராமம் காத்தான்குடி. அங்குள்ளவர்களின் பிரதான தொழில்களுள் ஒன்று நெசவு. இந்நெசவுத் தறிகளின் நூலிழைகளோடு பின்னிப்பிணைந்திருப்பது அக்குடும்பங்களின் வாழ்வு ஜீவனோபாயம் முதல் விவாக சம்பந்தம் வரை இத்தொழில் அவர்களுக்கு ஆதார தம்பமாக அமைந்து விளங்குகிறது. ஜுனைதா ஷெரீப் இந்த அனுபவங்களை தத்ரூபமாகச் சித்தரித்து எம் உள்ளங்களையும் காத்தான்குடியோடு உறவாடவைத்துள்ளார். இந்த அருமையான சமூக சித்திரத்தின் மூலம், மட்டக்களப்பு முஸ்லிம் கிராமம் ஒன்றின் மண்வளத்தையும், வாழ்வுக் கோலங்களையும் அவர் அழகுறத் தருகிறார். இதற்காக அவரை வாசகர் நிச்சயம் பாராட்டுவர்.

ஜுனைதா ஷெரீபின் இந்நூலுக்கு நல்லாதரவு தருமாறு உங்களை வேண்டுகிறோம். அதன்மூலம் அவரது இலக்கியப்பணி வளரும்; எமது வெளியீட்டுப்பணி வலுப்பெறும்.

இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்கு அல்லாஹ் அருள் புரியட்டும்!

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தினருக்கும். அழகிய அட்டைப் படத்தை வரைந்துதந்த மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை உப அதிபர் ஜனாப். எம். எஸ். ஏ. அஸீஸ் அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

**எஸ். எச். எம். ஜெமீல்** எம். ஏ.
பணிப்பாளர்.

இஸ்லாமிய நூல்
வெளியீட்டுப் பணியகம்,
சாய்ந்தமருது.
20 - 02 - 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 1 —

கூட்டுக்குள் தூக்கம் போட்டுக்கொண்டிருந்த சைனு சேவல் இறக்கைகளை படக், படக் எனத் தட்டிவிட்டு கூவும் சப்தம் அந்த நிசப்தமான காரிருள் வேளையில் துல்லியமாகக் கேட்டது.

பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கிய நாளிலிருந்து சேவல் கூவும் ஒலிக்கு எழும்பிப் பழக்கப்பட்டுவிட்ட சல்மா அன்றும் கண்களைக் கசக்கியவாறே படுக்கையில் இருந்து எழ முயற்சித்தாள்.

அருகில் படுத்திருந்த கடைசித்தம்பி காலிதீனின் வலது கால் அவளின் வயிற்றில் துவண்டுகிடந்தது. அவனுடைய காலை மெதுவாகத் தூக்கிப் பாயில் வைத்தாள்.

பாயிற் பதுங்கி வாழ்ந்த மூட்டைப்பூச்சிகள் கடித்ததினால் முதுகெல்லாம் ஒரே நமைச்சலாக இருந்தது அவளுக்கு.

தடவிப் பார்த்தபோது திட்டுத் திட்டாகக் கடிபட்ட இடங்கள் தட்டுப்பட்டன. வெண்தளிர் விரல்களால் கடிபட்ட இடங்களைச் சொறியும்போது இதமாக இருந்தது.

அறையெங்கும் ஒரே இருள்.

கடற்கரையில் தோணிகள் அடுக்கடுக்காக வைத்திருப்பது போல அவளைச் சுற்றிலும் அவளுடைய தம்பி தங்கையர் நீட்டியவாறும், முடங்கியவாறும் படுத்துக்கிடந்தனர்.

நேரம் அதிகாலை நாலுக்குமேல் இருக்கலாம். அழுக்கடைந்த அந்த அறையின் ஜன்னலினூடாக தூரத்தே தெரிந்த விடிவெள்ளி நம்பிக்கை ஒளியாக அவளுக்குத் தென்பட்டது.

சைனு சேவல் ஒலியெழுப்பி ஓய்ந்ததைத் தொடர்ந்து வேறு சில சேவல்களும் இறக்கைகளை வேகமாக அடித்தவாறே குரல் எழுப்பத்தொடங்கின.

மனம் ஒன்றித்த நிலையில் அக்குரல்களைக் கேட்கும்போது எவ்வளவு இனிமையாக இருக்கிறது என அவள் தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

அந்த வீட்டில் சைனு சேவல் சல்மாவின் சொத்தாகக் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் ஏனையவர்கள் பெட்டைக் கோழிகளை தங்களுடையவைகளாக எடுத்துக்கொண்டபோது சல்மா மட்டும் சேவலைத் தன்னுடையதாக எடுத்துக்கொண்டாள்.

"உன்னுடைய சேவலாலே உனக்கு எந்தப் பிரயோசனமும் இல்லடி. முட்டை வேண்டுமானால் காசு தந்துதான் நீ எங்க கிட்டே வாங்கணும்" என சண்டை ஏற்படும்போதெல்லாம் அவளுடைய நேர் மூத்த சகோதரி பாத்திமா கூறுவாள்.

"நீ அப்படிச் சொன்னால் உன் பெட்டையை மிதிக்க என் சேவலை விடமாட்டேன். அப்புறம் நீ என் காலில்லே விழுந்து கெஞ்சணுமாக்கும்" என்று சல்மா கூறும்போது பாத்திமா சமாதானத்திற்கு வந்துவிடுவாள்.

தன்னுடைய சேவலைப்பற்றி சல்மாவுக்கு ஒரே பெருமை. ஒரேயொரு சேவலினால் ஒருநாளைக்கு எத்தனை முட்டைகள்! எத்தனை வயிறுகள் இச்சேவலை நம்பியே இருக்கின்றன.

பலருக்கு உதவக்கூடிய அந்தச் சேவலைப்போலத் தானும் இருக்கவேண்டுமென அவளுக்கு எப்போதுமே ஓர் ஆசை.

சல்மா படுக்கையைவிட்டு ஓசைப்படாமல் எழுந்தாள்.

வீட்டு மண்டபத்தின் மூலையில் அவளின் தாய் மரியம் பழைய பாயொன்றில் தன்னை முடக்கியவாறே கிழிந்த பன்னாடையைப்போலத் துவண்டுகிடந்தாள்.

வறுமையென்னும் காலவெள்ளத்தின் கோரத் தாக்குதல்களுக்கு இலக்காகி எலும்பும் தோலுமாகக் கிடந்த மரியம் ஓர் ஆஸ்மா நோயாளி.

மரியத்தின் பாய்க்கு அருகில் நெருப்புப்பெட்டி கிடந்தது. குப்பி விளக்குக்கூட பக்கத்திலேயே இருந்தது.

பாம்பு நழுவுவதுபோல் நடந்துவந்த சல்மா மரியத்தின் அருகில் குந்தி இருட்டில் தடவி நெருப்புப்பெட்டியைத் தேடி எடுத்து 'சர்' என குச்சியைப் பெட்டியின் ஓரத்தில் தேய்த்தாள். வெளிச்சம் மண்டபம் முழுவதும் பரவியது. விளக்கை ஏற்றினாள்.

"ஏன்டி சனியன், விளக்கை இங்கே வைத்துக் கொளுத்துறே? பிள்ளை எழும்பிட்டா கத்தித் தொலைப்பானேடி" கதவோரத்தில் தனது இரண்டு குழந்தைகளையும் அணைத்தவாறு படுத்துக்கிடந்த அவளின் மூத்த சகோதரி மூமினா சிறிப்பாய்ந்தாள்.

மூமினா சற்று கோபக்காரி; பொறாமைக்காரியுங்கூட.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் அவளுடைய கணவனுடன் கோபித்துக்கொண்டு தாய் வீட்டிற்கு வந்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு சீதனமாகப் பேசிய பணம் முழுதும் இன்னும் அவளுடைய மாப்பிள்ளைக்குக் கொடுத்து முடிக்கப்படவில்லை.

பாக்கிப் பணத்தைக் கேட்டு மாப்பிள்ளை ஏதோ கதைக் கப்போக மூமினு இல்லாதது பொல்லாததுகளைக் கதைத்துவிட்டு பிள்ளைகளுடன் வீட்டைவிட்டு வந்துவிட்டாள்.

அவளின் கணவன் பலமுறை அவளை அழைத்துவந்தும் அவள் போகவில்லை. மாப்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிப் பணத்தைக் கொடுத்தால் தான் போவதாக அடம்பிடித்துக் கொண்டு தாயின் வீடே கதியென்று கிடக்கிறாள்.

''ஏன் தாத்தா கோபிக்கிறே? இங்கவைத்து விளக்கைக் கொளுத்தாவிட்டா படுத்துக்கிடக்கிற பிள்ளைகளைக் கடந்து இருட்டிலே எப்படிப் போவது?'' சல்மா சற்றுக் காரமாகவே பதில் அளித்தாள்.

''ஏன்டீ என் பிள்ளைகள் மட்டுமா இங்கே படுக்கிறுங்க? உன் தம்பி தங்கைகளுந்தான் இங்கே கிடங்கிறுங்க'' என்றுள் மூமினு.

''எதுக்காக எழும்புறதுக்கு முன்னுலே கோபிக்கிறே? நான் பரீட்சைக்குப் படிக்கவேண்டியிருக்கு. என்னைத் தொல்லைப் படுத்தாதே!''

''பெரிய படிப்பு! உன் படிப்புக்காக நான் நித்திரை இல்லாம கஷ்டப்படவேண்டியிருக்கு''. மூமினு கரித்துக் கொட்டியவாறே மறுபக்கம் திரும்பிப் படுத்தாள்.

எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கைக் கையில் ஏந்தியவாறே சல்மா அடுத்த அறைக்குச் சென்றுள்.

அங்கு அவளுடைய தகப்பன் தஸ்லீம் சாக்குக்கட்டிலொன்றில் படுத்திருந்தார். அருகே மூத்த சகோதரன் முஸம்மில் பாயொன்றில் முடங்கிக்கிடந்தான்.

அவளுடைய வீடு இரண்டு அறைகளையும் மண்டபமொன்றையும் உள்ளடக்கிய பழையகாலத்து களிமண் வீடு.

அந்தக் குடும்பத்தைப்போலவே திட்டமிடாமல் கட்டப்பட்டிருந்த அந்த வீட்டின் சுவர்கள் பல இடங்களில் கிலம், கிலமாக வெடித்து இருந்தன. கூரைக்கு ஓலை வேயப்பட்டு இருந்தது.

சல்மா குப்பி விளக்கை அறையினுள் கிடந்த மேஜையொன்றின்மேல் வைத்துவிட்டு மண்டபக் கதவைத் திறந்து கிணற்றடிக்குச் சென்றுள். கும்மிருட்டில் தனியே செல்வது சற்று பயமாகத்தான் இருந்தது அவளுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு திரும்பவும் அவள் அறைக்குள் நுழைந்தபோது —

சாக்குக்கட்டிலில் முடங்கிக்கிடந்த அவளுடைய தகப்பன தஸ்லீம் மறுபக்கமாகப் புரண்டு படுத்ததால் ஏற்பட்ட கட்டிலின் கிரிச் ஒலி அந்த நிசப்தமான நேரத்தில் கடூரமாகக் கேட்டது.

''ஏம்மா, சுப்ஹூ பாங்கு கேட்டுட்டா?'' தஸ்லீம் கண்களைத் திறக்காமலேயே மெதுவாகக் கேட்டார்.

''இன்னும் இல்ல வாப்பா. பாங்கு கேட்டதும் எழுப்பி விடறேன். படுத்துத் தூங்குங்க'' சல்மா கூறினாள்.

அவள் கூறியதை தஸ்லீம் கேட்கவில்லை.

மாருக, இரண்டு கைகளையும் நீட்டி கொட்டாவி விட்ட வாறே கட்டிலில் இருந்து எழுந்து சுவர் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த கிழிந்த பழைய துவாயொன்றை எடுத்துத் தோளில் போட்டவாறே கிணற்றடியை நோக்கிச் சென்றார்.

அவருக்கு ஆணும் பெண்ணுமாக ஏழு பிள்ளைகள். சல்மா வில்தான் கூடிய அன்பு.

மூத்தவள் மூமினு. அழகி என்றாலும் கோபக்காரி.

இரண்டாவது மகன் முஸம்மில். முதன்முதலில் அந்தக் குடும்பத்தில் அவர்கள் கண்ட ஆண்பிள்ளை இவன்தான்.

ஆரம்பத்திலேயே அவனுடைய பிடிவாதங்களுக்கு விட்டுக் கொடுத்ததனுல், வளையாமலேயே வளர்ந்துவிட்டிருந்தான்.

இப்போது 'முரடன் முஸம்மில்' என்ற பெயரில்தான் அவனுடைய நண்பர்கள் அவனை அழைக்கின்றனர்.

அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. தொழில் செய் யாமல் வீட்டிலே தண்டச்சோறு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறுன்.

மூன்றுவது பெண் பாத்திமா. படிக்கிறேன் என்ற சாட்டுக்கு பலவருடங்கள் பாடசாலை சென்று பெற்றோரை ஏமாற்றி விட்டு இப்போது வீட்டில் இருக்கிறுள்.

அவள் வயதுக்குவந்து பலவருடங்கள் ஆகிவிட்டன. தஸ்லீமின் வறுமை நிலையால் அவளுக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்க்க அவரால் முடியவில்லை.

எப்போதாவது மரியம் இதைப்பற்றி அவருக்கு ஞாபகப் படுத்திஞல் —

''மூத்தவளின் சிக்கலே இன்னும் முடிந்தபாடாயில்லை. அதற்குள் இது வேறையா?'' எனக்கேட்டு மரியத்தின் எண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தைத் திசைதிருப்பி அவனைத் திருப்திப்பட வைத்து தானும் திருப்திப்பட்டுக்கொள்வார்.

என்றாலும் தன் கையாலாகாத்தனத்தை நினைத்துத் தனக்குள்ளேயே வருந்திக்கொள்வார்.

குடும்பத்தில் நாலாமவள் சல்மா. மூத்தவளைப்போல பெரிய அழகியில்லையென்றாலும் குணமுள்ளவள்.

சென்றவருடம் ஜீ. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்றினாள். சித்தியடைய முடியவில்லை.

பரீட்சைக் காலத்தின்போது மரியத்தின் ஆஸ்மா வியாதி அதிகரித்ததனால் அவளை ஆஸ்பத்திரியில் சேர்க்கவேண்டி ஏற்பட்டது.

சல்மாதான் தாயுடன் கூடவே இருந்து கவனித்தாள். அவளால் பரீட்சைக்கு சரிவரப் போகமுடியவில்லை. இந்த வருடம் பரீட்சை எடுக்க இருக்கிறாள்.

ஐந்தாமவள் றஸானா. அந்தக் குடும்பத்திலேயே மிக அழகானவள்.

''நீமட்டும் பணக்கார வீட்டிலே பிறந்திருந்தால் உன்னை எப்படியெல்லாம் அழகுபடுத்தி ரசிப்பாங்க'' என அடிக்கடி மரியம் அவளைப்பார்த்துக் கூறுவாள்.

றஸானா எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள்.

தஸ்லீம் தம்பதியினருக்குப் பிறந்த ஆறுவதும் பெண்தான். பெயர் பாயிஸா. அவளுக்கு இப்போது வயது பத்து. ஆரம்பப் பாடசாலையொன்றில் படித்துக்கொண்டிருக்கிறாள்.

அடுத்து அவர்களுக்குப் பிறந்தது ஓர் ஆண். கடைக்குட்டி காலிதீன், அவனுக்கு ஐந்து வயது.

தஸ்லீமின் கடந்த ஐம்பதுவருட வாழ்க்கையில் அவருக்கு மிச்சமானவை இந்த ஏழு பிள்ளைச் செல்வங்களும்தான். அடிக்கடி பிள்ளைகளைப் பெற்றதனாலதானோ என்னவோ அவருடைய மனைவி மரியம் எலும்புந் தோலுமாக ஆகிவிட்டிருந்தாள்.

தஸ்லீம் ஒரு நாணயஸ்தர். பொய் சொல்லமாட்டார். மரியத்தைக் கைபபிடித்தபோது 'ஓகோ' என்று சொல்லக்கூடிய வாறு இலலாமல் இருந்தாலும 'பரவாயில்லை' என்ற நிலையில் இருந்தார். மூமினா பிறந்ததும் இருவர் சாப்பிட்டதை மூவர் சாபபிட்டனர். பின் நால்வராகி, வயது தளர்ந்த இந்த நிலையிலும் எந்தவித முன்னேற்றமுமே இல்லாத அவருடைய உழைப்பை நம்பி ஒன்பதுபேர் சாப்பிடவேண்டிய இக்கட்டான நிலைக்கு இன்று ஆளாக்கப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஸ்லீம் இன்னமும் முன்னூறு ரூபா சம்பளத்திலேயே தனக்குத் தெரிந்த ஒரே தொழிலான கணக்குப்பிள்ளைத் தொழிலேயே செய்துகொண்டிருக்கிறார்.

அவருடைய குடும்பத்தில் பல பிரச்சினைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாகத் தீர்ந்துகொண்டிருந்தன. இப்போது அவருக்கு உள்ளது மூன்று முக்கிய பிரச்சினைகள்தான். ஒன்று மூமினுவின் மாப்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்து அவனை அனுப்பிவிடவேண்டும். அடுத்தது வேலையில்லாமல் வீணைக் காலம் கழிக்கும் மூத்தமகன் முஸம்மிலுக்கு ஒரு வேலை பெற்றுக் கொடுக்கவேண்டும்.

மூன்றாவது பலவருடங்கள் குமராக வீட்டில் சிறையிருக்கும் பாத்திமாவை எவனுக்காவது கட்டிவைக்கவேண்டும்.

மூமினுவை நினைக்கும்போது அவருக்கு என்னவோபோல் இருக்கும். எங்கெல்லாமோ கடன்பட்டு அரச உத்தியோகம் செய்யும் ஒருவனுக்கு அவளைக் கட்டிக்கொடுத்துவிட்டு கவலை தீர்ந்தது என நினைத்துக்கொண்டிருக்கும்போது...

அவள் மீண்டும்... புற்றுநோயாக வீட்டுக்கு வந்துவிட்டிருக்கிறாள்.

மூமினுவின் கல்யாணம் நடந்ததே பெரிய வேடிக்கைதான்.

ஜெமீல் —

அவன்தான் மூமினுவின் மாப்பிள்ளை.

அவளின் அழகில் மயங்கி தானகவே திருமணம் கேட்டு வந்தான்.

கல்யாணத்துக்குத் திகதியும் குறித்தபின்னர் யார் வத்தி வைத்தார்களோ, ஐயாயிரம் ரூபா ரொக்கம் தந்தால்தான் இந்தத் திருமணம் நடைபெறும் என மாப்பிள்ளை வீட்டார் கூறிவிட்டனர்.

மரியமும் தஸ்லீமும் தலையில் அடித்துக்கொண்டனர்.

திருமணம் நடைபெறுவது சாத்தியமில்லை என ஊரெல்லாம் பேசிக்கொண்டனர்.

பேசிய திருமணத்தை விடக்கூடாது என உறவினர்கள் ஒத்த முடிவாகக் கூறியதால் எங்கெல்லாமோ கடன்பட்டு மூவாயிரம் ரூபாவை முதலில் கொடுப்பதாகவும் பாக்கியைத் திருமணம் நடைபெற்று ஒரு வருடத்தில் தருவதாகவும் பேசி கல்யாணத்தை முடித்தனர்.

மூமினுவின் திருமணம் நடைபெற்று சில வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. அவள் இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெமீலுக்குச் சேரவேண்டிய பாக்கிப் பணத்தைப்பற்றி அவன் இதுவரை எந்தக் குரலும் எழுப்பவில்லை. மாப்பிள்ளை வீட்டார் மறந்துவிட்டார்கள் என தஸ்லீம் தம்பதிகள் நினைத்துக் கொண்டிருந்தனர்.

சமீபத்தில் ஒருநாள் ரூமினாவுக்கும் ஜெமீலுக்கும் ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது.

கதையோடு கதையாகத் தனக்குக் கைக்கூலியாகப் பேசிய பணத்தை இதுவரை தரவில்லை என ஜெமீல் கூறியிருக்கிறான். கோபக்காரியான ரூமினாவுக்கு இது போதாதா?

''உங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொண்டுவந்து உங்க முஞ்சியில் எறியாமல் திரும்பவும் இந்த வாசற்படியை மிதிக்கமாட்டேன்'' எனக்கூறி குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு பிறந்தகத்துக்கு வந்துவிட்டாள். இப்போது பணம்கேட்டுப் பழி கிடக்கிறாள்.

அன்றன்று வயிறார சாப்பிடுவதற்கே வீட்டில் வழியில்லாதபோது அவளுடைய கடனைத் தீர்ப்பதென்பதைப்பற்றி நினைக்கவே தஸ்லீமால் முடியாமல் இருந்தது.

கிணற்றடியில் முகத்தைக் கழுவி தோளில் கிடந்த டவ்வலைத் துவாயால் துடைத்தவாறே அவர் அறைக்குள் வரும்போது நெற்றியில் சுருண்டுகிடந்த மயிர் சுருளொன்றை விரலால் வருடியவாறு தன்னை மறந்த நிலையில் சல்மா எதையோ வாசித்துக்கொண்டிருப்பதை அவரால் அவதானிக்கமுடிந்தது.

அவருடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சல்மாவையும் அவளுடைய படிப்பையும்தான் அவர் நம்பிக்கொண்டிருக்கிறார். அவள்தான் அவருடைய நம்பிக்கை நட்சத்திரம்.

தன்னை மறந்து சல்மாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த தஸ்லீமின் அவதானத்தை எங்கோ தொலைதூரத்தில் அதிகாலை நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு துல்லியமாகக் கேட்ட பாங்கு ஒலி ஈர்த்தது.

அவர் திரும்பவும் விளக்கொளியில் தெரிந்த சல்மாவின் முகத்தைப் பார்த்தார்.

அந்த முகத்தில் தெரிந்த சொல்லமுடியாத ஒருவித சாந்த சக்தி அவர் எதற்குமே கவலைப்படத் தேவையில்லை எனத் தைரியம் ஊட்டுவதுபோலத் தென்பட்டது.

ஆனால்....

அவர்களின் வேதனைகளின் உச்சக்கட்டமாக அன்று அந்தச் செயல் நடைபெறப்போவதை அந்த அப்பாவி மனிதர் அப்போது அறிவாரா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

சல்மா பாடசாலையை அடையும்போது மணி எட்டாகி விட்டது. பட்டாம்பூச்சிகளைப்போல மாணவிகள் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தனர்.

இன்னும் பாடசாலை ஆரம்பமாகவில்லை.

பாடசாலை அவளின் வீட்டிலிருந்து அரைமைல் தூரம் இருக்கும்.

அன்று காலை உணவாக அவள் எதுவும் சாப்பிடவில்லை. பானைக்குள் கிடந்த பழைய சோற்றை எலுமிச்சம்பழப் புளியுடன் சேர்த்து மரியம் பிசைந்தபோது சல்மாவின் தம்பி தங்கைகளுக்கே அது போதும் போதாதாக இருந்தது.

''ஒருபிடி நீயும் சாப்பிட்டு போம்மா'' என மரியம் எவ்வளவுதான் வற்புறுத்தினும் சல்மா மறுத்துவிட்டாள்.

தனது தம்பி தங்கைகளின் அரை வயிறுவது நிரம்புவது தான் பரிபூரணமாக சாப்பிட்டதுபோன்ற மனநிறைவை தனக்கு ஏற்படுத்துகிறது என அவள் மரியத்தைப் பார்த்துக் கூறினாள்.

பாடசாலைக்குச் செல்லவேண்டிய இரண்டு தங்கைகளையும் அன்று அவள்தான் குளிப்பாட்டிவிட்டாள். அதனால்தான் வீட்டி லிருந்து புறப்படுவதற்கு அவளுக்கு சற்று நேரமாகிவிட்டது.

பாடசாலைக் கேட்டைக் கடந்து வேக வேகமாக அவள் நடந்துகொண்டிருக்கும்போது நெசவு ஆசிரியர் மாஹிர் எதிரே வருவதை அவளால் காணமுடிந்தது.

மாஹிர் அந்தப் பாடசாலையில் நெசவு ஆசிரியர். மாணவி களின் மததியில் பிரபல்யம் பெற்ற ஒருவன். அதிபரின் அன்புக் குப் பாத்திரமானவன். அவ்வூர் போடியார் ஒருவரின் மகன்.

அவன் நீண்டு வளர்ந்திருந்தான். படியப்படிய வாரிவிடப் பட்ட தலைமயிர், ஒற்றைநாடிச் சரீரம் ஆகியன அவனை ஓர் அழக னாக எடுத்துக்காட்டின.

போடியாரின் ஒரே மகனான அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் போட்டி போட்டுக்கொண்டு அவனை மாப்பிள்ளையாக எடுப்பதற்கு முன்வதாக ஊரில் பேசிக்கொண்டார்கள்.

மாஹிரைக் கண்டதும் சல்மாவின் முகம் குப்பென வியர்த்தது. அவன் மாணவிகளிடம் எவ்வளவுதான் அன்பாக நடந்து கொண்டாலும் கண்டிப்பானவன்.

மாணவிகள் நேரத்துக்குப் பாடசாலைக்கு வரவேண்டும்; சுத்தமாக வரவேண்டும் என்பதில் அவன் காட்டும் அக்கறை அதிபருக்கும் பிடித்திருந்தது.

தான் நேரம் பிந்திவருவதை எங்கே அவன் கண்டிருப்பானோ என நினைத்தபோது சல்மாவுக்குப் பயமாக இருந்தது.

மாஹிர் அவளைநோக்கி வந்துகொண்டிருந்தான்.

அவள் நினைத்ததைப்போலவே மாஹிர் அவளருகில் வந்ததும் சற்று நின்று அவளை உற்றுப்பார்த்தான். அவனுடைய பார்வையில் கண்டிப்பு.

சல்மா அந்தப் பார்வையைத் தாங்கமுடியாது மிரளமிரள விழித்துக்கொண்டு இருக்கும்போது அவனே கேட்டான். ''சல்மா ஏன் இவ்வளவு லேட்?''

''சார். வீட்டில் கொஞ்சம் வேலை. அதனால்தான் பிந்திவிட்டது'' அவள் எதையோ கூறிவைத்தாள்.

''வீட்டில் வேலை செய்வதற்கு உன்னுடைய தாத்தா பாத்திமா எங்கே? அவள்தான் படிப்பே வேண்டாம் என இருக்கிறாளே?'' என்றான் மாஹிர்.

அவனுக்கு அவளுடைய குடும்பத்தைப்பற்றி நன்கு தெரியும்.

சல்மா பதில் கூறாமல் கீழே குனிந்தவாறு நின்றாள்.

''சரி சரி, ஆமா, காலையில் சாப்பிட்டாயா? அல்லது வழக்கம்போலவே பட்டினிதானா?'' மாஹிர் மீண்டும் அவளைப் பார்த்துக் கேட்டபோது அவளால் எதுவுமே பதில் சொல்லமுடியவில்லை.

மாறாக அவளுடைய கண்களில் கண்ணீர் பனித்தது தனது குடும்பத்தின் வறுமை நிலையைக் குறித்து மனதினுள் பொருமினாள்.

''சல்மா. ஏழையாய் பிறந்தாலே இப்படித்தான். அரை வயிறும் கால் வயிறுமாக இருந்துகொண்டு தங்களுடைய முன்னேற்றத்துக்காக எதிர் நீச்சல் அடிப்பவர்கள்தான பின்னுக்கு நல்லாயிருக்காங்க. நீகூட நல்லா இருக்கத்தான்போறே. மணி அடிக்கிறது. வேகமாக போ'' அவளிடமிருந்து பதிலையே எதிர்பாராமல் மாஹிர் வேகமாக நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹிர் கூறியது சல்மாவுக்கு ஆறுதலாக இருந்தது.

அவனைப்பற்றி எப்போதுமே அவளுக்கு ஒரு நல்ல எண்ணம். இன்று என்னவோ அந்த எண்ணம் ஒருபடி மேல் சென்றது போல் அவளுக்குப் பட்டது.

பாடசாலைக் கட்டிடத்தை அடைந்தபோது சுவரில் தொங்க விடப்பட்டிருந்த நோட்டீஸ் போர்ட்டைச் சுற்றி பல மாணவிகள் மொய்த்துக்கொண்டிருப்பதை அவளால் காணமுடிந்தது.

கூடிநின்ற கூட்டத்தோடு தானும் ஐக்கியமாகி மெதுவாகத் தலையை உயர்த்தி நோட்டீஸ் போர்ட்டைப் பார்த்தாள். அதில் எழுதப்பட்டிருந்ததை வாசித்ததும் அவளுக்கு தலைசுற்றி மயக்கம் வருவதுபோல் தோன்றியது.

அவளுடைய சிந்தனைகள் எங்கெல்லாமோ சுற்றிப்பறந்தன.

சென்றமுறை பரீட்சை எடுத்து சித்தி அடையாதவர்கள் இம்முறை எடுப்பதற்குவேண்டிய பரீட்சைக் கட்டணத்தை இன்னும் மூன்று தினங்களுக்குள் செலுத்திவிடவேண்டும் என்ற அதிபரின் அறிவித்தல் போர்ட்டில் ஒட்டப்பட்டிருந்தது.

குடும்பத்தின் தற்போதைய நிலை அவளுக்குத் தெரியும். இவ்வளவு சீக்கிரம் அடுத்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுமென அவள் நினைத்திருக்கவேயில்லை.

விண்ணப்பங்கள் கோர இரண்டொரு மாதங்கள் செல்லலாம், அதற்கிடையில் எப்படியாவது மிச்சம்பிடித்து பரீட்சைக் கட்டணத்தைத் தயார்பண்ணிவிடமுடியும் என்று அவள் எண்ணியிருந்தாள்.

இப்போது உடனேயே பணம் தேவைப்படுகிறது மூன்று நாட்களுக்குள் பணம் செலுத்தாவிடின் பரீட்சை எடுக்கமுடியாமல் போய்விடும்.

குடும்பத்தில் உள்ள அத்தனைபேருக்குமே உழைக்கும் ஒரே ஆளான தனது தகப்பனால் பரீட்சைக் கட்டணத்தை ஏற்பாடு செய்யமுடியாது என்று அவளுக்குத் தெரியும்.

கடந்த இரவு.. ஆஸ்மா வியாதிக்கான மருந்து ஒன்று வாங்கிவரவில்லையா? என மரியம் கேட்டபோது தஸ்லீம் கூறிய பதில் அவளுக்கு சடுதியாக நினைவுக்கு வந்தது.

"கடையிலே எனக்கு அதிகப் பற்று இருக்காம். அதனாலே ஒரு சதமுமே தரமாட்டேன் என முதலாளி மறுத்துவிட்டார்".

'மருந்து வாங்க ஐந்து ரூபா கொடுக்கமுடியாத முதலாளி பரீட்சைக்குக் கட்ட பணம் கேட்டால் கொடுக்கவா போகிறார்' என சல்மா நினைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய மூத்த சகோதரன் முஸம்மிலின் நினைவு அவளுக்கு எழுந்தது.

'அந்த முரடன் செலவழிக்கத்தான் பிறந்திருக்கிறானேயன்றி ஒரு கால் காசுகூட உழைக்கத் தெரியாதவன். அவன் குடும்பத்திற்கு ஒரு சுமையே தவிர சுமைதாங்கி அல்ல.'

வகுப்பில் பாடங்கள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

ஆசிரியர்களும் ஆசிரியைகளும் மாறி மாறி வந்துகொண்டிருந்தனர். மாணவிகள் பாடம் நடத்தியவர்களைப் பார்த்து கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

சல்மாவின் மனம் என்னவோ பரீட்சைக் கட்டணத்தை மூன்று நாட்களுக்குள் எப்படிப் பெறலாம் என்பதைப்பற்றியே சிந்தித்தது.

இடைவேளைக்கான பெல் அடித்ததுதான் தாமதம் திறந்திருந்த புத்தகங்கள் அப்படியே இருக்க தாங்கள் கொண்டுவந்திருந்த டிபன் பாக்ஸ்களைத் தூக்கியவாறு மாணவிகள் வராந்தாவை நோக்கி ஓடினார்கள். வகுப்பினுள் சல்மா மட்டுமே எஞ்சியிருந்தாள்.

அவளுக்கு பசியாகவும் தாகமாகவும் இருந்தது. குழாயடிக்குச் சென்று தண்ணீர் குடித்தால் தேவலாம்போன்று இருந்தது.

சல்மா மெதுவாகச் சென்று குழாயின் குமிழைத் திருகினாள். தண்ணீர் சொட்டவில்லை.

'தண்ணீர் விநியோகம் இன்று நடைபெறமாட்டாது' என்று போர்ட்டில் கிடந்த அறிவிப்பு அவளுக்கு ஞாபகம் வந்தது.

கன்டீனுக்குச் சென்று ஏதாவது குடிக்கலாமென்றால் அவளிடம் காசு இருக்கவில்லை.

அவளுடைய சிநேகிதிகள் எல்லோரும் பழமும் கேக்கும் என்று சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் அவள்மட்டும் கன்டீனுக்குச் சென்று தண்ணீர் வாங்கிக் குடிப்பதை நினைக்கும்போது...

எனினும் நாவரட்சி... தாகம்... அவளைக் கன்டீனுக்குள் காலடி எடுத்துவைக்க வைத்தது.

அப்போது –

முன்னாலிருந்து ஒருகை அவள் தோளில் விழுந்து அவளைத் தடுத்து நிறுத்தியது.

சல்மா வேகமாகத் திரும்பிப்பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே —

அவளுடைய உயிர் தோழி நஜீமா நின்றிருந்தாள்.

நஜீமா பணக்காரவீட்டுப் பெண். சென்ற வருடம்வரை அவர்கள் இருவரும் ஒன்றாக ஒரே வகுப்பிலேயே படித்தார்கள். வருடமுடிவில் நடந்த பரீட்சையில் நஜீமா தேறிவிட்டாள்.

இப்போது அவள் வேறு வகுப்பு.

சல்மாவின் குடும்பநிலைபற்றி நஜீமாவுக்குப் பெரிதும் தெரிந்திருந்தது. அவளின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக்கொடுத்து வாழவும் நஜீமா தெரிந்திருந்தாள்.

சல்மாவும், நஜீமாவின் செல்வச் செருக்கால் ஏற்படும் குண இயல்புகளுக்கு ஏற்ப விட்டுக்கொடுத்து வாழப் பழகி இருந்தாள்.

''சல்மா. வா. கூல்றிங்ஸ் ஏதாவது அருந்தலாம்'' கூறியவாறே நஜீமா அவளின் கையைப் பிடித்து அழைத்தாள்.

அவளின் அழைப்பு சல்மாவுக்கு பெருத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

பல மாணவிகள் வாய் நிறைய எதையெதையோ கொதுப்பிக்கொண்டிருக்கும்போது, தான்மட்டும் எப்படி தண்ணீர் கேட்டுக் குடிப்பது என அவமான உணர்ச்சியால் புழுங்கிக்கொண்டிருந்த அவளுக்கு சற்றும் எதிர்பாராதவாறு இப்படியும் ஓர் அழைப்பா? அவள் மனதார ஆண்டவனுக்கு நன்றி கூறினாள்.

இருந்தாலும் எந்த மறுப்பும் இன்றி உடனேயே அந்த அழைப்பை ஏற்க அவளின் தன்மானம் இடம்தரவில்லை.

''வேண்டாம் நஜீமா. இன்னொரு நாளைக்குப் பார்க்கலாம்''

''நீ எப்போதுமே இப்படித்தான். உன்னை இன்று நான் விடப்போவதே இல்லை. வா அப்படி உட்காரலாம்'' சல்மாவின் பதிலையே எதிர்பாராமல் அவளின் கையைப் பிடித்து இழுத்தவாறே அருகில் கிடந்த மேசையை நோக்கி நடந்தாள் நஜீமா.

''என்ன சாப்பிடுகிறாய்?''

''சாப்பிட வேண்டாம். ஏதாவது குடிக்கலாம்''

''உனக்குப் பசியில்லாமல் இருக்கலாம். எனக்குப் பசிக்கிறதே'' என்று கூறியவாறு அருகில் வந்துநின்ற வெயிட்டரிடம் இரண்டு முட்டை ரொட்டிக்காக நஜீமா ஓடர் கொடுத்தாள்.

''ஏன் சல்மா பரீட்சைக்காகப் பணம் கட்டவேண்டுமே. பணத்துக்கு ஏற்பாடு பண்ணிவிட்டாயா?'' சாப்பிட்டவாறு நஜீமா கேட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் சொல்வது தர்மசங்கடமாக இருந்தது சல்மாவிற்கு.

எதையாவது சொல்லிச் சமாளிக்கலாம் என்று நினைத்து ''இன்றுதானே நோட்டீஸ் போர்ட்டில் அறிவித்தல் கிடக்கிறது. இனித்தான் ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றாள்.

இடைவேளை முடிந்ததற்கான பெல்சத்தம் கேட்டது. தோழிகள் பிரிந்தனர்.

இடைவேளையின் பின்னர்கூட பரீட்சைக்கான பணத்தை எப்படிக் கட்டுவது என்பதைப்பற்றியே சல்மா சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

பாடசாலை முடிவடைந்ததும் புத்தகங்களை வாரிச் சுருட்டிக் கொண்டு வகுப்பறையைவிட்டு வெளியேறிய சல்மா வராந்தையால் நடந்துவரும்போது அவளெதிரே நெசவாசிரியர் மாஹிர் நடந்துவருவதைக் காணமுடிந்தது.

அவள் அவனை நெருங்கியபோது கனிவான புன்னகையொன்றை மாஹிர் அவளை நோக்கி வீசினான்.

சல்மாவும் பதிலுக்குச் சிரித்துக்கொண்டே தொடர்ந்து நடந்தாள். என்ன நினைத்துக்கொண்டாளோ ஒரு விசித்திர எண்ணம் மின்னல் கீற்றென அவள் மனதில் தோன்றி மறைந்தது.

தனது தகப்பனால் பரீட்சைக் கட்டணத்தை உரிய நேரத்தில் தரமுடியாதுபோனால் மாஹிரிடம் கடனாகப் பெறமுடியாதா என்பதுதான் அந்த எண்ணம்.

சிந்தனைப் பிழம்பாக அவள் வீடு சென்றபோது, அங்கு அவளுக்குக் காத்திருந்த ஆச்சரியம் அவளை 'ஓ'வென வாய்விட்டு அலறவைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 3 —

சல்மா வீட்டை அடைந்தபோது, வழமையாகப் பிள்ளைகளின் இரைச்சலால் கலகலப்பாக இருக்கும் அந்த வீடு அன்று மட்டும் ஏன் அப்படி மைய வீடாக மாறிவிட்டிருந்தது ?

அவள் வாசற்படியில் காலடி வைத்தபோது, எதிரே மூமினு தென்பட்டாள். சல்மாவைக் கண்டதும் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு மடியில் கிடந்த குழந்தையின் தலையைத் தடவிக்கொடுத்தவாறிருந்தாள்.

சல்மா தான் கொண்டுவந்த புத்தகங்களை மேசையில் போட்டுவிட்டுத் திரும்பும்போது பாத்திமா எதிரே நின்றாள். அவள் முகம் சோம்பி இருந்தது.

சல்மா கிணற்றடியில் இருந்து திரும்பும்போது வாசலில் நின்ற பாயிஸாவும் றஸானுவும் ஆளை ஆள் உற்றுப் பார்த்தவாறு சோர்ந்துபோய் நிற்பதை அவளால் அவதானிக்கமுடிந்தது.

அந்த வீட்டில் அப்படி என்ன நடந்துவிட்டது ?

சல்மா முகத்தைத் துடைத்தவாறே குசினிக்குள் சென்றாள்.

அவளின் தாய் மரியம் பலகைக் குத்தியொன்றில் குந்திக் கொண்டு நாடியைக் கையால் தாங்கியவாறு எதையோ யோசித்துக்கொண்டிருந்தாள்.

அவளின் கண்களில் இருந்து பொல பொலவெனக் கண்ணீர் முத்துக்கள் வீழ்ந்துகொண்டிருந்தன.

அந்த வீட்டின் மயான அமைதியையும் வீட்டில் உள்ளவர்களின் முகங்களில் வடியும் சோக உணர்வையும் சல்மாவால் ஜீரணிக்கமுடியவில்லை.

அதற்கு என்ன காரணம் என அவளால் இன்னும் அறியவும் முடியவில்லை.

அவள் சோகமே உருவாக இருந்த தாய் மரியத்தின் அருகில்சென்று அங்கு கிடந்த குத்தியொன்றில் உட்கார்ந்தாள்.

அவளின் வயிற்றுக்குள் திடீரென ஒலித்த உறுமல் பக்கத்தில் இருந்த மரியத்தின் செவிகளுக்குக் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மாவுக்கு அவ்வளவு பசி.

மரியம் மெதுவாகக் கையைநீட்டி சோற்றுப் பானைக்குள் மிகுதியாகக் கிடந்த தீய்ந்த சோற்றை வழித்து எடுத்து தகரப் பீங்கான் ஒன்றில் போட்டு சல்மாவின் முன்னால் வைத்தாள்.

கூடவே முருங்கை இலைச் சுண்டல்;

சல்மா சோற்றைப் பிசைந்து ஒரு பிடியை அள்ளிக் கையில் வைத்துக்கொண்டு ''ஏம்மா வீடெல்லாம் சோர்ந்துபோய்க் கிடக்குது? ஏதும் நடந்துச்சா?'' எனக் கேட்டாள்.

மரியம் கண்களில் பனித்த கண்ணீரைத் துடைத்தவாறு ''ஏன் உனக்கு ஒன்றுமே தெரியாதா?'' என்றாள்.

''இல்லேம்மா. நான் இப்போதுதானே வந்தேன். ஏம்மா, என்ன நடந்தது?'' சல்மா பதறியவாறு கேட்டாள்.

சோற்றுப்பிடி இன்னும் அவளுடைய கையிலேயே இருந்தது.

''உன் வாப்பாவை வேலையிலிருந்து விலக்கிட்டாங்க'' கூறிவிட்டு மரியம் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

சல்மாவுக்கு மரியம் கூறியது நாராசமாகச் செவிகளில் பாய்ந்தது.

''என்ன...?'' கேட்டவாறே கையில் இருந்த சோற்றுப் பிடியை அப்படியே தட்டுக்குள் போட்டாள்.

பரீட்சை எழுதவேண்டும் என்ற எண்ணம், உத்தியோகம் பார்க்கவேண்டும் என்ற ஆசை எல்லாமே காற்றோடு கலந்து பறப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது அவளுக்கு.

''உம்மா. என்னமா சொன்னே? வாப்பாவை வேலையி லிருந்து விலக்கிவிட்டாங்களா? அப்படி என்னதான் நடந்தது?'' சல்மா மீண்டும் மரியத்தைப் பார்த்துக் கேட்டாள்.

அவளுக்கு தாய் சொன்னதை நம்பவேமுடியாமல் இருந்தது.

மரியம் கண்களைத் துடைத்துக்கொண்டே அவள் கணவன் தஸ்லீம் வீட்டுக்கு வந்ததும் அவளிடம் கூறிய அத்தனையையும் சல்மாவிடம் ஒப்படைத்தாள்.

* * *

அன்றுகாலை தஸ்லீம் தான் கணக்கெழுதும் கடையை அடையும்போது நேரம் எட்டைத் தாண்டிவிட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் போவதற்கு முன்னரே கடை திறக்கப்பட்டுப் பையனொருவன் அலுமாரிகளுக்குச் சாம்பிராணி புகை பிடித்துக் கொண்டிருந்தான்.

அது இரும்புப்பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு கடை.

கடைக்கு இரண்டு பங்காளிகள். இருவரும் தூரத்து உறவினர்கள். மூத்தவர் பெயர் சுல்தான். இளையவர் சுபைர்.

சமீப காலமாக இளைய முதலாளி சுபைரைப்பற்றி தஸ்லீமுக்கு அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்லை.

மற்ற பங்குதாரருக்குத் தெரியாமல் சுபைர் அடிக்கடி கடையில் பணம் களவாடுவது தஸ்லீமுக்குத் தெரியவந்தது.

இப்படித்தான் ஒருநாள்...

பொருட்கள் கொள்வனவுக்காக கொழும்புக்கு எடுத்துச் சென்ற பணத்தில் ஐயாயிரம் ரூபாவை அபேஸ் பண்ணிவிட்டு அப்பணத்துக்குப் பொருள் கொள்வனவு செய்ததாக ஏடுகளில் எழுதுமாறு சுபைர் தஸ்லீமைக் கேட்டார்.

அந்தத் துரோகச் செயலுக்கு உடந்தையாக இருக்க தஸ்லீம் விரும்பவில்லை.

இதை மூத்தவர் அறிந்தால் அந்த மோசடிக்குத் தானும் உடந்தையாக இருந்ததாக நினைப்பாரே என அவர் நினைத்தார்.

தன்னுடைய எஜமானர்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என அவர் எண்ணினாலும், இத்தகைய மோசடிக்கு உடந்தையாக இருப்பது என்பதை நினைக்கும்போது அவருடைய விசுவாச உள்ளம் பெரிதும் வேதனைப்பட்டது.

"வேண்டாம் சின்னமுதலாளி. தயவுசெய்து அந்தக் கணக்கை எழுதச்சொல்லி என்னை வற்புறுத்தாதீங்க. பெரியவர் அறிந்தால் நானும் உங்க மோசடிக்கு உடந்தையாய் இருந்ததாக நினைப்பார்" தஸ்லீம் மிகப் பவ்யமாகக் கூறினார்.

சின்ன முதலாளிக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"சீ... பேயும் பேயும் உன்னிடம் இதைக் கூறினேனே" சீறிப்பாய்ந்தவாறே தஸ்லீம் இதுவரையுமே கேட்டிராத வார்த்தைகளால் ஏசித் தீர்த்தார் சுபைர்.

"இதற்கு உனக்கு சரியான பாடம் படிப்பிக்காவிட்டால் என் பெயரையே மாற்றிக்கொள்வேன்" என இளையவர் கூறிய போது ஏன்தான் இந்த வம்பில் மாட்டிக்கொண்டோமோ என இருந்தது அவருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பெரியவரிடம் கூறிவிடலாம் என அவர் பல முறை சிந்தித்தார்.

அப்படிக் கூறினால் பங்குதாரர்களின் குடும்பங்களில் பகை ஏற்பட்டு... ஆளுக்காள் பிரியவேண்டி ஏற்பட்டால்...?

தனது எதிர்காலம் பாழாய்ப்போயிடுமோ...? இதனால் அவர் எதுவும் சொல்லவில்லை.

அன்று —

தஸ்லீம் தன்னுடைய மேஜையில் அமர்ந்து கையோடு கொண்டுவந்த வெற்றிலைச்சுருளைப் பிரித்து வாய்க்குள் போடச் சென்றபோது....

விற்பனையாளர்களில் ஒருவனான மீரான் ஓடிவந்து ''தஸ்லீம் நானா, முதலாளி உங்களைப்பற்றி ஒருமணி நேரமா விசாரிச்சுக் கொண்டிருக்கிறார். உடனடியாகக் கூட்டிவரச்சொன்னார்'' என்று பரபரப்புடன் கூறினான்.

கையில் எடுத்த வெற்றிலைச்சுருளை அப்படியே வைத்து விட்டு எழுந்து நின்ற தஸ்லீம் பெரிய முதலாளியின் அறையை நோக்கி நடந்தார்.

பெரியவர் நேர்மையானவர் என்றாலும் - முன்கோபி.

பெரியவரின் அறைக்குள் சென்ற தஸ்லீம், தான் வந்து விட்டதை அறிவிப்பதற்காக மெதுவாகக் கனைத்தார்.

''என்ன? இப்பத்தான் வரவா?'' என்றார் பெரியவர் தலையை உயர்த்திப் பார்த்தவாறே.

அவருடைய தொனியில் ஒலித்த ஏளனம் வழக்கத்துக்கு மாறானதாக தஸ்லீமுக்குத் தெரிந்தது.

''ஆமாங்க. கொஞ்சம் பிந்திட்டன்'' குழைந்தவாறே தஸ்லீம் கூறினார்.

''எப்பத்தான் நேரத்துக்கு வந்தீங்க? கொஞ்சம் இடம் கொடுத்தா எல்லோருமே இப்படித்தான்'' எனப் பெரியவர் கூறியதும் தஸ்லீமுக்கு திக் என்றது.

கடந்த இருபது வருடங்களாக இரண்டொரு சந்தர்ப் பங்களைத்தவிர ஏனைய நாட்களில் அவர் நேரத்துக்கே கடைக்கு வந்துவிடுவார். 'இதையெல்லாம் மறந்துவிட்டு முதலாளி இப் படிக் கதைக்கிறாரே! எல்லாப் பணக்காரர்களும் இப்படித்தானோ? நன்றி என்பதே இவர்களுக்குத் தெரியாத ஒரு சொல்லா?' என நினைத்தார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவரின் இத்தகைய பேச்சுக்களைக் கேட்டுப் பழக்கப் பட்ட அவருக்கு இது ஒன்றும் அவ்வளவு பெரிதாகத் தோன்ற வில்லை.

''மீரான் கூப்பிட்டதாகச் சொன்னன்'' என்றார் குழைந்த வாறே.

''ஆமா. கணக்கைச் செக்பண்ணும்போது பார்த்தேன். இந்த எழுபத்துமூன்றும் றிசீட்டைக் காணவில்லை. அதிலே வந்த பணமும் காசுப்புத்தகத்தில் பதியப்படவில்லை. வேண்டுமென்றே றிசீட்டை யாரோ கிழிச்சி எடுத்திட்டாங்க. நீங்க பார்க்க வில்லையா ?''

அவர் இப்படிக் கேட்டதும் தஸ்லீமுக்கு உதறல் எடுத்தது. கணக்கை எழுதும்போது எப்படி இந்தத் தவறு நிகழ்ந்தது ? றிசீட்டையும் காணவில்லையாம். காசையும் காணவில்லையாமே...

அப்படியென்றால்......?

''என்ன முழிக்கிறீங்க ? எவ்வளவு நாளா இந்த விளை யாட்டு ? எங்கிட்டே கேட்டா நான் தந்திருக்கமாட்டேன்...? ஒரு றிசீட்டா. இதுவரை மூன்று றிசீட்டுகளைக் கண்டுபிடித்திருக் கிறேன்'' பெரியவர் பொரிந்துதள்ளினர்.

தஸ்லீமுக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது.

'நான் காசை எடுத்ததாகக் கூறுகிறரே. என்னல் எப்படி எடுக்கமுடியும் ? கெஸியர் பணத்தைப் பெறுகிறன். என்னிடம் புத்தகங்கள் பதிவுக்கு வருகின்றன. சரிவரப் பார்க்காமல் பதிந்தது என்னவோ என் கவனக்குறைவுதான். அதற்காக நான் காசை எடுத்தேன் எனக் குற்றம் சுமத்துகிறரே. ஒருவேளை கெஸிய ருடன் நானும் சேர்ந்து இந்த மோசடி செய்ததாக நினைக்கி றரோ...? கெஸியர் ரொம்ப நல்லவனுச்சே ! அவனைத்தானே பெரியவர் தன் மகளுக்கு முடிக்க இருக்கிறர்.'

தஸ்லீம் சிந்தித்தார்.........

''என்ன பேசாமல் நிக்கிறீங்க ? செய்கிறதையும் செய் துட்டுத் திருட்டுமுழி வேறையா ?''

பெரியவர் இரைந்தார்.

''நான் எங்கங்க பணத்தைத் தொட்டேன் ? கணக்குகளைப் பதியும்போதுதான் ஏதோ கவனக்குறைவாகப் போய்விட்டது'' கூறியவாறே தலையைச் சொறிந்தார்.

''கவனக்குறைவு ! இந்த மோசடியை நீங்கதான் தனியே செய்திருக்கிறீங்க. உங்களுக்கு வீட்டிலே பிரச்சினைகள் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். அதற்காக என் பணத்தைத் திருடனுமா? இதுக்குத்தான் சொல்வாங்க பெருத்த குடும்பத்திலே உள்ள ஆட்களை வேலைக்குச் சேர்க்கக்கூடாதென்று''

தஸ்லீமுக்கு இன்னும் ஆச்சரியம் நீங்கியதாக இல்லை.

'இவர் என்ன கதைக்கிருர்? கடந்த இருபது வருட சேவையிலே ஒரு சதத்தைத்தானும் நான் தொடவில்லையே! என்னுடைய பொறுப்புக்கள், கஷ்டங்கள் என்னுடன். அவைகளை வேறு யாருடனும் நான் இதுவரை பகிர்ந்துகொள்ளவில்லையே! அப்படியிருக்க நானே மோசடி செய்ததாகத் துணிந்து கூறு கிருரே!' தஸ்லீம் மீண்டும் சிந்தித்தார்.

''நீங்க என்ன சொல்றீங்க? நாஞ மோசடி செய்தேன்?'' அவர் முணுமுணுத்தார்.

''பின்னே நாஞ செய்தேன்? கெஷியர் வெளியே போகும் போது நீங்கதானே பணம் வாங்குவீங்க?'' பெரியவர் கேட்டார்.

''ஆமா. அதுக்கும் இதுக்கும் என்னங்க?''

''இந்த மோசடி நடைபெற்ற நாட்களிலே நீங்களே பணத்தைப் பெற்றுக்கொண்டு றசீட்டின் பிரதியை அப்படியே தெரியாமல் கிழித்து இருக்கிறீங்க. அந்த றசீட்களை காசுப்புத்தகத்தில் பதியாமல் விட்டிருக்கிறீங்க. இப்ப புரியுதா?''

தஸ்லீமுக்கு இப்போது எல்லாமே புரிந்தது. கெஷியர் இல்லாத வேளைகளில் சின்ன முதலாளியும் பணம் பெறும் வேலைகளைச் செய்வது வழக்கம். அவர்தான் இந்த மோசடியைச் செய்திருக்கிருர்.

சின்ன முதலாளி தஸ்லீமைப் பார்த்து அன்ருெருநாள் கூறியது அவரின் ஞாபகத்துக்கு வந்தது.

'இதற்கு உனக்கு சரியான பாடம் கற்பிக்காமல் விடமாட்டேன்'

சின்ன முதலாளி பற்றைக்குள் பதுங்கிக்கிடக்கும் ஒரு நச்சுப்பாம்பு. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொத்திவிட்டாரே!

தஸ்லீமுக்கு வாய்விட்டு அழவேண்டும்போலிருந்தது. மோசடிக்கு உடந்தையாகாத அப்பாவியான தன்னை இப்படி வஞ்சித்துவிட்டாரே! தன்னை நம்பியே கிடக்கும் அத்தனை வயிறுகளிலும் அடித்துவிட்டாரே.

தஸ்லீம் தான் ஏமாந்துவிட்டதை உணர்ந்தார். உண்மையைப் பெரியவரிடம் கூறிஞல் அவர் நம்புவாரா என்ன? அப்படித்தான் கூறிஞலும் அதனை ருசுப்படுத்த சாட்சி இருக்கா? ஏழையின் சொல் அம்பலம் ஏறப்போகிறதா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மொதலாளி. நான் உண்மையிலேயே இதைச் செய்ய லீங்க. சத்தியமா எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க. வேண்டுமானு எந்தப் பள்ளிவாசலிலேயாவது சத்தியம் பண்ணித் தாறேங்க'' கூறியவாறு குலுங்கிக் குலுங்கி அழுதார்.

''நீயும் உன் சத்தியமும்! உன்னைப்போல ஆட்கள் ஆயிரம் சத்தியங்கள் பண்ணுவீங்க. உங்களாலே சத்தியத்துக்கே மதிப் பில்லாமல்போயிட்டு. பிள்ளைகுட்டிக்காரனென்னு வைச்சிருந்தா இப்படிச் செய்துவிட்டாயே. பரவாயில்லை. இப்போதாவது கண்டுபிடிச்சுட்டேன். இந்தாரும். இதிலே கையெழுத்துப் போட் டிட்டு நீ போகலாம்'' என்றவாறு ஏற்கனவேயே எழுதி வைக்கப் பட்டிருந்த பத்திரமொன்றைத் தூக்கி தஸ்லீமின்முன் போட்டார்.

''நீங்க என்னை எங்கே போகச்சொல்றீங்க?'' தஸ்லீம் குழைநதவாறு கேட்டார்.

''உம்மை வேலையிலிருந்து நீக்கி இருக்கிறேன்'' முதலாளி சீறிப்பாய்ந்தார்.

தஸ்லீமுக்குத் தலை சுற்றியது. அவருக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. மெதுவாக பக்கத்தில் கிடந்த மேசையில் கையை ஊன்றித் தன்னைத் தாங்கிக்கொண்டார்.

இத்தனை வருடங்களாக அவரையும் அவரை நம்பி இருந்த வர்களினதும் சுமைகளை அவர் தாங்கினர்......

இப்போது......

அவரை வேறு யாரோ தாங்கவேண்டியிருக்கிறதே !

''முதலாளி, நான் செய்யாத தவறுக்காக என்னைத் தண் டிக்கிறீர்களே... பல வருடங்களாக நான் உங்ககிட்டே வேலை செய்தேனே. அந்த நன்றிகளையெல்லாம் .....'' தஸ்லீம் இப்படிக் கூறிக்கொண்டிருக்கும்போது பெரியவர் இடைமறித்தார்.

''அந்த நன்றிகளுக்காகத்தான் உம்மைப் பொலிஸில் கொடுக்காமல் விடுகிறேன். கையெழுத்துப் போட்டுட்டு வெளியே போம்''

தஸ்லீம் ஏழை என்றாலும் தன்மானம் உள்ளவர். தான் செய்யாத தவறென்றுக்காகத் தன்னை இப்படிக் கண்டிக்கும் முதலாளியிடம் இன்னும் வேலை செய்வதா என நினைத்தது அந்த ஏழையின் உள்ளம்.

மேசையில் கிடந்த பத்திரத்தைச் சடாரென எடுத்து வாசித் துப்பார்த்தார். அதில் அவராகவே கடையில் இருந்து விலகுவ தாகவும் அவருக்கு வரவேண்டிய சகல பணத்தையும் பெற்றுக் கொண்டதாகவும் எழுதப்பட்டு முத்திரையும் ஒட்டப்பட்டு இருந் தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையில் பத்திரத்தைப் போட்டுவிட்டு அவர் முதலாளியைப் பார்த்தார்.

''முதலாளி! இருபது வருஷமா உங்ககிட்டே வேலே செய்தேனே. என்னேச் சும்மாவே அனுப்பப்போறீங்களா?'' என்று கேட்டார்.

''நீர் செய்த வேலேக்கு உம்மை வெற்றிலே வைத்துத்தான் அனுப்பனும். உம்மிட கணக்கில அதிகப் பற்று முந்நூறு ரூபா இருக்கு. அதை நீர் தரத்தேவல''

''இருபது வருட வேலேக்கு முன்நூறு தானுங்களா?''

''இந்த இருபது வருஷமும் இப்படியான மோசடிகளேச் செய்து எவ்வளவு எடுத்திரோ? உம்மைப் பொலிஸில் கொடுக்காமல் விட்டேனே எனச் சந்தோஷப்படும். கையெழுத்துப் போட்டுத் தொலேயும்''

தஸ்லீம் சிந்தித்துப்பார்த்தார். அவர் கையெழுத்துப் போடாமல் விடலாம். ஆனுல், முதலாளி பொலிஸுக்கு டெலிபோன் செய்து தன்னே அவர்களிடம் பாரம் கொடுத்துவிட்டாராஞல் விசயம் ஊரெல்லாம் பரவிவிடும். அவர் ஓர் ஏழை. பல குமர்களே வைத்துக்கொண்டிருப்பவர். பொலிஸ், கோடு எனப் போய்விட்டால் மானம் போவது ஒருபக்கம். அதிலிருந்து விடுபடுவதற்கு செலவழிக்கவேண்டியது இன்னெருபக்கம். பணத்துக்கு யாரிடம் போவது?

மீண்டும் அவருடைய தன்மானம் தலேதூக்கியது. இரக்கமேயற்ற ஒருவனிடம் இந்தச் சொற்பப் பணத்துக்காகக் கெஞ்சுவதா? அதைவிடப் பட்டினி கிடக்கலாமே!

தஸ்லீம் மேசையில் கிடந்த பத்திரத்தை எடுத்து முத்திரையின்மேல் ஒப்பமிட்டார்.

''முதலாளி. இந்தாங்க பத்திரம். நான் போறேங்க. நீங்க நல்லா இருங்க'' கூறியவாறு மறுபக்கம் திரும்பி விடுவிடென நடந்து கடைக்குள் வந்தார்.

அங்கு மீரான் நின்முன்.

''தஸ்லீம் நாரு. நான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு தான் நின்றேன். நீங்க ஏன் அப்படி நடந்துக்கிட்டீங்க?'' மீரான் கேட்டான்.

''எப்படி நடந்துக்கிட்டேன்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுதான். ஏதோ காசை விளையாடிட்டீங்க என்றுரே''

சில விநாடிகள் அமைதி.

''மீரான், நீயும் என்னைச் சந்தேகிக்கிறுயா?'' என்றார்.

''அதுதாங்க எனக்கும் ஆச்சரியமாக இருக்கு. உங்களைப் போய் சந்தேகிச்சு விலக்கிவிட்டாரே! ஒரு விளக்கம், விசாரணை எதுவும் வேணும்? இந்தப் பணக்காரங்களே இப்படித்தான். வேலையை முடிக்கிற வரையும் தலையைத் தடவுவாங்க. அது முடிந்ததும் தலையில குட்டுவாங்க. எதுக்கும் கவலைப்படாதீங்க. ஆண்டவன் இருக்கான்'' என மீரான் கூறியபோது தஸ்லீமின் கண்களில் கண்ணீர் பெருகி முகத்தில் செடியாக வளர்ந்திருந்த தாடியை நனைத்தது.

''நான் வருகிறேன் மீரான்'' கூறியவாறே தனது சால்வையை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கடையிலிருந்து வெளியே வந்தார். அந்தக் கடைக்கும் அவருக்கும் இருந்த சொந்த பந்தங்களை அப்படியே உதறிவிட்டு அவர் போகிறுரா என்ன?

தஸ்லீம் முகத்தைத் தொங்கப்போட்டவாறே நடைப் பிணமாக நடந்துகொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

மரியம் தன் கணவனுக்கு நடந்த சம்பவத்தை சல்மா விடம் கூறிவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''உம்மா, வாப்பாவுக்கு வேலையில்லாம போயிட்டா இந் தக் குடும்பத்திலே இருக்கிற அத்தனை பேருக்கும் யாரும்மா சோறு போடுவது?''

சல்மா அழுதவாறே கேட்டாள்.

அதுதான் அவளுக்கும் தெரியவில்லை. முந்நூறு ரூபாவுக் குள் கால்பட்டினி அரைப்பட்டினியாக... சிலநேரங்களில் முழுப் பட்டினியாகவே காலம் கழித்தார்கள். இனிமேல்...?

''ஏம்மா, வாப்பா திரும்பவும் முதலாளிகிட்டே போய் சின்ன முதலாளியைப்பற்றிச் சொல்லி விசாரணை நடத்துமாறு கேட்கமுடியாதா? மனம் மாறி ஒருவேளை திரும்ப சேர்த்தாலும் சேர்த்துக்குவாங்க'' கூறியவாறே சோற்றுத்தட்டைத் தள்ளி வைத்த இடத்தில் அகஸ்மாத்தாகப் பார்வையைச் செலுத்தினாள்.

சாப்பிட்டுவிட்ட மிகுதியைத்தான் தள்ளிவைத்திருக்கிறாள் என்று நினைத்துப்போலும், எங்கிருந்தோ வந்த பூனையொன்று சரசரவென தட்டிலிருந்த சோற்றைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது.

பூனை சோற்றைச் சாப்பிடுவதை அவள் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். சிலவினாடிகளில் வேறு பக்கமிருந்து இன்னுமொரு பூனை துள்ளிவந்து தனக்கும் பங்கு தருமாறு உறுமிக்கொண்டிருந்தது.

சல்மாவின் வீட்டிலும் சோற்றுப் பருக்கைகளைக் காண்பது இனிமேல் அபூர்வம்.

அந்த வீட்டிலுள்ளவர்களும் இப்படித்தான் சோற்றுக் காக அடிபிடிப்படுவார்களோ?

''சரிசரி. போட்டுட்டு எடும்மா. என்ன செய்யலாம்? ஒரு முதலாளி போனா இன்னொரு முதலாளி. அதற்காக இப்படியே இடிந்துபோய் உட்காருவதா? எழும்பும்மா'' சல்மா ஆறுதல் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆமா. இன்று திங்கட்கிழமை. கூப்பன்கடையிலே அரிசி எடுப்பதற்கு இன்றுதானே கடைசிநாள். அரிசி எடுத்தாகிவிட்டதா? அல்லது துக்கத்திலே அதுவும் மறந்தாகிவிட்டதா?'' சல்மா திடீரென கேட்டாள்.

''இல்லடி சல்மா. நான் மறந்தேவிட்டேன்'' மரியம் பதறியவாறே கூறினுள்.

''சரிதான். வாப்பாவுக்கு வேலை போச்சு. நீ கூப்பன் அரிசி எடுப்பதை மறந்துட்டு அப்படியே அழுதுகொண்டிரு. எல்லோருமே பட்டினி கிடப்போம்''

சல்மா மரியத்தின் பதிலுக்குக் காத்துக்கொண்டிருக்காமல் பழைய மரப்பெட்டியொன்றினுள் வைக்கப்பட்டிருந்த கூப்பன் புத்தகங்களை எடுத்து பாயிஸாவிடம் கொடுத்து அவளைக் கூப்பன் கடைக்கு விரட்டிவிட்டாள்.

பாயிஸா பெட்டியும், கையுமாகத் தெருவில் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற சல்மா, திடீரெனப் பாம்பை மிதித்தவளைப்போலப் பதறினுள்.

அவளைக் கூப்பிட்டாள்.

பாயிஸா நடந்துவரும்போது அவள் அணிந்திருந்த பாவாடையில் இடுப்புக்குக் கீழ் உள்ள ஒரு பகுதியைக் கையால் பொத்தியவாறு நடந்துவருவதை சல்மாவால் அவதானிக்கமுடிந்தது.

பாயிஸா சல்மாவின் அருகில்வந்து நின்றுள்.

''பாயிஸா. பாவாடை பின்னுக்குக் கிழிந்து இருக்கு... தெரியல்ல. பாவாடையை மாற்றிக் கட்டு''

பாயிஸா மௌனமாக நின்றுள்.

''ஏன்டி பேசாம நிக்கிறே? பாவாடையை மாற்றி உடு.''

பாயிஸா வேண்டா வெறுப்பாகப் பாவாடையில் தான் கூட்டிப்பிடித்திருந்த பகுதியைக் கீழே விட்டாள். அங்கும் பெரிய ஓட்டை.

''எப்படி ராத்தா மாற்றி உடுக்கிறே?''

''உங்கிட்ட வேற பாவாடை இல்லியா?''

''போன பெருநாளைக்குத் தைச்ச சீத்தைப் பாவாடை மட்டும்தான் இருக்கு. அதை இந்த பெருநாளைக்கு போட வைச்சிருக்கேன். அதை இப்ப போட்டா ஊத்தைபடும். அப்புறம் பழைய பாவாடைன்னு பிள்ளைகள் எல்லாம் கேலி செய்வாங்க''

அவளுடைய பிடிவாதத்தில் நியாயம் இருப்பதாகச் சல்மாவுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் நிலைமையைப் பார்த்து 'ஓ'வென அழவேண்டும் போல் இருந்தது சல்மாவுக்கு.

''கொண்டா. தைச்சுத்தாறன்''

பாயிஸாவின் பாவாடையைத் தைத்துக் கொடுத்தாள் சல்மா.

கையால் தைத்துக்கொடுத்த பாவாடையை அணிந்தவாறு பெட்டியையும் தூக்கிக்கொண்டு அவள் ஆடிஆடி நடந்துபோவதை நிலையடியில் நின்றவாறே சல்மா நீண்டநேரம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அப்போது —

''உம்மா .. இங்கே வாம்மா. வாப்பாவை வந்து பாரேன்'' எனப் பதறியவாறு றமீஸ் கூப்பிடுவது சல்மாவின் காதுகளில் நாராசமாக விழுந்தது.

வாப்பா படுத்திருந்த அறைக்குள் சல்மா ஓடினாள். மரியமும் பாத்திமாவும் வந்தனர்.

தலையைக் கையால் தாங்கிப்பிடித்தவாறு தஸ்லீம் பாயொன்றில் இருந்தார். தலை கீழ்நோக்கி இருந்தது.

பாயிலும் களிமண் தரையிலும் ஒரே இரத்தம்.

தஸ்லீமின் நாசியிலிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாக வடிந்துகொண்டிருந்தது.

''என்னங்க. என்ன நடந்தது?'' கேட்டவாறே மரியம் அவர் அருகில்சென்று தலையைப் பிடித்துக்கொண்டாள்.

''ஒண்ணுமில்ல மரியம். ஏதோ நாசாலே ரெத்தம் வருது''.

சல்மா பழைய சீலைத்துண்டொன்றை எடுத்துவந்து அவருடைய மூக்கையும் முகத்தையும் துடைத்துவிட்டாள்.

''உம்மா. வாப்பாவை யாரிடமாவது டாக்டரிடம் காட்டுவோம்''. பாத்திமா கூறினாள்.

''வேண்டாம்மா. டாக்டரிடம் காட்டவேண்டாம். எனக்கு இருந்துட்டு எப்போதாவது இப்படி வரும்''.

தஸ்லீம் கூறும்போதே திரும்பவும் சிறிது இரத்தம் நாசியால் கொட்டியது.

''உம்மா. பாத்தீங்களா? திரும்பவும் ரத்தம். டாக்டரிடம் காட்டுவதுதான் நல்லது''. மீண்டும் பாத்திமா கூறியபோது, அப்படிக் காட்டுவது தேவையில்லை என தஸ்லீம் மறுத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சல்மா. கொஞ்சம் தண்ணி கொண்டுவந்து தலையிலே ஊற்று. ரத்தம் நின்னுடும்'' என்றார் தஸ்லீம்.

கடைக்குட்டி காலிதீன் ஓட்டமாக ஓடி குவளையொன்றில் தண்ணீர் கொண்டுவந்தான்.

மூமினு அதைவாங்கி அவரின் தலையில் சொட்டுச் சொட்டாக விட்டாள்.

இரண்டொரு நிமிடங்களில் இரத்தம் தடைப்பட்டது.

''வாப்பா, இரத்தம் இப்போ தடைப்பட்டுட்டு. இருந்தும் நீங்க ஒரு டாக்டரிட்ட காட்டுவதுதான் நல்லது'' என்றாள் சல்மா.

''டாக்டரிடம் காட்டுவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லே. ஆனா, டாக்டரிடம் போக யாரிட்ட காசு இருக்கு? உங்க வாப்பா இப்போ வைரம் இல்லாத ஒரு மரம். நான் இருந்தும் ஒன்றுதான். இல்லாவிட்டாலும் ஒன்றுதான். உழைப்பில்லாம நான் எதுக்குமா வாழணும்? மௌத்தா போயிடலாமான்னு தோணுது. என் உயிருக்குயிரா வளர்த்த உங்களையெல்லாம ஒரு கல்யாணம் காட்சியென்று செய்து பார்க்காம, அம்பானை விட்டுட்டு நான் எப்படிமா மௌத்தாகுவது? என்ன செய்வேன்? கல்யாணமா? உங்களுக்கெல்லாமா? ஆண்டவனே! உங்களுக்குக் கல்யாணம் செய்யணும் என்று நினைத்தாவது பார்க்கிறேன....''

வாய்க்கு வந்தமாதிரி எதையெதையோ கதைத்தவாறு தஸ்லீம் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

தொடர்ந்து சில வினாடிகள் அமைதியாக இருந்தவர், ''பாத்திமா, ஆண்கள் அழக்கூடாது என சொல்வாங்க. அப்படி அழுதா கோழையாம். நான் அழுகிறேன். நான் அழுகிறேன். நான கோழையமா. நான் பெண்பிள்ளையாகிட்டேன். உங்களைப் போல நானும இனி வீட்டிலேயே இருக்கப்போகிறேன்''

மேலும் விசித்து விசித்து அழுதார்.

தஸ்லீமுக்கு இரத்தம்வருவது முற்றாகத் தடைப்பட்டுவிட்டது. அவர் சுற்றுமுற்றும யாரையோ தன கண்களால் தேடினார்.

''வாப்பா யாரைத் தேடுறீங்க?'' பாத்திமா கேட்டாள்.

''எங்க உன் நாநா முஸம்மிலைக் காணல்ல. இந்த வீட்டிலே இத்தனை விசயங்கள் நடநதிருக்கு. ஆளையே காணோம.''

யாருமே பதில் கூறவில்லை.

முஸம்மிலைப்பற்றி அவர்கள் யாருக்கும் எந்தக் கவலையும் இல்லை. அவனும அவர்களைப்பற்றி சட்டை செய்வது இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குடும்பத்தில் அவனைப்பற்றி சற்றுச் சிறப்பாகக் கதைப்பவள் மூமினா மட்டும்தான்.

அவளுக்கு அடுத்தாக அவன் பிறந்ததனால் ஆரம்பத்தி லிருந்தே அவன்மேல் அவளுக்கு அன்பு.

முஸம்மிலைப் பெற்ற மூன்று நான்கு மாதங்களில் மரியம் அடுத்த குழந்தையை வயிற்றில் சுமக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது.

இதனால் அவனை வளர்க்கும் பொறுப்பு விரும்பியோ விரும் பாமலோ மூமினாவின் தலையில் சுமத்தப்பட்டது.

இருவரும் ஒன்றாகவே விளையாடுவார்கள். ஒன்றாகவே சண்டை பிடிப்பார்கள்.

முஸம்மிலின் தொல்லைகளைத் தாங்கமுடியாமல் அவனுடன் அடிக்கடி கோபித்து, அவள் ஒரு கோபக்காரியாகவே வளர்ந்து விட்டிருந்தாள்.

உலகமே அறியாத சிறுமி ஒருத்தியினால் வளர்க்கப்பட்ட முஸம்மில் முரடனாக வளர்ந்துவிட்டிருந்தான்.

''அவன் எங்கேயாவது தெரு சுற்றிக்கொண்டிருப்பான். நேரத்துக்கு நேரம் அவனுக்கு வீட்டிலே சாப்பாடு கிடைத்தால் சரி. வீட்டிலே நடப்பவைகளைப்பற்றி அவனுக்கு என்ன கவலை?'' வெறுப்பாக மரியம் கூறினாள்.

''இல்லேம்மா, யாரையோ பார்க்கப்போவதாக எங்கிட்ட சொல்லிவிட்டுத்தான் அவன் சென்றான்.''

மூமினா அவனுக்காக வக்காலத்து வாங்கினாள்.

அப்போது வெளியில் ஏதோ இரைச்சல் கேட்டது. வரவர சத்தம் அதிகரித்தது.

இருவர் பலத்த வாக்குவாதம் புரிவதுபோல் கேட்டது.

அந்தக் குரல்களிலொன்று முஸம்மிலினுடையது.

குரல்வந்த திசையைநோக்கி சல்மா ஓடினாள்.

அவளைத்தொடர்ந்து அறையினுள் இருந்த மற்றவர்களும் ஓடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

வீட்டிற்கு வெளியே முஸம்மில் யாருடனே வாக்குவாதப் பட்டுக்கொண்டிருப்பதைக் கேட்டு அனைவரும் ஓடினர்கள்.

மரியம் மட்டும் போகாமல் தஸ்லீமுக்கு அருகில் நின்றள்.

''ஏன் மரியம் நீமட்டும் நிக்கிறே? உன் மகன்தான் சத்தம் போடுருன். நீயும் போய்ப் பார்''

தஸ்லீமும் வெளியே போக எத்தனித்தார்.

''வேண்டாம். நீங்க இருங்க, நான் பார்த்துட்டு வாறேன்'' மரியம் வெளியே வந்தாள்.

முஸம்மிலைச் சுற்றி ஒரே கூட்டம். பெரியவர்களும் சிறிய வர்களுமாகப் பலர் நின்றனர்.

தூரத்திலிருந்து வேறு சிலர் ஓடிவந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தை விலக்கியவாறே சல்மா உள்ளே நுழைந்தாள்.

முஸம்மிலும் வேறு ஒருவனும் ஆளுக்காள் கட்டிப்பிடித்த வாறு பலத்த சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

முஸம்மில் எதிரியைக் கீழேபோட்டு உதைத்தான்.

அனைவருமே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். யாருமே அவர்களை விலக்க முயலவில்லை.

''நாநா, அவனை விடு. அவனை விட்டுடு!'' கூறியவாறே சல்மா முஸம்மிலைப் பிடித்து இழுத்தாள்.

கடைக்குட்டி காலிதீனும் அவளுக்கு ஒத்துழைத்தான்.

முஸம்மில் விட்டதாக இல்லை.

''ஏன் பார்த்துக்கொண்டு நிக்கிறீங்க? வந்து விலக்குங்க'' கூட்டத்தைப் பார்த்து சல்மா கத்தினள்.

ஒருவன் முன்னுக்கு வந்தான். அவனைத்தொடர்ந்து வேறு பலர் வந்தனர்.

சண்டை பிடித்தவர்களை விலக்கிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸம்மிலை கையைப்பிடித்து வீட்டுக்கு அழைத்துவந்தனர்.

அவனுடைய தலைமயிர் கலைந்துகிடந்தது. சேர்ட்டிலும் சாரனிலும் ஒரே அழுக்கு. முகத்திலும் கைகளிலும் பல இடங்களில் கீறல்கள்.

''ஏன்டா ... என்ன நடந்தது?'' தஸ்லீம் கேட்டார்.

''அயோக்கிய ராஸ்கல். அவனை சும்மா விட்டிருக்கவே கூடாது. அவனைக் கொன்னுருக்கணும். காவாலிப்பயல் .....'' முஸம்மில் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போனான்.

''நிறுத்தடா, என்ன நடந்தது?'' தஸ்லீம் அதட்டினார்.

''வேறு என்ன நடந்தது? எல்லாம் நம்ம பாயிஸா .'' அவன் கூறி முடிக்குமுன் மரியம் பதறியவாறே ''என்ன நம்ம பாயிஸாவுக்கு என்ன நடந்தது?'' என்றாள் பரபரத்தவாறே.

''அவளுக்கு ஒண்ணும் இல்ல. பாயிஸா கூப்பன் கடைக்கு நடந்துபோனாள் இல்லியா. அவளுடைய பாவாடையிலே ஒரு பெரிய பிய்த்தல். அதைப் பார்த்துட்டு அந்த காவாலிப்பயல் என்னமோ சினிமாப் பாட்டைப் பாடி அவளைக் கேலிபண்ணி னான். நான் அதைக் கண்ணுட்டேன். ஏன்டா என் தங்கச்சியைக் கேலிசெய்தே என்று கேட்டா சண்டைக்கு வாறான். நான் விடு வேனா? செம்மையா கொடுத்தேன்''

சல்மாவுக்கு இதைக் கேட்டதும் அதிர்ச்சியாக இருந்தது.

பாவாடையிலே இருந்த பிய்த்தல் இரண்டையும் அவள் தைத்துக்கொடுத்தாளே. அப்படியென்றால் இந்தப் பிய்த்தல் ..! ஒருவேளை தைத்துக் கொடுத்ததன் பின்னர் ஏற்பட்டிருக்கலாம்.

''பாவாடை கிழிந்திருந்ததைக் கண்டபின்னும் நீ அப் படியே அவளைப் போகவிட்டாயா?'' சல்மா கேட்டாள்.

''ஆமா. அவளை கடைக்கு அனுப்பிவிட்டுட்டுத்தான் அவ னுடன் சண்டை பிடித்தேன்''

முஸம்மில் பெருமையாகக் கூறினான்,

''பார்த்தீங்களா உம்மா. கிழிந்த பாவாடையுடன் அவ ளைப் போகவிட்டுட்டு இவன் சண்டைபிடிக்கப் போயிருக்கிறான். இவனுக்குத் தெரியாமல் அவளைப் பார்த்து எத்தனைபேர் கேலி செய்தார்களோ? இவன் சரியான ஆளென்றால், அவளைக் கேலி செய்தது யார் யாரென விசாரித்து அவர்கள் அத்தனைபேருடனும் அல்லவா சண்டைபிடிக்கப் போயிருக்கணும்'' என்றாள் சல்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடி ஒரு மாதிரியா கதைக்கிறே? அவனைப் போக விடாம நான் என்ன செய்வது? அவனைத் தலையிலே வைத்து சுமந்திருக்கணும் என்கிறாயா?''

''பைத்தியக்காரா. நீ சரியான ஆளென்று அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் பெட்டியை வாங்கிக்கொண்டு நீ கூப்பன் கடைக்குப் போயிருக்கணும். அதை விட்டுட்டு சண்டை பிடித்தாராம்''

''என்னடி சொல்றே? நான் கூப்பன்கடைக்குப் போவதா? என்னைப்போல ஒரு வாலிபன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கூப்பன் கடைக்குப் போவதா? ஆக்கள் என்னடி சொல்லமாட்டாங்க?''

''ஏன் போனா என்ன? தங்கச்சி கிழிஞ்ச பாவாடையோட தெருவிலே போறது மட்டும் உனக்கு ஒண்ணுமில்ல. பெட்டியைத் தூக்கிக்கொண்டு கடைக்குப் போவது ஒன்றுதான் உனக்கு வெட்கமா? அவளிடம் அந்தக் கிழிந்த பாவாடையைத்தவிர வேறு ஒன்றும் இல்லையாக்கும் என ஊரார் கதைப்பதைவிட, நீ பெட்டியைத் தூக்கிக்கொண்டு போவதுதான் உனக்குப் பெரிசாப் போச்சா? எல்லோருடைய பசியையும் தீர்ப்பதற்கு அரிசி வாங்கப்போவது உனக்கு அவமானம். ஆனா, தங்கச்சி மறைக்க வேண்டிய உறுப்புக்கள் வெளியே தெரிய கிழிந்த பாவாடையுடன் தெருவில் திரிவதுமட்டும் உனக்கு அவமானம் இல்லை. பெரிய ரோசக்காரன்''

சல்மா பொரிந்து தள்ளினாள்.

''வாயை மூடடி. பாவம். அவன் அடிபட்டுவந்து நிக்கிறான். காயங்களுக்கு ஏதாவது போட்டுவிடாம நீ பாட்டுக்கு எதையோ கதைக்கிறே. உனக்கு மட்டும்தாண்டிம்மா இந்த வீட்டிலே மூளை இருக்கு. வாடா நாம போகலாம்'' மூமினா கூறிவிட்டு அவனை அழைத்துக்கொண்டு குசினியை நோக்கிச் சென்றாள்.

''உதவாக்கரைகள்!'' என்ற வார்த்தையை சல்மா மெதுவாக முணுமுணுத்தாள்.

* * *

புயல் அடித்து ஓய்ந்ததுபோன்ற அமைதி. இடைக்கிடை மூமினாவின் குழந்தைகளின் முனகல்கள்.

வீட்டிலுள்ள அனைவரும் படுத்துவிட்டனர், சல்மாவைத் தவிர!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மா புரண்டு புரண்டு படுத்தாள். அவளால் நித்திரை கொள்ள முடியவில்லை. அன்று நடந்த அத்தனை சம்பவங்களையும் அவள் மனம் அசைபோட்டது.

சல்மாவுக்கு நித்திரை வருவதாக இல்லை. அன்று நடை பெற்ற நிகழ்ச்சிகள் அவளுடைய எதிர்காலத்துக்குச் சவாலாக அமைந்துவிட்டனவே.

பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டும் என்பதை நினைத்துப் பார்த்தாள். பரீட்சை எடுக்கத்தான் வேண்டுமா? தொடர்ந்து படிப்பதுதானா?

பரீட்சை எடுப்பதாயின் மூன்று நாட்களுக்குள் பணம் கொடுத்தாகவேண்டும். தொடர்ந்து படிப்பதானால் அவளுக்குப் பணம் செலவழிப்பது யார்? வாப்பாவுக்கு வேறு எங்கேயாவது வேலை கிடைக்குமா? அல்லது கிடைக்காமலேயே போய்விடுமா? முஸம்மில் ஏதாவது வேலை தேடிக்கொண்டான் என்றால்... சிந்தனைகளால் அவள் குழம்பிப்போனாள்.

இத்தனை வருடங்களும் படித்துவிட்டு, பலனை அடையப் போகும் வேளையில் நிறுத்திவிடுவதா? பாத்திமா படித்துவிட்டு வீட்டில் வாளாவிருந்து எதைக்கண்டாள்? அவளுடைய கதையும் பாத்திமாவினுடையதைப் போன்றுதான் முடியவேண்டுமா?

'இல்லை. நான் படிக்கத்தான்போகிறேன். சென்ற வருடம் நான் சித்தியடையாமல்விட்டது அகஸ்மாத்தாக நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. இந்த வருஷம் அப்படியெல்லாம் நடக்க நான் விடவேமாட்டேன்' என அவள் உள்ளம் உறுதியுடன் கூறியது.

பரீட்சை எடுக்கப் பணம்? அதைமட்டும் ஒழுங்கு செய்து விட்டால் எப்படியாவது தொடர்ந்து பாடசாலைக்குச் சென்று படித்துவிடலாம் வாப்பாவுக்கு ஏதாவது வேலை கிடைக்கத்தான் செய்யும்.

அவளுடைய சிந்தனையில் நஜீமா தலைநீட்டினாள். அவளிடம் கடனைக் கேட்கலாமா? அது எப்படி முடியும்? கடன் கேட்டால் அவள் என்ன நினைக்கிறாளோ....? ஏற்கனவே புத்தகமொன்று வாங்குவதற்காக அவளிடம் கடன்பட்டது ஞாபகத்துக்கு எழுந்தது. அக்கடனைத் திருப்பிக் கொடுக்குமட்டும் அவள் அனுபவித்த வேதனைகள் சொல்லமுடியாதது.

'அப்போ... பணத்துக்கு என்ன செய்வது?'

நெசவு ஆசிரியர் மாஹிரின் எண்ணம் எழுந்தது. அவரிடம் கேட்டுப்பார்த்தால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மாவின் குடும்பநிலைபற்றி அவனுக்கு நன்கு தெரியும். அவளுடைய நல்வாழ்க்கையில் அவனுக்கு அக்கறை இருப்பதும் அவளுக்குத் தெரியும்.

மாஹிரை நினைக்கும்போது அன்று காலை அவன் கூறிய வார்த்தைகள் மின்னல் கீற்றென அவள் மனதில் நிழலாடின. 'தங்களுடைய முன்னேற்றத்திற்காக எதிர்நீச்சல் அடிப்பவர்கள் தான் பின்னுக்கு நல்லா இருக்காங்க. நீகூட நல்லா இருக்கத்தான் போறே.' இப்படி மாஹிர் கூறியது சல்மாவுக்கு இனித்தது.

'நான் கேட்டால் அவர் மறுக்கவேமாட்டார். நான் கேட்டதாக யாரிடமும் சொல்லவும்மாட்டார்.'

பரீட்சைக்குக் கட்டுவதற்குத் தேவையான பணத்தை மாஹிரிடம் கேட்பது என்ற தீர்மானத்துக்கு அவள் வரும்போது வேறொரு எண்ணம் எழுந்தது.

'நான் அவரிடம் பணம் கடனைகப் பெற்றால் வாப்பா என்ன நினைப்பார்? வாப்பா தன்மானம் உள்ளவர். வேறொருவரின் தயவில் தன் மக்கள் வாழ்வதை அவர் விரும்பமாட்டார்.'

மாஹிரிடம் பணம் கடனைகப் பெறமுடிந்தால் நஜீமாவிடம் பெற்றதாகச் சொல்லிவிடவேண்டியதுதான். அவள் எப்படியாவது பரீட்சை எடுத்தே ஆகணும். அதற்காக இத்தகைய ஒரு பொய்யைச் சொல்லியே ஆகவேண்டுமெனில் அதற்காக அவள் வருந்தப்போவதில்லை.

'மாஹிரிடம் எப்படிப் பணம் கேட்பது? அவரிடம் நேராகவே கேட்கலாமா? அது எப்படி முடியும்? ஒருவேளை பணம் தர இயலாது என அவர் மறுத்துவிட்டால் நான் அதைத் தாங்கிக் கொள்வேனா?

'நான் பணம் கடன் கேட்கப்போக, அவர் என்ன கேள்விகளைக் கேட்பாரோ? என் குடும்ப விசயங்களைப்பற்றி அவர் கேட்டாலும் கேட்கலாம். என் குடும்பநிலையைப்பற்றி நான் எதற்காக ஓர் அன்னியனிடம் கூறவேண்டும்?' அவளால் நேராக மாஹிரிடம் கடனைப் பணம் கேட்பது என்னவோபோல் இருந்தது.

அப்படியென்றால் அவரிடம் எப்படித்தான் கடன் கேட்கலாம்?

தனக்குப் பணம் தேவைப்படுவதற்கான காரணங்களைக் காட்டி ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து கேட்கமுடியாதா?

கடிதம் எழுதுவது என்பதை நினைக்கும்போது அவளுக்கு அருவருப்பாக இருந்தது. கடிதங்களைப்பற்றி அவள் பல கதைகள் கேள்விப்பட்டிருக்கிறாள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் ஒரு கடிதம் எழுத... பதிலாக அவர் ஒரு கடிதமும் எழுதி பணமும் அனுப்ப, நான் அதற்கு நன்றி தெரிவித்து எழுத .. நான் கடிதம் கொடுப்பதை யாராவது அறிந்து ஏதாவது கதையைக் கட்டிவிட்டால்...?'

கடிதம் எழுதுவது என்ற எண்ணத்தை அவள் கைவிட்டாள்.

அவள் அருகே படுத்திருந்த தாய் மரியம் புரண்டு படுத்தாள்.

அப்போது —

''உம்மா...'' சல்மா முணுமுணுத்தாள்.

''சல்மா நீ இன்னும் நித்திரை கொள்ளலியா?''

''இல்லேம்மா. நித்திரை வருவதா காணும்''

''எனக்கும் அப்படித்தான். இனி எப்பத்தான் நிம்மதியா நித்திரை கொள்ளப்போறேனோ?'' மரியம் குலுங்கி அழுவது சல்மாவிற்குக் கேட்டது.

அன்று பகல் அந்த வீட்டில் இடி இடித்து, மின்னல் மின்னிப் பேய்க்காற்றும் மழையுமாகப் பெய்து ஓய்ந்திருந்தது. ஆனால் .. இப்போது நிஜமாகவே திடீரென எங்கோ வானம் முழங்கும் ஓசை கேட்டது.

தொடர்ந்து பல இடிமுழக்கங்கள்.

குளிர்காற்றுப் பலமாக வீசியது.

காற்று நின்றதும், 'சரசர'வென மழை கொட்டியது. குளிர்காற்று மீண்டும் பேயாக வீசியது. ஊ...ஊ... என்ற சத்தத்துடன் மழை நீரை வீசி எறிந்தது.

''உம்மா. இதாலே போத்திக்கோ'' தான் போர்த்திக் கொண்டிருந்த போர்வையை நீட்டினாள்.

''உனக்கு ?''

''எனக்கு எதுக்கும்மா. நீதான் நோயாளி! போத்திக்கோ.''

நேரம் நீண்டுகொண்டிருந்தது அவளது சிந்தனைகள் வளர்ந்துகொண்டிருந்தன.

மாஹிரிடம் பணம் கேட்பதற்கான புதுவழி ஒன்று அவளது சிந்தனையில் தட்டுப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 6 —

சாஜுச் சேவல் இறக்கைகளைத் தட்டியவாறு கூவும் சப்தம் கேட்டு சல்மா கண்விழித்தாள். கண்கள் எரிந்தன.

அவளின் எண்ணப்படி இரண்டொரு மணி நேரமே அவள் நித்திரை செய்து இருக்கவேண்டும்.

கிணற்றடிக்குச் சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு மேசையில் வந்து அமர்ந்தாள். இன்னும் தூக்க மயக்கமாகவே இருந்தது.

சாக்குக் கட்டிலில் படுத்திருந்த தஸ்லீம் கண்களைத் திறக்காமலேயே ''சல்மா. எழும்பிட்டியா'' என்றார்.

''ஓம் வாப்பா. நீங்க படுங்க. பாங்கு சொன்னதும் எழுப்பி விடறேன்''

''வேண்டாம்மா. நானே முழிச்சுட்டு படுக்கிறேன். எனக்கு விடிய விடிய நித்திரையே வரல்ல. இனிமேலா வரப்போகுது?''

பாவம்! விடிய விடிய எத்தனை வேதனைகளை மனதில் அனுபவித்தாரோ? மனதில் மகிழ்ச்சி இருந்தால்தானே சுகமான நித்திரை வரும்!

சல்மா கொப்பியொன்றை விரித்துவைத்து தான் கற்பனை செய்துவைத்திருந்த கதையை எழுதத்தொடங்கினாள்.

பொழுது பொல பொலவென விடிந்தது. பறவைகளின் ஒலிகள், வாகனங்களின் நடமாட்டங்கள் .....

கதையை எழுதி முடித்ததும் அதை வாசித்துப்பார்த்தாள். திருப்தியாக இருந்தது.

அந்தக் கதையில் தன்னையே ஒரு பாத்திரமாகப் படைத்து படர்க்கையில் எழுதியிருந்தாள்.

நேற்று அவளின் வீட்டில் நடைபெற்ற சம்பவங்களைச் சுருக்கமாக எழுதிப் பின்வருமாறு முடித்திருந்தாள்.

'அத்தனை சம்பவங்களும் நடைபெற்றபின்னர் தன் எதிர் காலத்தைப்பற்றிய எண்ணக்கோட்டை தகர்ந்துபோய்விட்டதாக அந்தப் பேதை நினைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பரீட்சை எடுக்கவோ அவளிடம் பணம் இல்லை. யாரிடமாவது கேட்பதற்கு அவளுடைய தன்மானம் இடம்தரவில்லை. இந்த நிலையில் அவள் செய்வதறியாது திகைத்துக்கொண்டிருக்கிறாள்.'

சல்மா திரும்பவும் கதையை வாசித்தாள். இதை வாசித்ததும் மாஹிர் தன்னுடைய நிலையைப் புரிந்துகொள்வார் என நினைத்தாள்.

★ ★ ★

சல்மா பாடசாலையை அண்மித்தபோது வழக்கத்துக்கு மாறாக ஏனோ அவளுடைய கால்கள் நடுங்கின.

மாஹிர் எங்கேயாவது தென்படுகிறாரா எனக் கண்கள் தேடின. அவனை எங்குமே காணவில்லை.

கதையை அவனிடம் கொடுக்குமட்டும் அவளுக்கு கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பதுபோன்ற உணர்வே ஏற்பட்டது.

பாடங்கள் நடந்தன.

இடைவேளை நேரம். மாணவிகள் வகுப்புகளிலிருந்து துள்ளிக்குதித்து வெளியே ஓடினர்.

சல்மா வகுப்பிலேயே இருந்தாள். மாஹிர் வராந்தையில் வரமாட்டாரா எனப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இடைவேளை முடிவதற்கான பெல் ஒலிக்க இரண்டொரு விநாடிகளே இன்னும் இருந்தன.

தூரத்தே வராந்தையில் மாஹிர் தனியாக நடந்துவருவது அவளுக்குத் தெரிந்தது. கதை எழுதப்பட்டிருந்த கொப்பியைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டாள்.

கைகள் கனப்பதுபோலிருந்தன. கால்கள் நடுங்குவதுபோல் ஒரு பிரேமை.

கொப்பியுடன் வராந்தாவுக்கு வந்தாள். மாஹிர் அவளுக்கருகில் வந்ததும் நடையின் வேகத்தைக் குறைத்து அவளருகில் நின்றான்.

''சார். உங்களைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்''

''என்ன சல்மா?'' கனிவாகக் கேட்டான்.

''ஒரு பத்திரிகையிலே கதைப் போட்டியொன்று நடக்கப் போகுதாம். நானும் ஒரு கதை எழுதியிருக்கிறேன். தயவுசெய்து திருத்தித்தருகிறீர்களா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹிர் அடிக்கடி பத்திரிகைகளுக்குக் கதை எழுதுபவன். இலக்கிய உணர்ச்சி உள்ளவன்.

''அதற்கென்ன. திருத்தித்தருகிறேனே'' கதைக் கொப்பியைக் கையில் வாங்கியவாறே, ''நீயும் கதை எழுதத் தொடங்கிவிட்டாயா?'' என்ருன்.

''இது என்னுடைய முதல் கதை சார்''

''உனக்கு இதைத் திருத்தி எப்போது தரவேண்டும்?''

''கதை அனுப்பவேண்டிய கடைசித் தினம் நாளை மறுநாள். நாளைக்கே தந்துவிட்டீர்களானல் நன்றியாக இருக்கும்'' கூறியவாறே பார்வையைக் கீழே தாழ்த்தினுள்.

''நாளைக்கே தருகிறேன்'' கூறிவிட்டு மாஹிர் நடையைத் தொடர்ந்தான்.

★ ★ ★

பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாக மரியத்திற்கு மீண்டும் ஆஸ்மா நோய் ஏற்பட்டுவிட்ட செய்தி றஸாஞ மூலமாக சல்மாவுக்குத் தெரியவந்தது. புத்தகங்களை மேசையில் எறிந்துவிட்டு அடுத்த அறைக்குள் புகுந்தாள்.

மரியம் சீலை ஒன்ருல் தன்னைப் போர்த்திக்கொண்டிருந்தாள். கர்ர்... கர்ர்... சத்தம் அலையாக எழுவதும் அடங்குவதுமாகப் போராட்டம் நடத்தியது.

''உம்மா. என்னம்மா செய்யுது?'' மரியத்தின் அருகில் உட்கார்ந்தபடி சல்மா கேட்டாள்.

''ராவு பெய்த மழைக்கு இப்படி ஏற்பட்டுட்டு; கொஞ்ச நேரத்திலே சரியாய் போயிடும். நீ சாப்பிட்டாயா?''

''இல்லே''

''றஸாஞவும் சாப்பிட்டிருக்கமாட்டாள். ரொட்டி சுட்டு வைத்திருக்கேன். இருவருமாய் போய் சாப்பிடுங்க...''

❁ ❁ ❁

மாலை ஐந்து மணி இருக்கும்.

பாத்திமா கூப்பன்கடை அரிசியில் சொறபத்தை சுளகில் போட்டுப் புடைத்துக்கொண்டிருந்தாள்.

சல்மா பாயிஸாவின் கிழிந்த பாவாடையைத் தைத்தபடி இருந்தாள்.

வெளியே சென்றிருந்த தஸ்லீம் வருவது தெரிந்தது. அவருடைய நடை தளர்ந்து காட்சியளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஸ்லீம் வாசலுக்கு வந்ததும் சல்மா மரியாதைக்கா எழுந்து நின்ருள்.

தஸ்லீம் அவளை உற்றுப்பார்த்தார். அவருடைய பார்வையில் கோபமும், பரிதாபமும் கலந்து காணப்பட்டன.

''சல்மா, நாம செய்யாத ஒன்றுக்காக நம்மை யாராவது குற்றம்சாட்டிஞல் அதை எதிர்த்துப் போராடணும் இல்லையா ? நான் நேற்று ரொம்ப பிழை செய்துட்டேன் என் புத்தியை செருப்பாலே அடிக்கணும். அப்பதான் எனக்கு பாடம் பிடிபடும்'' விரக்தியாகக் கதைத்தார்.

''வாப்பா, என்ன சொல்றீங்க? என்ன நடந்தது?'' சல்மா கேட்கும்போது, ஒரு பிள்ளையை இடுக்கியவாறு மற்றது பின் தொடர ரூமிஞ அங்கு வந்தாள்.

''வேறு என்ன நடக்கும்? எல்லாம் அந்த சின்னமுதலாளி சுபைரோட வேலே. அவனுடைய மோசடிக்கு நான் இணங்காததால, என்னை வேலையால நீக்கினதும் காணும, நான் மோசடி பண்ணினதாலே விலக்கிவிட்டதாகத் தெருத்தெருவா பறை அடிச்சித்திரிகிருன்''.

''உங்களுக்கு எப்படித் தெரியும் ?''

''வேலேகேட்டு அஞ்சாறு கடைகளுக்குப் போனேன். அவங்களுக்கெல்லாம் நான் விலகியது முன்கூட்டியே தெரிஞ்சி இருக்கு. வேலைதர மறுத்துட்டாங்க. இந்த ஊரிலே நான் கணக்குப்பிள்ளை வேலேயே செய்யமுடியாம ஆக்கிப்போட்டாங்க. பாவிக'' கூறியவாறே கேவிஞர்.

''அழாதீங்க வாப்பா''

குரல்வந்த திசையை தஸ்லீம் நோக்கிஞர். அங்கு ரூமிஞ நின்ருள். ஏஞே தெரியாது அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''என்னசொன்னே ? அழக்கூடாதா ? ஏன் கூடாது? மாடு மாதிரி நீங்களெல்லாம் பொறுப்பில்லாம இருக்கிறப்ப நான் அழக்கூடாதா ?''

இதைக் கேட்டதும் ரூமிஞவுக்குக் கோபம் வந்தது. அவர் தன்னைத்தான் குத்திக்காட்டுகிருர் என்று அவளுக்குப் புரிந்தது.

இதஞல் சிறிதுநேரம் தஸ்லீமுக்கும் ரூமிஞவுக்குமிடையே வாக்குவாதம் எழுந்து ஓய்ந்தது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் சல்மா நேரத்தோடு பாடசாலைக்கு வந்தாள். கடந்த இரவு அவளால் சரிவர நித்திரைகொள்ள முடியவில்லை. தன் குடும்பநிலை குறித்து தான் எழுதிய கதையை வாசித்துவிட்டு மாஹிர் ஆசிரியர் என்ன நினைப்பார் என்பதைப்பற்றியெல்லாம் அவள் அடிக்கடி சிந்தித்தவாறிருந்தாள்.

மாஹிரைச் சந்தித்து பணம்பற்றிய அவனுடைய முடிவை அறிவதில் அவள் எவ்வளவு அங்கலாய்த்தாளோ, அதைவிடக் கூடுதலாக அவனைச் சந்திப்பதையும் அவள் வெறுத்தாள். 'என் வாழ்க்கையை முன்னேற்ற எதற்காக ஓர் அந்நியனிடம் கடன் பெறவேண்டும்? நஜீமாவிடம் கேட்டிருக்கலாமே?'

'நடந்தது நடந்துவிட்டது' என தன்னைத்தானே தைரியப் படுத்திக்கொண்டாள்.

இடைவேளை பெல் அடித்ததும் மாணவிகள் வண்ணாத்திப் பூச்சிகளாகினர். சல்மா மட்டும் வகுப்பு அறையிலேயே இருந்தாள்

இரண்டொரு நிமிடங்களில் வராந்தையில் சப்பாத்து ஒலி கேட்டது. சல்மா அண்ணாந்து பார்த்தாள். மாஹிர் வந்து கொண்டிருந்தான்.

''இந்தா உன்னுடைய கொப்பி. கதை நன்றாகவே இருக்கிறது. திருத்தியிருக்கிறேன்''

கொப்பியை அவளின் கையில் கொடுத்துவிட்டு அவளுடைய நன்றிகளை ஏற்றுக்கொண்டு மாஹிர் மீண்டும் வராந்தையில் நடந்துசென்றான்.

அவள் கொப்பியை விரித்தாள்.

கதையை முடித்திருந்த பக்கத்தில் காகித உறையொன்று குண்டூசியால் குத்திவைக்கப்பட்டிருந்தது. அதனுள் பரீட்சைக்குத் தேவையான பணம் இருந்தது.

மாஹிரின் கையெழுத்தில் சில வரிகள் அங்கு எழுதப் பட்டிருந்தன. அவள் அதை வாசித்தாள்.

'தனது அன்புக்குப் பாத்திரமான ஒரு மாணவி எதிர் காலம் பாழாகப்போய்விட்டதாக நினைத்து ஒடிந்துபோய் இருக்கிறாள் என அவளுடைய ஆசிரியன் ஒருவன் அறிந்தான். அவளுக்கு உதவிசெய்து அவளைக் கைதூக்கிவிட அவன் விரும்பினான். பரீட்சைக்காக நிறையப் படித்துத் திறமையாகச் சித்தியடைவது ஒன்றுதான் தனக்குச் செய்யும் கைமாறு எனக்கூறி பரீட்சைக்கான கட்டணத்தை அவளுக்குக் கொடுத்தான். அவள் படிப்பாளா? சித்தியடைவாளா? காலம்தான் பதில் கூறவேண்டும்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை வாசித்ததும் மாஹிர் சல்மாவின் எண்ணத்தில் கோபுரமாக உயர்ந்து தோன்றினான்.

சல்மா வீட்டை அடைந்து வாசற்படியைக் கடக்கும்போது வீட்டிலுள்ள அனைவரும் அங்கு கூடிநின்றனர்.

மரியத்திற்கு மீண்டும் ஆஸ்மா மிக மோசமாக வந்துவிட்டது.

அவளை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச்செல்லப் பணம் இல்லாததால் அனைவரும் என்ன செய்வதென்று தெரியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

மரியம் தொடர்ச்சியாக இருமிக்கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் இரண்டும் பிதுங்க, தன் நெஞ்சில் பொறுத்துக் கொண்டிருந்த சளிக்கட்டியை வெளியேற்றுவதற்காகக் கயிறிழுத்தல் நடத்திக்கொண்டிருந்தாள்.

தாயைப் பார்க்கும்போது சல்மாவுக்குப் பரிதாபமாக இருந்தது.

'தாயின் பாதத்தின் கீழ்தானே சொக்கம் இருக்கிறதாம். அந்தத் தாயே மரணவேதனையில் அவதியுறும்போது, அவளைச் சுகப்படுத்தத் தேவையான பணத்தை நான் வைத்திருந்து என்ன செய்ய? உம்மாவை டாக்டரிடம் காட்டாமல்விட அதனால் அவர் மௌத்தாகிவிட்டால்...? உம்மாவுக்கு ஏதாவது ஆகிவிட்டால்... நான் இருந்துதான் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன?'

தாயா...? பரீட்சையா. .? சல்மா சிந்தித்தாள். பரீட்சைக்காகக் கட்ட மாஹிரிடம் பெற்ற பணத்தில் தாயை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்வது என்ற முடிவுக்கு வந்தாள் அவள்.

''வாப்பா. உம்மாவை டாக்டரிட்டம் கூட்டிப்போகலாம். அவருக்குக் கொடுக்கப் பணம் எங்கிட்டே இருக்கு''

''உன்னிடம் எப்படி பணம்...?'' தஸ்லீம் கடுமையாகக் கேட்டார்.

''என்னுடைய தோழி ஒருத்தியிடம் பரீட்சைக்குக் கட்டுவதற்காகக் கடனாக வாங்கியபணம் எங்கிட்டே இருக்கு''

''அதை இதற்குச் செலவழித்தால் உனக்குப் பரீட்சைக்குப் பணம்...?''

''அதை அப்புறம் பார்க்கலாம். வாப்பா... உம்மாவை பஸ்ஸிலேயே கூட்டிப்போகலாமே...?''

''பஸ்ஸிலா...? உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. பஸ்ஸில்போக நான் வரமாட்டேன்'' மரியம் முணுமுணுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பஸ்ஸில் போனா என்ன குடியா முழுகிடும்?''

''நான் மாட்டேன். பஸ்ஸில் போனா நாலுபேர் என்ன நினைப்பாங்க...!''

''அப்படீன்னா எதில் போவது...?''

''ஒரு கார் பிடிங்க... இல்லேன்னா நான் இப்படியே கிடந்து மௌத்தாப்போறேன்''

இதனைக்கேட்டு சல்மா ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

''முஸம்மில்... இந்தா இருபது ரூபா... உம்மாவை டாக்டரிடம் கூட்டிப்போக ஒரு கார் பிடித்துவா! ..''

தன்னிடமிருந்த ரூபா நோட்டுக்களில் இரண்டை அவனிடம் நீட்டினாள். சல்மா பணத்தை எடுப்பதை முஸம்மில் கண் கொட்டாமல் பார்த்தான்.

நேரம் நிமிடமாகக் கரைந்தது. வீட்டிலிருந்து கார் ஸ்டாண்டுக்குச் சென்று காரொன்றை அமர்த்திவரக் குறைந்தது பத்து நிமிடங்கள்தான் செல்லும். அரைமணி நேரமாகியும் முஸம்மில் காருடன் திரும்பாதது கேள்விக்குறியை ஏற்படுத்தியது.

சற்றுத்தொலைவில் காரொன்றின் ஹார்ன் ஒலி கேட்டது. தொடர்ந்து அந்தக் கார் வேகமாக ஓடிவந்து வீட்டின் முன்னால் நின்றது.

முஸம்மில் இறங்கினான்.

''ஏன்டா இவ்வளவு நேரம்?''

''என்னவோ நேரமாயிற்று'' எனக் கூறிய முஸம்மில் சல்மாவைப் பார்த்து ''சல்மா, கார்க்காரனுக்குப் பத்து ரூபா தான் கொடுத்திருக்கேன். மிகுதிப் பணத்தை நீ கொடுத்திடு. இருபது ரூபா காருக்குப் பேசி இருக்கேன்'' என்றான்.

''நான் உன்னிடம் இருபதுதானே தந்தேன். பத்தை என்ன செய்தே?''

''என்ன சல்மா, பெரிய கேள்வியா கேட்கிறே? வீட்டிலே நல்லாச் சாப்பிட்டு எத்தனை நாட்களாச்சு. அதுதான் ஒரு ஹோட்டலுக்குப் போய் திருப்தியாய் சாப்பிட்டேன். பத்து ரூபா போயிடுச்சு''

சல்மாவுக்கு மயிர்க்கால்கள் குத்திடுவதைப்போன்ற உணர்வு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய பொறுப்பற்ற தன்மையை உணர்ந்த அவள் அப்படியே போர்க்கோழியாக மாறி அவனைக் கொத்திக் கிளறு வோமா என நினைத்தாள்.

''அடப்பாவி. இங்கே எல்லோருமே பட்டினி. உம்மா வியாதியாலே கஷ்டப்படுறாங்க. நீ போய் திருப்தியா சாப்பிட் டிட்டு வாறியேடா. உனக்கு ஏதாவது பொறுப்புணர்ச்சி இருக் காடா?'' சல்மா கேட்டாள்.

''ஏன்? சாப்பிட்டா என்ன? காசு இருக்கும்போதுதானே சாப்பிடணும்''

''எங்கேடா காசு இருக்கு? எங்கே இருக்கு?''

''உன்கிட்டே இருக்கு. அதுதான் பார்த்தேனே. பத்து ரூபா தாளா வெளியே எடுத்தியே''

அவளுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

மரியத்தை டாக்டரிடம் காட்டிவிட்டு அவர் கொடுத்த மருந்தைப் பெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தபோது அவளிடம் மிகுதியாக இருந்தது பத்து ரூபா மட்டுமே.

PUBLIC LIBRARY
AMIR ALI SAMMANTHURAI
25-7-1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 7 —

ஸல்மா திடுக்குற்று கண்விழித்தாள்.

சைஞச்சேவல் கூவும் சத்தம் நாராசமாகக் காதுகளில் விழுந்தது. அவள் காதுகள் இரண்டையும் பொத்திக்கொண்டாள்.

தேஞக அவள் காதுகளில் ஒலிக்கும் அந்த ஒலி இன்று மட்டும் ஏன் இத்தனை அபஸ்வரமாகக் கேட்கிறது?

கண்கள் இரண்டும் வலித்தன. இரவு நடுச்சாமம்வரை தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அவள் அழுதிருந்தாள்.

அன்றுதான் பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டிய நாள். கைக்குக் கிடைத்தது வாய்க்குக் கிடைக்காததுபோல் பரீட்சைக் குக் கட்டப் பணம் கிடைத்தும் அதைப் பயன்படுத்தமுடியாமல் போய்விட்டதே.

எதிர்காலம் சூனியமாகிவிட்டதாக நினைத்து அழுதாள்.

சுப்ஹூ தொழுகைக்கான பாங்கு ஒலி காதில் கேட்டது. வாரிச்சுருட்டிக்கொண்டு தஸ்லீம் எழுந்தார். நேரத்தோடேயே எழுந்து படித்துக்கொண்டிருக்கும் சல்மாவை அங்கு காணவில்லை. வீடு உறங்கியது.

சல்மாவை எழுப்பிவிடலாம் என நினைத்தார். படுத்துக் கிடந்த ஒவ்வொருவரையும் மெதுவாகக் கடந்தவாறு சல்மாவின் அருகில் வந்தார்.

''சல்மா...'' மெதுவாகக் கூப்பிட்டவாறு கையை அவளுடைய கன்னத்தில் வைத்தார். திடுக்குற்றவராகக் கையை எடுத்தார். கையில் ஒரே ஈரம். அவளுக்கு என்ன நடந்தது?

வாப்பா எழுப்புவதை அறிந்தும் அறியாததுபோல சல்மா படுத்தாள். அவள் ஆழ்ந்த நித்திரை கொள்கிறுள் என நினைத்து அவர் போய்விடுவார் என எண்ணினுள்.

தஸ்லீம் மீண்டும் ''சல்மா...'' என்றுர்.

இன்னும் பாசாங்கு செய்துகொண்டிருக்க அவள் விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன...?'' கேட்கும்போது அவளுக்குத் தொண்டை அடைத்தது.

''நீ எழும்பல்லியா? பாங்கு கேட்டுட்டு''

''இல்லே''

''படிக்கல்லியா?''

''இல்லே''

''உனக்கு உடம்புக்குச் சுகமில்லேயா?''

''இல்லே''

''உனக்கு என்னதான் நடந்தது?''

''ஒன்றும் இல்லே''

''நீ இன்றைக்கு ஸ்கூலுக்கு போவதில்லேயா?''

''இல்லே''

தஸ்லீமுக்கு அவளுடைய பதில்கள் புதுமையாகத் தோன்றின. இவளுக்கு என்னதான் நடந்துவிட்டது?

தஸ்லீம் சல்மாவின் பாயில் அமர்ந்தார். அவருடைய சப்தத்தைக் கேட்டு மரியமும் எழுந்தாள்.

''ஏம்மா அழுவுறே...?'' சல்மாவின் பட்டுக் கூந்தலைத் தடவியவாறு தஸ்லீம கேட்டார்.

''நான் ஸ்கூலுக்கு போவப்போறதில்லே. பரீட்சை எடுக்கப் போறதில்லே. என் எதிர்காலமே பாழாயிட்டுது'' அவள் அழுதாள்.

''குழந்தைப்பிள்ளேயாட்டம்.. என்ன நடந்தது உனக்கு?'' மரியம் கேட்டாள்.

அவள் மாஹிரிடம் காசு வாங்கியதையும் அதனை மரியத்திற்குச் செலவழித்ததையும் சொல்லிமுடித்தாள்.

''போம்மா. இதுக்குத்தானு இப்படி அழுறே? பரீட்சை! என்னம்மா பரீட்சை. இந்த முறை போனு.... அடுத்தமுறை எடுக்கலாம். எனக்கு வேலேயே போயிடுச்சு. அதற்காக இடிந்து போய் உட்கார்ந்துவிடுவதா?'' அவர் ஆறுதல் கூறினுர்.

★ ★ ★

காலே எட்டு மணி —

அழுதுவடிந்த கண்களுடன் சல்மா முகம் கழுவுவதற்காகக் கிணற்றுக்குச் சென்ருள்.

முகம் கழுவிவிட்டுத் திரும்பும்போது அகஸ்மாத்தாக அவளது பார்வை பாதைக்குச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரிசாரியாக மாணவ – மாணவிகள் ஓடியவாறும், நடந்த வாறும்... செல்லும் காட்சி அவளது நெஞ்சில் வேதனையை ஏற்படுத்தியது.

எத்தனை நேரந்தான் பாதையைப் பார்த்தவாறு நின் றுளோ தெரியாது. திடீரென வீட்டுக்குள் பெரிய பிரளயம் ஏற் பட்டதுபோல சத்தம் கேட்டது. மூமினுவும் பாத்திமாவும் யாருக்கோ ஏசிக்கொண்டிருந்தனர்.

சல்மா மெதுவாக நடந்து உள்ளே சென்றாள்.

கையில் புத்தகங்களுடன் தரையை உதைத்தவாறு பாயிஸா அழுதுகொண்டிருந்தாள்.

''பாத்திமா, ஏன் பாயிஸா அழுகிறுள்?'' சல்மா கேட்டாள்.

''நீதான் கேளேன். கழுதை ஏன் அழுகுதென்னு''

''பாயிஸா, ஏன் அழுவுறே?''

''நான் ஸ்கூலுக்குப் போகமாட்டேன்''

''ஏன் போகமாட்டே?''

''ஸ்கூல்ல ஒத்தைச்சட்டைக்காரின்னு எல்லோரும் என்னைக் கேலி செய்றுங்க. எங்கிட்டே ஒரு சட்டைதான் இருக்காம். நான் ஏழையாம். எல்லோரும் ஏசுறுங்க. நான் போகமாட்டேன்''

பாயிஸா கூறுவதில் உண்மையிருப்பதாகவே தோன்றியது சல்மாவுக்கு. மற்ற மாணவிகளுக்கு அவளுடைய குடும்ப நிலை தெரியுமா என்ன! பாவம்! அவள் என்ன செய்வாள்? அவளிடம் உள்ளதே ஒரேயொரு பாவாடை. இரவு நேரங்களில் கிழிந்த சாரமொன்றை உடுத்திக்கொள்வாள். ஏனைய நேரங்களில் அந்தப் பாவாடைதான்.

மாஹிர் கொடுத்த பணத்தில் பத்து ரூபா மிகுதியாக இருப்பது அவளுடைய நினைவில் எழுந்தது.

'அதை வைத்திருந்து என்ன செய்ய? பாயிஸாவுக்கு ஒரு பாவாடை தைத்துக்கொடுத்தால் அவளாவது படிப்பைத் தொடரலாம்' சல்மா நினைத்தாள்.

''பாயிஸா, நீ இன்றைக்கு ஸ்கூலுக்குப் போகவேண்டாம். உனக்கு இன்றைக்கே புதுப் பாவாடையொன்று தைத்துத் தரு கிறேன். நாளைக்குப் போகலாம்''

தஸ்லீமிடம் பணத்தைக் கொடுத்துத் துணி வாங்கிவரு மாறு கேட்டாள்.

★ ★ ★

பகற்பொழுது மறைந்தது. புதுப் பாவாடை அணிந்த மகிழ்ச்சியில் பாயிஸா துள்ளி விளையாடிக்கொண்டிருந்தாள். மூமினு கைக்குழந்தையைத் தோளில் போட்டவாறு வாசலில் உலாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள். கூண்டுப் பறவைகளாகிவிட்ட பாத்திமாவும், சல்மாவும் வாசற்படியில் குந்திக்கொண்டு ஆளை ஆள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரின் மனதிலும் வெவ்வேறு சிந்தனைகள்.

''நீண்டநேரமாக காலிதீனைக் காணவில்லையே. எங்கே போனான்?'' என்ருள் றஸானு பாயிஸாவைப் பார்த்து.

இந்தக் கேள்வி அங்கிருந்த அனைவரையும் ஈர்த்தது.

''அவனைக் காணவில்லைதான். எங்கே போயிருப்பான்!'' பாயிஸா திருப்பிக் கேட்டாள்.

''மத்தியானம் இங்குதானே நின்ருன். அப்புறம் ஆளைக் காணவே இல்லையே'' என்ருள் பாத்திமா.

இவர்களின் உரையாடல் உள்ளே படுத்திருந்த மரியத்துக்குக் கேட்டது. அவள் பதறியவாறே வெளியே வந்து ''காலிதீனைக் காணவில்லையா? ஆண்டவனே! என் மகன் எங்கே போனானே?'' என ஒப்பாரிவைக்கத் தொடங்கினுள்.

''பாயிஸா. ஓடுடீ. எங்கேயாவது போய் தேடிப்பாருடி'' முமினு கத்தினுள்.

சற்றுநேரத்தில் —

காலிதீனைக் காணவில்லையென அந்த வீடே அல்லோல கல்லோலப்பட்டது.

காலிதீனைத் தேடிச்சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மரியத்தின் பிரலாபம் இன்னும் ஓயவில்லை.

ஒவ்வொருவரும் அங்குமிங்குமாக தேடிக்கொண்டிருக்கும் போது தூரத்தே சிறுவனெருவனை யாரோ இழுத்துக்கொண்டு வருவது அவர்களுக்குத் தெரிந்தது.

''அதோ! காலிதீனை முஸம்மில் நானு கூட்டிவாருர்'' என்று சத்தமிட்டாள் றஸானு.

காலிதீன் அழுதவாறு நடந்துவந்தான். அவனைக் கண்டவுடன் ''எங்கேடா போயிருந்தே என் ராஜா'' என்று மரியம் நா தழுதழுக்கக் கேட்டாள்.

''நல்லாக் கேளு. உன் மகன் எங்கே போனுன், என்ன செய்தான் என்பதை நீயே கேளு'' முஸம்மில் கத்தினுன்.

''காலிதீன். எங்கேடா போயிருந்தே?'' மரியம் மீண்டும் கேட்டாள்.

அவன் அழுகையை நிறுத்துவதாயில்லை. தொடர்ந்து சிணுங்கினுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முஸம்மில் நீ சொல்லு? அவன் குழந்தை. அவனை அதட்டினுல் எப்படி சொல்வான்'' என்ருள் சல்மா.

''விரல் வைத்தா கடிக்கத்தெரியாத குழந்தை. உன் தம்பி கண்ணை மூடி குருடனு நடித்துக்கொண்டு நடுரோட்டிலே பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். பிச்சைக்காரப்பயல்'' கூறியவாறு காலிதீனின் கையைப்பிடித்து கன்னத்தில் அறைந்தான்.

முஸம்மில் திருப்பவும் அடிப்பதற்காகக் கையை ஓங்கினுன். சல்மா தடுத்து நிறுத்தினுள்.

''ஏன் அவனுக்கு அடிக்கிறே? அவன் அப்படி என்ன பெரிய தப்பு செய்திட்டான்? வீட்டிலே இருக்கிற வயதுவந்த ஆண்பிள்ளை தண்டச்சோறு சாப்பிடுகிருன். நாமாவது உழைத்து குடும்பத்தைக் காப்பாற்றலாம் என அவன் பிச்சை எடுக்கப் போயிருப்பான். இதுலே என்ன தவறு?'' சல்மா கேட்டாள்.

''என்னடி பைத்தியமா கதைக்கிறே? பிச்சை எடுப்பது அவமானம்டி''

''வீட்டிலே எல்லோரும் பட்டினியா கிடந்து சாகலாம். அது அவமானம் இல்லே? அவன் ஏன் பிச்சை எடுக்கப் போனுன்? அவனுக்கு வீட்டிலே நல்ல சாப்பாடு இல்லே. உடுக்க உடுப்பில்லே. மிருகங்கள் பிறந்தவுடன் தானுக உணவு தேடுவதைப்போல அவனும்போயிருக்கான். இதிலே என்னதப்பு இருக்கு? வீட்டிலே பெரிய ஆளான நீ ஏதாவது தொழில் செய்து கொண்டுவந்தா அவன் ஏன் பிச்சை எடுக்கப்போருன்?'' அவள் பொரிந்துதள்ளினுள்.

''எனக்கும் வேலே செய்ய விருப்பம்தான். யாரும் தொழில் தாறதா இல்லேயே. நான் முரடன், மடையன் எனச் சொல்லி வேலேதர மறுக்கிறாங்க''

''நீதானே அந்தப் பேர்களே சம்பாதிச்சே. தெருவிலே வீண் சண்டைக்குப் போனு இப்படித்தான் பேர் சூட்டுவாங்க. முதலிலே உன் பழக்கங்களே மாத்து அப்புறம் உன்னைத்தேடி தொழில் வரும்'' என்று கூறிய சல்மா காலிதீன் பக்கமாகத் திரும்பி ''இன்னும் ஒருமுறை நீ பிச்சை எடுத்ததாக நான் கேள்விப்பட்டால் உன்னே என்ன செய்வேனு தெரியாது'' எனப் பலத்த அதட்டலுடன் கூறியபோது...

''இல்லே தாத்தா... இனி என் கையாலே உழைச்சி சாப்பிடுவேன்'' என்று காலிதீன் மழலேமொழியில் கூறியது அங்கிருந்தவர்களின் மயிர்க்கால்களேச் சில்லிடவைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 8 —

அன்று திங்கட்கிழமை. மாஹிர் பாடசாலைக்கு வந்தான். கடந்த நான்கு நாட்களாக அவன் சல்மாவைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சென்ற புதன்கிழமை பரீட்சைக்குப் பணம் கட்டுவதற்காக அவன் அவளுக்குப் பணம் கொடுத்தான்.

வியாழக்கிழமை விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய நாள்.

அவள் பணம் கேட்பதற்காகப் பாவித்த யுக்தி அவனுக்குப் பிடித்திருந்தது. அவள் கெட்டிக்காரி; புத்தியுள்ளவள் என்பதில் மற்ற மாணவிகளை விட உயர்ந்து தோன்றினுள்.

மாஹிர் நெசவுப் பாடம் கற்பித்துவந்தான். அப்பாடத்தில் சல்மா காட்டும் ஆர்வம் பல சந்தர்ப்பங்களில் அவனை மலைக்கவைத்ததுண்டு.

சல்மா எழுதிய கதையை வாசித்ததும் அதன் கதாநாயகி அவள்தான் என்ற முடிவுக்கு வர அவனுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு உதவிசெய்து அவளின் எதிர்கால வாழ்க்கையை ஜோதிமயமாக்குவதைப்போன்ற பிறிதொரு நல்ல செயல் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. அதனுல்தான் அவன் அவளுக்கு உதவிசெய்தான்.

வியாழக்கிழமை பரீட்சைக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய நாளாயிருந்தும் சல்மா பாடசாலைக்கு வரவில்லை என்பதை அறிந்து அவன் சிந்தனைவசப்பட்டான்.

அவளுக்கு என்ன நடந்தது? ஒருவேளை பாடசாலையால் விண்ணப்பிக்காமல், தனிப்பட விண்ணப்பிக்கப்போகிறுளோ?

அவனுல எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை.

கடந்த நான்கு நாட்களும் அவன் அடிக்கடி அவளை நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவேளை நேரம். ஒரு சிறுமி அவனைத் தே ; வந்திருப்ப தாக செய்தி கிடைத்தது.

அவன் பாடசாலை முற்றத்துக்குச் சென்றான். அங்கு பாயிஸா நின்றாள்.

"நீ சல்மாவின் தங்கையல்லவா?"

"ஆமாம். இதை தாத்தா உங்ககிட்டே கொடுக்கச்சொல் லிச்சு" கொப்பியொன்றை அவனிடம் கொடுத்தாள்.

பாயிஸா சென்றதும் மாஹிர் கொப்பியை அவசரமாகப் பிரித்தான்.

ஏற்கனவே அவன் வாசித்த கதையடங்கிய கொப்பி அது. அதில் பின்வரும் வரிகள் புதிதாக சேர்க்கப்பட்டிருந்தன.

'ஆசிரியர் கொடுத்த பணத்தை அந்தப்பேதை நன்றியுடன் பெற்றுக்கொண்டாள். தன் இலட்சியம் நிறைவேறும் நாள் தூரத்தில் இல்லையென நினைத்து மகிழ்ச்சியில் திளைத்தாள்.

'அவளின் சந்தோஷம் நீடிக்க அவளுடைய விதிக்கு விருப்ப மில்லைபோலும். அவள் பணத்துடன் வீடு வந்தபோது அவளைப் பெற்ற தாய் மரணத்துடன் போராடிக்கொண்டிருந்ததை அவ ளால் அறியமுடிந்தது.

'பெற்ற தாயா? தவது இலட்சியமா? என நீண்டநேரம் சிந்தித்தாள். ஈற்றில் தாயைக் காப்பாற்ற அந்தப் பணத்தைச் செலவழிப்பதென்ற முடிவுக்கு வந்தாள்.

'தாயைக் காப்பாற்றிவிட்டாள். ஆனால், தனது கனவுகள் நிறைவேறாத சிறகொடிந்த பறவையாக அவள் இப்போது ஆகி விட்டாள்'

மாஹிர் கொப்பியை மடித்துக் கீழே போட்டான். சல்மா வின் நிலை அவனுக்குத் தெளிவாகியது.

பாவம்! பரீட்சை எழுத எத்தனை ஆவலுடன் இருந் தாளோ? பைத்தியக்காரி. நடந்தவைகளைச் சொல்லித் திருப்ப வும் என்னிடம் பணம் கேட்டிருக்கலாமே.

அவளை நினைக்கும்போது அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

★ ★ ★

"தாத்தா உன்னைத்தேடி யாரோ வந்திருக்காங்க" வாச லில் விளையாடிக்கொண்டிருந்த காலிதீன் ஓடிவந்து சல்மாவிடம் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுக்கு வந்தாள் சல்மா.

''சார்... வாங்க சார்''

வாசலில் நின்ற மாஹிரை வரவேற்ருள்.

ஆண்குரல் ஒன்று கேட்டதும் உள்ளே படுத்திருந்த மரியமும் வாசலுக்கு வந்தாள்.

''உம்மா... இவங்கதான் எங்க நெசவு ஆசிரியர். பரீட்சைக்குப் பணம் கட்டுவதற்கு இவர்கிட்டதான் நான் பணம் வாங்கினேன்''

மரியம் அவனைப்பார்த்து மெலிதாகச் சிரித்தாள். அவளது சிந்தனைகள் பல கோணங்களில் ஓடின.

ஒருவேளை கொடுத்த கடனை மீளப் பெறுவதற்காக வந்திருப்பானே? வீட்டிலே சல்லிக் காசுகூட இல்லையே!

''தம்பி. உள்ளே வாங்க''

மலர்ந்த முகத்துடன் மாஹிர் வீட்டினுள் சென்று அங்கு கிடந்த ஒரேயொரு கதிரையில் உட்கார்ந்தான்.

மூமினு வந்து எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே சென்ருள்.

''தம்பி, சல்மாவைப் பார்க்க வந்தீங்களாக்கும்?'' மரியம் கேட்டாள்.

''ஆமா. உங்க மகள் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பவில்லே என ஸ்கூல்ல பேசிக்கொண்டாங்க. ஸ்கூலுக்கும் வருவதில்லே என்ருங்க. அதுதான் பார்த்துட்டுப் போகலாம்னு''

மரியத்தின் மனம் அமைதியுற்றது. 'அவன் கடன் பணத்தை மீளப் பெறுவதற்காக வரவில்லே' என நினைத்துக்கொண்டாள்.

சிறிதுநேர அமைதியின்பின் மாஹிர் கேட்டான். ''ஏன், நீ இந்த முடிவுக்கு வந்தே?''

சல்மா மௌனமாக நின்ருள். அவள் கண்கள் பனித்தன.

''ஏன் பேசாமல் நிக்கிறே?''

''சார், ஏழைகளின் லட்சியங்களெல்லாம் கற்பனையிலே கரைந்துவிடுகின்றன. அதேபோல்தான் எனக்கும் நடந்துட்டு. நான் பரீட்சை எடுக்கக்கூடாது என்பது என் விதி. இல்லாவிட்டால் இந்தச் சந்தர்ப்பமாகப் பார்த்து என் வாப்பாவின் வேலே போயிருக்குமா? என் உம்மாவின் வருத்தம் இவ்வளவுக்கு அதிகரித்திருக்குமா? எல்லாமே எனக்கு எதிராகவே நடைபெற்று விட்டன''

மூவரும் கதைத்துக்கொண்டிருந்த வேளையில், ''உம்மா...'' என்ற குரல் உள் கதவோரம் கேட்டது. மரியம் திரும்பினுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹிர் குரல் வந்த திசையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான்.

தேநீர் கோப்பையைக் கையில் ஏந்தியவாறு பாத்திமா நின்றாள்.

அகஸ்மாத்தாகத் தலையை உயர்த்திய பாத்திமா மாஹிர் தன்னை அவதானிப்பதை அறிந்து முந்தானையால் முகத்தைச் சடாரென மறைத்தாள். தேநீர் கோப்பையை மரியத்தின் கையில் கொடுத்துவிட்டு உள்ளே ஓடினாள் அவள்.

''தம்பி, குடிங்க...'' மாஹிர் தேநீரைக் கையிலேயே வைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து மரியம் கூறினாள்.

''சல்மா, இப்போது என்ன செய்யப்போறே?'' மாஹிர் கேட்டான்.

''ஒரு எண்ணமும் இல்லே''

''வாப்பாவுக்கு வேலே ஏதும் கிடைக்கவில்லையா?''

''இல்லே சார்... அவருக்கு வேலே கிடைச்சா எல்லாம் சரியாய்ப்போய்விடும்.''

''நானும் முயற்சிக்கிறேன். உனக்கு என்ன உதவி வேண்டுமென்றாலும் என்கிட்டக் கேட்டு அனுப்பு. வீட்டில் சும்மா இருக்க வேண்டாம். ஏதாவது படித்துக்கொண்டிரு. அல்லது கைவேலே ஏதாவது செய்து உழைத்துக்கொண்டிரு''

மாஹிர் நீண்டநேரம் அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தான். அடிக்கடி ஹாஸ்ய வெடிகளை உதிர்த்தான். தங்களுடைய கவலைகளை மறந்து அவர்கள் சிரித்தார்கள். உள்ளே ஒட்டுக் கேட்டுக்கொண்டு நின்ற பாத்திமா சிரிப்பை அடக்க முந்தானையை வாய்க்குள் திணித்தாள்.

மாஹிர் அவர்களிடமிருந்து விடைபெற்று வெளியே சென்றான். பாத்திமா என்ன நினைத்தாளோ, அவசரமாக வர்சலுக்கு ஓடிவந்து அவன் நடந்துசெல்லும் அழகை நீண்டநேரம் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்றாள்.

* * *

சல்மா கூண்டுப்பறவையாகி இரண்டு கிழமைகளாகின. இந்த நாட்களில் அந்தக் குடும்பத்திலுள்ளவர்கள் அனுபவித்த வேதனைகள் ஏராளம். பல நாட்கள் பட்டினியில் கழிந்தன. அனைவரும் வீட்டினுள் அடைந்துகிடப்பதால் அடிக்கடி அவர்களுக்குள் சண்டைகள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6018

ஒருநாள் பிற்பகல்.

சல்மாவும், பாத்திமாவும் கிணற்றுக் கட்டின்மேல் உட்கார்ந்து ஆளைஆள் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

சல்மாவின் மனதில் பல சிந்தனைகள்.

கடந்த சில நாட்களாக அவளின் மனதில் புரட்சிகரமான திட்டமொன்று உருவாகிக்கொண்டிருந்தது. அந்தத் திட்டத்தை அந்த வீட்டில் அமுல்படுத்துவதைப்பற்றி இரவுவேளைகளில் நித்திரை இல்லாத நேரங்களில் அவள் சிந்திப்பாள்.

அதை அமுல்படுத்த வீட்டிலுள்ளவர்களின் ஒத்துழைப்பு அவளுக்குத் தேவை.

''பாத்திமா, நமது குடும்பத்தின் தற்போதைய நிலைபற்றி நீ என்ன நினைக்கிறாய்...?'' சல்மா கேட்டாள்.

''வாப்பா போலிக்கௌரவம் பார்த்து வேலை வீடு தேடி வரும் என்று இருக்கிறார். முஸம்மில் பொறுப்பில்லாமல் இருக்கிறான். மூமினா பணம் கேட்டபடி பழிகிடக்கிறாள்... இந்த நிலையில் நாம் என்ன செய்யலாம்...?'' பாத்திமா கூறினாள்.

''நம்ம குடும்ப முன்னேற்றத்துக்காக நான் ஒரு திட்டம் வைத்திருக்கின்றேன். அதைப்பற்றித்தான் பலநாட்களாகச் சிந்திக்கிறேன். அன்றைக்கு மாஹிர் மாஸ்டர் வீட்டுக்கு வந்தாரே, உனக்கு ஞாபகம் இருக்கா?''

மாஹிரின் பெயரைக் கேட்டதும் பாத்திமா சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நல்லா ஞாபகம் இருக்கு''

''அவர் என்ன சொல்லிவிட்டுச் சென்றார்? வீட்டிலே சும்மா இருக்கக்கூடாது. ஏதாவது கைவேலை செய்து உழைத்துக் கொண்டிருக்கணும் எனக் கூறவில்லையா?''

''ஆமா. கூறினார்''

''நீ அதைப்பற்றி என்ன நினைக்கிறே? இதோபார். நம்ம வீட்டிலே ஒன்பதுபேருக்கும் பதினெட்டுக் கால்கள். பதினெட்டுக் கைகள், ஒன்பது தலைகள் இருக்கு. இத்தனை கால்களும், கைகளும், தலைகளும் ஏன் ஓய்ந்துபோய் சும்மா இருக்கணும்? நம்மைவிடவும் மோசமான நிலையில் இருந்த எத்தனையோ ஆயிரம்பேர் முன்னுக்கு வரவில்லையா? தொழில்செய்து கோடி கோடியாகச் சம்பாதிக்கவில்லையா? நாம்மட்டும் எதற்காக முடங்கிக்கிடக்கணும்? நம்மிடம் உள்ள இத்தனை கால்களையும் கைகளையும் முறைப்படி பயன்படுத்தினா நாமும் நமது வறுமையை ஒழிக்கமுடியாதா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அநுசரி. உன் திட்டம் என்ன?'' பாத்திமா கேட்டாள்.

''பாத்திமா, நான் நெசவுப்பாடம் படித்திருக்கேன். எனக்கு நெசவு செய்யத்தெரியும். நீயும் ஓரளவு படித்திருக்கிறாய். மாஹிர் மாஸ்டர் நமக்கு உதவி செய்வதாகச் சொல்லியிருக்கார். வீட்டிலே இரண்டு தறி போடலாமென நினைக்கிறேன்''

''தறி போடப் பணம்...?''

''அதைப்பற்றித்தான் நான் சிந்திக்கிறேன். ஆண்டவன் ஏதோ ஒரு வழி காட்டுவான்''

''உன் திட்டத்திற்கு நான் பூரணமாக ஒத்துழைப்புத் தருவேன்''

''அதுதான் எனக்கு வேண்டும். நீ இதைப்பற்றி நன்றாக யோசி. பின்னர் வீட்டில் உள்ளவர்களுடன் கதைக்கலாம்''

● ● ●

அன்று இரவு ஏழுமணி இருக்கும். வாசலில் யாரோ கூப்பிட்டனர்.

தஸ்லீம் வெளியேவந்து பார்த்தார்.

மீரான் அங்கு நின்றான்.

தஸ்லீம் கணக்குப்பிள்ளையாகத் தொழில்பார்த்த கடையில் எடுபிடி ஆளாக நின்றவன் மீரான்.

அந்தக் கடையில் அவரை உள்ளன்போடு நேசித்தவன் அவன்தான்.

''மீரான். வா உள்ளே!''

''தஸ்லீம் நானா, சுகமா இருக்கீங்களா? உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்'' கூறியவாறு மீரான் பாயில் உட்கார்ந்தான்.

''உங்களுக்குச் செய்த அநியாயத்துக்கு இப்போ சின்ன முதலாளிக்கு வட்டியும் முதலுமா கிடைச்சிருக்கு'' என்று மீரான் கூற—

''நீ என்ன சொல்றே...?'' என்றார் தஸ்லீம்.

''உங்ககிட்டே கள்ளக் கணக்கு எழுதச்சொன்னதுபோல ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு வாடிக்கையாளருக்கு விற்ற பொருட்களுக்குப் பில் போடவேண்டாம்னு எங்கிட்டே கேட்டாரு. நான் மறுத்தேன். எனக்குப் பாடம் படிப்பிப்பதாக மிரட்டினார். போய்யா... நீயும் உன் கடையுமன்னு அவர் முகத்திலே சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு எல்லா விஷயத்தையும் பெரிய முதலாளியிடம் சென்று கூறினேன்''

''அப்புறம்...?''

''அவங்களுக்குள்ளே என்ன நடந்ததோ இரண்டொரு நாளிலே என் சீட்டைக் கிழிச்சிட்டாங்க. நான் லேபர் கோர்ட்டிலே வழக்கு வைச்சேன். எனக்கு இரண்டாயிரம் கொடுக்கணும்னு தீர்ப்பாயிடுச்சி. இன்றுதான் காசு கிடைத்தது. அதற்கிடையிலே சின்ன முதலாளியின் மோசடிகளைச் சுட்டிக்காட்டி பெரிய முதலாளிக்கு அனுமதேயக் கடிதம் ஒன்றை எழுதினேன். இப்போ இரண்டுபேரும் பிரிஞ்சிட்டாங்க''

''ஆச்சரியமாயிருக்கே. சின்ன முதலாளிக்கு அப்படி என்ன பணத்தேவை? அவருக்கு உள்ளதே ஒரு மகனும் மகளும்தானே?''

''மனுசன் நிறைய சூது விளையாடுவான். உங்க வயிற்றிலே அடிச்சதுக்கு அவன் நல்லா இருக்கவேமாட்டான். அவன் நாசமா போவான்''

''அவர் எப்படியாவது இருந்துட்டுப்போறுர். நாம எதற்காகச் சபிக்கணும்?''

''உங்களைப்போல வாயில்லாப் பூச்சிகளாலேதான் இவங்க இவ்வளவு செய்கிறுங்க!''

மீரான் தொடர்ந்து கதைத்தான். சின்ன முதலாளியைப் பற்றிக் கதை கதையாகக் கூறினன். இடைக்கிடை சபித்தான். தஸ்லீமுக்காக வருத்தப்பட்டான்.

''இந்தாங்க நானு! இதிலே ஆயிரம் ரூபா இருக்கு. எடுத்துக்கொள்ளுங்க..'' தன் கையிலிருந்த காகித உறையொன்றைத் தஸ்லீமிடம் மீரான் நீட்டினன்.

தஸ்லீம் தான் கனவு காண்கிறேனு என ஒருகணம் நினைத்தார். மெதுவாகக் கையில் கிள்ளிப்பார்த்தார். வலித்தது.

''ஏன் யோசிக்கிறீங்க? வேலையை இழந்து நீங்க படுகிற கஷ்டத்தை நான் கேள்விப்பட்டேன். உங்க மகள்கூட பரீட்சை எடுக்கப் பணம் இல்லாம வீட்டோடு இருக்குதாமே. அதனுல் தான் எனக்குக் கிடைத்த இரண்டாயிரத்தில் பாதியை உங்களுக்குத் தர முடிவுசெய்தேன். கடையிலே என்னோட அன்புகாட்டி வேலே பழக்கித்தந்தது நீங்கதானே. நான் தனிக்கட்டை. எனக்கு எதற்கு இரண்டாயிரம்...? இதை வாங்குங்க...!''

மீரானின் வேண்டுகோளை மறுக்க அவர் விரும்பவில்லை. அவர் அந்தப் பணத்தை வாங்கினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரான் பணம் கொடுத்ததையும் அவர்களின் உரையாடல்களையும் கண்ட கேட்ட அந்த வீட்டிலுள்ள அனைவரும் ஒவ்வொரு சிந்தனையில் ஆழ்ந்தனர்.

'ஆயிரம் ரூபாவையும் பெற்றுக்கொண்டு இந்த நரகத்தை விட்டே போயிடனும்' மூமினு நினைத்தான்.

வீட்டிலுள்ள யாருக்கும் தெரியாமல் மாட்டிக்கொண்டுள்ள பிரச்சினையொன்று தொடர்பாக முஸம்மிலுக்குப் பணம் தேவைப்பட்டது. 'இதில் கணிசமான தொகையைத் தான் பெற்றுக்கொள்ளவேண்டும்' என அவன் எண்ணினான்.

'இதைப் பாவித்துத் தனக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்க்க மாட்டார்களா..?' பாத்திமா ஏங்கினாள்.

'புதுப் பாவாடைகளும், சட்டைகளும் கிடைக்கலாம்' என மற்ற உள்ளங்கள் எதிர்பார்த்தன.

'பல நாட்களாகத் தன் மனதில் நின்று தன்னை ஆட்டுவிக்கும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த ஆண்டவன் மீரான் மூலமாக இந்தப் பணத்தை அனுப்பியிருக்கிறான்' என சல்மா எண்ணினாள்...

தஸ்லீமை அனைவரும் மொய்த்தனர். அவர் இப்போது காய்த்த மரம். வௌவால்கள் வலியவே போயின.

★ ★ ★

அடுத்தநாள் காலை —

கடந்த ஒரு மாதமாக மரண அமைதியுடன் காட்சிதந்த அந்த வீடு என்றும் இல்லாதவாறு கலகலப்பாக இருந்தது.

மீரான் கொடுத்த ஆயிரம் ரூபாவையும் வாப்பா என்ன செய்யப்போகிறார் என்பதை அறிய சகலரும் துடித்தனர்.

பணத்தைக் கையளித்துவிட்டு மீரான் சென்றபின் தங்கள் பிரச்சினைகளுடன் அவர்கள் தஸ்லீமை நெருங்கினர். அவர் யாருக்கும் பிடி கொடுக்கவில்லை. நாளைக்கு யோசிக்கலாம் என்று மட்டும் சொன்னார்.

சல்மா தனது திட்டத்தை முழுமையாகக் கூறவில்லை. என்றாலும் அந்தப் பணத்தைக்கொண்டு ஏதாவது தொழில் செய்யவேண்டும் என்பதை மட்டும் கூறிவைத்தாள்.

கடந்த இரவு அவர்களில் பலருக்கு நித்திரை வரவில்லை. தங்களுடைய எண்ணங்களைப் பூர்த்திசெய்ய அவரிடமிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை எவ்வாறு பிடுங்கலாம் என்பதையிட்டு தங்களுக்குள் ளேயே ஆராய்ந்துகொண்டிருந்தனர்.

மரியம் எழுந்ததும் எழாததுமாக அந்தப் பணத்தில் ஐம்பது ரூபாவைத் தருமாறு தஸ்லீமிடம் கேட்டாள்.

''எதற்காக ..?''

''வீட்டிலே சமைப்பதற்கு ஒன்றும் இல்லே. நேரத்தோட முஸம்மிலே மார்கட்டுக்கு அனுப்பி சாமான்கள் வாங்கணும்''

தஸ்லீம் பணம் நிரம்பிய காகித உறையைப் பிரித்து ஐம்பது ரூபா தாள் ஒன்றை எடுத்து மரியத்திடம் நீட்டினார்.

மரியம் ரூபா நோட்டைப் பெறுவதற்குள் வேறொரு கை நீண்டுவந்து அந்த நோட்டை வெடுக்கெனப் பிடுங்கியது.

இருவரும் ஏககாலத்தில் திரும்பிப்பார்த்தனர். சல்மா ஆத்திரமே உருவாக நின்றாள்.

''உம்மா, உன்னேவிட்டு இந்தப் பழக்கம் போகவே போகாதா ..? வீட்டுக்குள் ஐந்து சதம் வந்தாலும் அதை உடனேயே செலவழித்துத் தின்றுவிடுவதுதான் உன் கொள்கை. இந்தப் பணத்தை என்ன செய்வது என்பதைப்பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லே அதற்கிடையில் ஒவ்வொரு தாளாக உருவி செலவழித்தால் நம் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? நாலு நாட்கள் நல்லா சாப்பிடுவதில் என்ன இன்பம் இருக்கு ..? பணம் செலவழியும். பணம் தீர்ந்ததும் பிரச்சினைகள் அப்படியே தொடரும்''

''சமையலுக்கு வீட்டிலே ஒண்ணும் இல்ல. அவைகளே வாங்காவிட்டால் எதைச் சாப்பிடுவது?'' மரியம் கேட்டாள்.

''முதலில் பணத்தை என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்போம். அப்புறம் சாமான்கள் வாங்கலாம். அப்படித்தான் வாங்குவதென்றாலும் அதற்கு முஸம்மில்தானு அகப்பட்டான்? அவன் ஊதாரி. நீ காசைக் கொடுத்தா அவனுகத் தின்று தீர்த்திடுவான். வாப்பா, இந்த நோட்டை அந்தப் பணத்தோட வைங்க... எல்லோரும் ஒன்றுகூடி இதை எப்படிச் செலவழிப்பது என்று தீர்மானிக்கலாம்''

மகளின் செயல் மரியத்துக்குப் பிடிக்கவில்லேபோலும். முகத்தை வெடுக்கென நீட்டியவாறு வாசலுக்குச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 9 —

மூமினா கூறியவைகளை அனைவரும் கேட்டனர்.

அவளுடைய கூற்றில் புதிதாக எதுவும் இல்லை.

மாப்பிள்ளைக்குப் பேசிய சீதனப் பணத்தில் பாக்கியாக உள்ள இரண்டாயிரத்தில் தஸ்லீமிடம் உள்ள ஆயிரம் ரூபாவை அவளுக்குத் தந்தால் அதைப் பெற்றுக்கொண்டு தான் போய் விடுவதாக அவள் கூறினாள்.

இந்த ஆலோசனை தஸ்லீமுக்குப் பிடித்ததாக இருந்தது.

பழியாகக் கிடக்கும் அவளையும் பிள்ளைகளையும் எப்படியாவது கணவனிடத்தில் ஒப்படைத்தால் போதும் என நினைத்தார்.

எனினும்,

சல்மாவின் யோசனையைக் கேட்காமல் அவர் ஒரு முடிவுக்கு வர விரும்பவில்லை.

''சல்மா, நீ என்னே சொல்றே? ஏதோ தொழில் தொடங்கலாம் என்றாயே?''

தான் இருந்த பாயில் துருத்திக்கொண்டிருந்த பன் ஒன்றைப் பிடுங்குவதும் பொருத்துவதுமாக விளையாடிக்கொண்டிருந்த சல்மா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

மூமினா கூறியவற்றை அவள் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள்.

''வாப்பா, இந்த வீட்டிலே நாம எல்லோரும் எத்தனை பேர் இருக்கிறோம்?'' கனைத்தவாறு கேட்டாள்.

''ஒன்பதுபேர்''

''காலிதீனைத் தள்ளுங்க. அப்போ எட்டுப்பேர். இரண்டு ஆண்கள். ஆறு பெண்கள். இத்தனை நாட்களும் இவர்கள் எல்லோருக்குமாக உழைத்தது ஒரேயொரு ஆள். அது நீங்க. உங்களுடைய இரண்டு கால்களையும் கைகளையும் நம்பி மற்றவங்க சும்மா இருந்தாங்க. இப்போ உங்களுக்கு வேலை போயிடுச்சி. வீட்டிலே அத்தனைபேருமே பட்டினி. அதனாலே ஒருவர் உழைக்கிற இந்த வழக்கத்தை மாற்றி, வீட்டிலுள்ள அத்தனைபேருமே உழைக்கணும் என்ற முறையை செயல்படுத்தணும் என்பதுதான் எனது திட்டம். காலிதீனைத் தவிர்ந்த ஏனைய எட்டுப்பேரும் அவர்களுடைய பதினாறு கைகள், கால்கள், எட்டு மூளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைப் பயன்படுத்தி உழைத்து ஏன் இந்தக் குடும்பத்தை முன்னேற்றமுடியாது என்பதுதான் என் கேள்வி''

''நீ கூறுவது எனக்கு சரியா புரியல்ல''

''புரியும்படியா சொல்றேன். உங்க நண்பர் மீரான் தந்த ஆயிரம் ரூபாவை மூலதனமாகக்கொண்டு ஏதாவது தொழில் தொடங்குவோம். அதிலே வீட்டிலுள்ள அத்தனைபேருமே இரவு பகலாக ஈடுபடுவோம். காலிதீனைத்தவிர மற்றவங்க பாடசாலைக்குப் போகத்தேவலே. எல்லோருமே வீட்டிலே இருந்து தொழில் செய்யட்டும்''

''நீதான் படிப்பை விட்டுட்டே. அதற்காகத் தங்கச்சிமாரும் படிப்பை விடணுமா?'' மூமினு இடைமறித்துக் கேட்டாள்.

''வீட்டிலே இரவு பகல் பட்டினி. ஸ்கூலுக்கு அணிந்து போக உடுப்பில்ல. பசி வயிற்றுடன் எப்படிப் படிப்பது? முதவிலே நம்முடைய பொருளாதார நிலையை உயர்த்தி வீட்டிலே படிப்பதற்கான வசதியை ஏற்படுத்தணும்''

''உன்னுடைய யோசனை சரியாத்தான் படுது. என்ன தொழில் தொடங்கலாம்?'' தஸ்லீம் அமைதியாகக் கேட்டார்.

''நெசவுத் தொழிலைத் தொடங்கலாம். ஆரம்பத்தில இரண்டு தறிகளை வாங்கலாம். எனக்கும் பாத்திமாவுக்கும் நெய்யத் தெரியும். மூமினுவும் மற்றவர்களும் நூல் சுற்றலாம். நெய்த சாமான்களை வாப்பா விற்கப்போகலாம். மூஸம்மில் பொறுப்பெடுத்தால் நூல் வாங்குவது, டை பண்ணுவது, பாவு ஓடுவது போன்றவற்றைச் செய்யலாம். காலப்போக்கிலே மூமினுவும் றஸானுவும் பாயிஸாவும் நெய்யப் பழகிட்டா அவங்களுக்கும் ஒவ்வொரு தறி வாங்கிக் கொடுத்திடலாம். மாஹிர் மாஸ்டர் இதிலே நல்ல அனுபவம் உள்ளவர். அவருடைய உதவியையும் பெற்றுக்கொள்ளலாம். இப்படியே நாம் இரவுபகலாகக் கஷ்டப்பட்டு உழைத்தா, நம் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். மூமினு மாப்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை உழைத்தே பெற்றுவிடலாம். நீங்க ஒத்துழைத்தா நமக்கு விடிவுகாலம் இருக்கு'' எனக் கூறியவள் சற்று நிறுத்திவிட்டுத் தொடர்ந்தாள்.

''என்னுடைய திட்டம் பிடிக்கலேன்னு, இந்த ஆயிரம் ரூபாவையும் மூமினுவிடம் கொடுத்து அவ பிரச்சினையை முடிங்க. நாமெல்லாம் வீட்டிலே முடங்கிக்கிடந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கலாம்''

மூமினுவுக்கு மூக்கில் கோபம் எழுந்தது. தன்னுடைய திட்டத்தில் இவள் குறுக்கே வருகிறுளே என நினைத்தாள்.

''வாப்பா, அவள் சொல்றுப்போல அந்த ஆயிரம் ரூபாவையும் தறியிலே போடுங்க. அந்தத் தொழிலைப்பற்றி நமக்கு எது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுமே தெரியாது பாவில் சிக்கு உண்டானா முழுப் பணமும் நட்டமாகும். அப்பதான் உங்க அருமை மகளின் யோசனையின் பலன் தெரியவரும்'' என்முள் ரூமினு.

''ரூமினுவுக்கு முழுப் பணத்தையும் கொடுக்கக்கூடாது. பாதியை எனக்குத் தரணும்'' என்றான் ரூஸம்மில்.

''உனக்கு எதுக்கடா பணம்?''

''எனக்குத் தேவையில்லையா? எனக்கு அவசரமா ஐநூறு ரூபா தேவையிருக்கு. அதை நீங்கதான் தரணும். காரணம் சொல்லமாட்டேன்''

''போடா, உனக்கு ஒரு சதமும் தரமாட்டேன். மரியம் உன் யோசனை என்ன?''

''நான் எதைச் சொல்லலாம்?''

''வாப்பா, எதுக்காக யோசனை செய்றீங்க? பிரச்சினைகளுக் குள்ளேயே வாழறது உங்களுக்கு விருப்பமா?'' என்முள் சல்மா.

தஸ்லீம் நீண்டநேரம் சிந்தித்துவிட்டுக் கூறினுர்.

''சல்மா, நீ சொல்வதை நான் அப்படியே ஏற்றுக்கொள் கிறேன். நாம் ஒவ்வொருவரும் உழைக்கணும். பெண்பிள்ளையான நீயே முன்வரும்போது நான் ஏன் பின் நிற்கணும்? எனக்குத் தெரிந்த ஒருவரிடம் தறி விற்பனைக்கு இருக்கு. அதிலே இரண்டை இப்போது வாங்கிவாறேன். முழுப் பணமும் முதலில் கொடுக்கத் தேவையில்லை. தறியுடன் வாங்கவேண்டிய மற்ற உபகரணங் களுக்கு ஒரு லிஸ்ட் தயாரித்துக்கொடு'' அவர் குரலில் உறுதி தொனித்தது.

ரூமினு இதை எதிர்பார்க்கவில்லை.

''வாப்பா, சிலவங்க முட்டுப்பட்டாத்தான் பாடம் படிப் பாங்களாம். அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவங்க நீங்க. ஏதோ உங்க இஷ்டம். இவளுடைய பேச்சைக்கேட்டுக் காசைக் கரியாக் கப்போறீங்க'' என்முள் வெறுப்பாக.

''வாப்பா, அவ கிடக்கிமு. சுயநலக்காரி. தறி போட்டா எங்கே நாமும் உழைக்கவருமோ எனக் கவலைப்படுகிமு. சும்மா இருந்து சாப்பிட்டுப் பழக்கப்பட்டவ. இனிமே இந்த வீட்டிலே யாரும் சும்மா இருக்கமுடியாது. நாம அத்தனைபேருமே நம்ம வறுமைக்கு எதிராகப் போராடப்போகிமும்'' என்று ஆவேச மாகக் கூறிய சல்மா —

''வாப்பா, நீங்க போய்த் தறியைப் பார்த்திட்டுவாங்க. வரும் வழியிலே மாஹிர் மாஸ்டரைக் கண்டு வீட்டுக்குக் கொஞ் சம் வந்திட்டுப் போகச்சொல்லுங்க'' என்முள்.

தஸ்லீம் வெளியே போக எழுந்தார்.

மாஹிர் திரும்பவும் வீட்டுக்கு வருவான் என்பதை அறிந்த பாத்திமா ஏனே மகிழ்ச்சியில் திளைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

மாஹிர் கடந்த ஒரு மாதமாகப் பலமுறை சல்மாவை நினைத்துப்பார்த்தான். இந்த இடைவெளியில் அவனுடைய வாழ்க்கையில் பல சம்பவங்கள் நடந்திருந்தன. அவைகளில் முக்கியமானது அவனது திருமணப் பிரச்சினை.

சல்மாவை அவன் நினையாத நாளில்லை எனலாம். பரீட்சைக்குப் பணம் கட்டாமல் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டாளே என்ற எண்ணம் ஆரம்பத்தில் அவனுக்கு இருந்தாலும், காலப்போக்கில் அது வேறு ரூபத்தில் அவனுள் தலைகாட்டத் தொடங்கியது.

அவளின் அறிவு, கல்வியில் காட்டிய ஊக்கம், பாட நேரங்களில் அவள் தொடுக்கும் ஆக்கப்பூர்வமான கேள்விக் கணைகள், அவளது தன்மானம், ஏழ்மையிலும் இன்பம் காணும் பண்பு, தனக்குக் கிடைப்பதை மற்றவர்களுக்குத் தியாகம் செய்யும் இயல்பு ஆகியவை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவன் அவளை அடிக்கடி நினைப்பதாலோ என்னவோ பல சந்தர்ப்பங்களில் அவள் அவனுடன் கனவில் கதைத்தாள், கதைகள் எழுதிய கொப்பிகளைப் பரிமாற்றம் செய்தாள். நிலத்தைப் பார்த்து நாணம் கலந்து புன்னகைத்தாள்.

இப்போது சில நாட்களாக இந்த எண்ணம் அவனுள் அதிகரித்தது. அவளை அகஸ்மாத்தாக எங்கேயாவது சந்திக்க முடியாதா என அங்கலாய்த்தான்.

சல்மாவின் வீட்டுக்கு அவன் சென்ற தினம், அந்த வீட்டைப்பற்றியும், அதில் வாழ்பவர்களைப்பற்றியும் ஓரளவு அவனால் அறியமுடிந்தது. அந்த வீட்டின் பொறுப்புக்களை ஏற்று நடத்தக் கூடிய அவள் முடங்கிக்கிடக்கிறாளே எனப் பலமுறை அவன் வேதனைப்பட்டதுண்டு.

மாஹிருடைய தகப்பன் ஊரின் பெரிய போடியார். சமீபத்தில் ஒருநாள் அவருக்குக் காய்ச்சல் அடித்தது. காய்ச்சல் அதிகரிக்கும்போது அவர் நாக்குழறினார். அப்போதெல்லாம் அவர் கதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது சரிவர விளங்காமல்போனாலும், கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது தன்னுடைய ஒரே மகன் இன்னும் திருமணம் செய்யாமல் இருப்பதையிட்டுத்தான் கதைக்கிறார் என ஊகிக்கமுடிந்தது.

பெற்றோரைப்பற்றி மாஹிருக்கு எப்போதுமே ஒரு பெருமை. தகப்பனிடத்தில் அவனுக்குப் பாசம் அதிகம்.

அந்த ஊரிலேயே கூடிய நிலபுலன்களுடன் வாழ்ந்தவர் அவனுடைய தகப்பன் உதுமாலெவ்வைதான்.

அவரிடம் கைகட்டிச் சேவகம் புரிந்தவர்கள் பலர். ஒவ்வொரு தடவை அறுவடை முடிந்ததும் இலாபத்தில் கணிசமான பங்கொன்றை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார். பெருநாள் காலங்களில் புதுத் துணிமணிகள் வாங்கிக் கொடுப்பார். அவருடைய பெருநாள் சாப்பாடு யாராவது கூலியாள் ஒருவனுடைய வீட்டிலேயே அவருக்குக் கிடைக்கும்.

உதுமாலெவ்வைக்கு மூன்று பெண்களும் ஓர் ஆணும். பெண்கள் திருமணம் செய்துவிட்டனர்.

ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பெண்களுக்குத் திருமணம் செய்ததால், அவர் பெரிதும் முறிந்துவிட்டார்.

பல ஏக்கர் நிலங்களை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. ஒவ்வொரு பெண்ணுக்கும் புதுவீடு கட்டி நகைகள் செய்து ரொக்கமாகக் கைக்கூலி கொடுத்து மாப்பிள்ளைகளை எடுத்தார்.

இப்போது அவரிடம் உள்ளது ஐந்து ஏக்கர் நிலம் மட்டுமே.

அவரிடம் இருந்த நிலங்கள் போய்விட்டாலும், அந்த ஊரின் பெரிய போடியார் இன்றும் அவர்தான்.

ஊரில் உள்ள வயதுபோனவர்கள் மட்டுமல்ல, இளசுகளும் அவரை மதித்தனர்.

போடியாரின் மகனை இந்த மாஹிரில் பலர் கண்போட்டிருந்தனர். அவர்களில் முன்னனி வகித்தவர் சின்ன முதலாளி என நமக்கு அறிமுகமான சுபைர்.

சுபைர் கடையிலிருந்து களவாடிய பணத்தில் வீடு, நிலபுலன்கள் வாங்கியிருந்தார். அவருக்கு ஒரு ஆணும், ஒரு பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். பெண் தக்காளிப் பழம் போல... நல்ல அழகாக இருப்பாள்.

சுபைர் தன் மகளுக்கு மாஹிரை மணம்முடிக்க விரும்பி ஒருநாள் உதுமாலெவ்வையிடம் கேட்டுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதுமாலெவ்வை காய்ச்சலால் படுத்திருக்கும்போது சுபைர் பலமுறை அவரைப் பார்க்க வீட்டுக்கு வந்தார். அவரின் வருகையின் நோக்கத்தை மாஹிர் அறிவான்.

சுபைரைப்பற்றி அவன் நன்கு அறிந்திருந்தான்.

அவர் கடையில் செய்த மோசடிகள்... அப்பாவியான தஸ்லீம் பழிவாங்கப்பட்டமை... ஒன்பதுபேர் கொண்ட குடும்பம் பட்டினியால் வாடும் பரிதாப நிலைக்குக் காலாயிருந்தது, களவெடுத்த பணத்தால் வீடு கட்டியமை ஆகியவைகள் அவனுக்குத் தெரிந்து இருந்தன.

''வாப்பா, அவரைப்பற்றி உங்களுக்குத் தெரியாது'' எனத் தொடங்கி, சுபைரின் மகளைத் திருமணம் செய்யுமாறு அவனைக் கேட்டபோது, அவனுக்கு அவர் தொடர்பாகத் தெரிந்தவைகளைக் கூறினான்.

''மாஹிர், நீ சொல்வது எல்லாமே பொய். பெரிய முதலாளி மோசடி செய்வதாக இவருக்குத் தெரிந்துதான் தன்னுடைய பங்கைப் பிரித்துக்கொண்டாராம். அதுதான் உண்மை''

பாவம்! அவருடைய மனம் தூய்மையானது. யார் எதைச் சொன்னாலும் அப்படியே நம்பிவிடுவார்.

சுபைர் தன்னை நல்லவனாகக் காட்டிக்கொள்ளச் சொன்ன பொய்களை அவர் நம்பிவிட்டார்.

''நீங்க விசாரிக்காமல் முடிவுக்கு வந்துட்டீங்க. சுபைரைப் பற்றிய உங்க எண்ணம் தவறானது. அவரிடம் இருக்கும் சொத்துக்கள் மோசடி செய்த பணத்தால் தேடியவை. அவர் ஓர் அயோக்கியன். அவரின் மகளை நான் மணப்பதா?'' என்றான் மாஹிர்.

அவன் இப்படி அவரை மடக்குவான் என அவர் நினைத்திருக்கவில்லை. அவனை எப்படியாவது சரிக்கட்டிவிடலாம் என அவர் எண்ணியிருந்தார்.

* *

யாருக்கும் தெரியாமல் தனது மனைவியை அனுப்பி சுபைரின் மகளைப் பார்த்து வைத்திருந்தார்.

சுபைரின் மகளின் அழகைப்பற்றி அவர் மனைவி கூறிய போது மெய்மறந்து கேட்டார்.

ஆனால், மாஹிர் அவளை மணக்க மறுத்தது வேதனையாகி விட்டது. சுபைருக்குக் கொடுத்த வாக்கை எண்ணிப்பார்த்தார்.

''அப்படியென்றால்... நீ யாரை மணப்பதாக உத்தேசம்?'' என்றார் மாஹிரைப் பார்த்து.

மாஹிர் நிமிர்ந்து தந்தையைப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கேள்விக்கு அவன் உடனடியாகப் பதில் அளிக்க விரும்பவில்லை.

'யாரை மணம் முடிப்பதாக உத்தேசம்?' அவன் அக் கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.

அவனை மாப்பிள்ளை கேட்டுப் பலர் வந்தனர். யாருக்கும் அவன் முடிவு கொடுக்கவில்லை.

'நான் யாரைத் திருமணம் செய்ய நினைக்கிறேன்?'

இந்தக் கேள்வியைப் பலமுறை அவன் மனம் கேட்டது. இதற்கு விடை காண சிந்தனைக் குதிரை பல இடங்களுக்கு அலைந்தது. ஈற்றில் ஓர் இடத்தில் நின்றது.

அது சல்மாவின் வீடு.

'அப்படியென்றால் நான் சல்மாவை விரும்புகிறேனா? இதனால்தான் அடிக்கடி அவளை நினைக்கிறேனா?' பதில் தெரியாது திணறினான் அவன்.

நாள் செல்லச்செல்ல சல்மாவின் எண்ணம் அவன் மனதில் வளர்ந்துகொண்டே சென்றது.

அவளை வீட்டுக்குச் சென்று பார்த்து வருவோமா? எனப் பலமுறை அவன் நினைத்ததுண்டு. செயல்படுத்த மனம் துணியவில்லை.

இன்னும் அவன் அவளையே நினைத்துக்கொண்டிருந்தான். அப்போதுதான் வாசலில் தஸ்லீம் கூப்பிடும் சத்தம் கேட்டது.

அவர் கூறியவைகள் தேனாக அவனுக்கு இனித்தன.

'சல்மா வரச்சொல்லி இருக்கிறாள். என்னுடன் கதைக்க வேண்டுமாம். என்ன கதைக்கப்போகிறாள்?'

அவளை நினைத்து கற்பனையில் மூழ்கினான் அவன்.

★ ★ ★

சல்மா கூறியவைகளை மாஹிர் கேட்டான்.

அவளைப்பற்றிய எண்ணம் அவன் எண்ணத்தில் மலையாக உயர்ந்தது.

அவளுடைய எதிர்காலத் திட்டங்களை விபரித்தபோது வைத்த விழி வாங்காமல் அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

வீட்டில் முடங்கிக்கிடக்கும் ஒரு சராசரி பெண்ணுக்கு இவ்வளவு அறிவா என வியந்தான் மாஹிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சார், பதினெட்டு கால்களும் கைகளும் எதற்காக ஓய்ந்து கிடக்கணும்? ஏன் எங்க குடும்பம் சும்மா இருந்து பசியுடனும் பட்டினியுடனும் காலம் கடத்தனும்? அதனுல்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்''

சல்மா கூறி முடித்தபோது மாஹிரின் மனதில் புதுமைப் பெண்ணுக அவள் தோன்றினுள்.

சல்மா தனது குடும்பத்தின் வறுமையை ஒழிக்க எதிர்நீச்சல் போட ஆயத்தமாகியது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவளின் முயற்சிக்குத் தன்னுலான சகல உதவிகளையும் செய்யவேண்டுமென அவன் நினைத்தான்.

மாஹிர் வீட்டுக்கு வந்து நீண்ட நேரமாக சல்மாவுடன் கதைத்துக்கொண்டிருப்பதைப் பாத்திமா கதவிடுக்கினூடாகப் பார்த்துக்கொண்டு நின்ருள்.

அவனின் களை சொட்டும் முகம், அலையலையாகப் படர்ந்து கிடந்த தலைமயிர், அரும்பு மீசை, செதுக்கிவிட்ட நாசி, அங்கும் இங்கும் அலைபாயும் பிரகாசமான கண்கள் ஆகியவை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன.

மாஹிர் வீட்டுக்கு வரப்போகிருன் என அறிந்த வேளையி லிருந்து ஒருவித தவிப்புடன் அவள் நின்ருள்.

ஏனே தெரியாது அவனை முதன்முதல் சந்தித்த நாளிலிருந்து அவனுடைய சிந்தனையிலேயே பாத்திமா மூழ்கியிருந்தாள்.

மாஹிரின் குடும்ப நிலைமைக்கும் தங்கள் வீட்டு நிலைமைக் கும் இடையில் பல ஆயிரம் மைல்கள் இடைவெளி இருப்பது அவளுக்குத் தெரியும்.

அந்த இரு துருவங்களும் ஒன்றையொன்று நெருங்கமுடி யாது. எனினும் அவளுக்கு ஒரு நப்பாசை.

அவர்களை யாராவது, எந்த சக்தியாவது ஒருங்கிணைத்து விடாதா?

''சார், இந்த முயற்சியில் நான் ஈடுபட நினைத்ததே உங்களை நம்பித்தான். இதன் வெற்றியோ தோல்வியோ உங்க ளின் ஒத்துழைப்பில்தான் தங்கி இருக்கிறது''

''சல்மா, உன்னுடைய திட்டத்தை விரிவாகச் சொல்''

''முதலிலே நாங்க இரண்டு தறிகள் வாங்குவதாக இருக் கிருேம். எனக்கு ஒன்று, பாத்திமா தாத்தாவுக்கு மற்றது. நாங்க இருவருமே தறி நெய்வதில் கற்றுக்குட்டிகள். பாவு ஓடுவது, கோர்ப்பது, நெறிப்படுத்தி நெய்வது ஆகியவை எங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு அரைகுறையாகத்தான் தெரியும். ஆகவே பாடசாலை நேரம் தவிர்ந்த ஓய்வுவேளைகளில் நீங்க இங்கேவந்து எங்களுக்கு உதவிசெய்து தரணும்''. கூறிவிட்டு அவனுடைய முகத்தைத் தைரியமாக உற்றுப்பார்த்தாள்.

''சல்மா, ஸ்கூல்லே நீ படிக்கும்போது உன் திறமையில் பலமுறை நான் வியந்ததுண்டு. நீ பரீட்சை எடுக்காமல் விட்ட போது உன்னைவிடக் கூடுதலாக நான் வேதனைப்பட்டேன். வறுமை உன்னை முடக்கிவிட்டதே எனப் பல நாட்கள் நான் எண்ணியிருக்கிறேன். நீ ஒருத்தியாக உன் குடும்பத்திலுள்ள அத்தனைபேரையும் இயக்கி வறுமையை ஒழித்துக்கட்ட நினைப் பதையிட்டு நான் ஆச்சரியப்படுகிறேன். நீ எதிர்பார்ப்பதைவிடக் கூடுதலாகவே என் ஒத்துழைப்பு உனக்குக் கிடைக்கும்''

அவன் கூறியது சல்மாவுக்கு பெரிதும் ஆறுதலாக இருந்தது

''ரொம்ப நன்றி சார் '' கூறியவாறு எழுந்து அடுத்த அறைக்குள் சென்று திரும்பிவந்தாள்.

''இந்தாங்க சார்... நான் உங்களிடம் கடனாகப் பெற்ற பணம்''

ஒரு காகித உறையை அவனிடம் நீட்டினுள்,

''வேண்டாம், அதைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம். நீயே வைத்துக்கொள்''

''இல்லை சார், பணம் இருக்கும்போதே கடனைத் திருப்பிக் கொடுத்திடணும். இல்லாவிட்டால் கடன்காரியாக உங்களை நான் சந்திக்கணும்''

மாஹிர் பணத்தைப் பெற்றான். அவளுடைய தன்மானத் தால் அவள் மேலும் ஒருபடி அவனுள்ளத்தில் உயர்ந்து நின்றாள்.

சல்மா மாஹிரிடம் அந்தக் கடித உறையைக் கொடுத்த போது அவளுடைய விரல்கள் அவனுடைய விரலில் பட்டன. அவனுடைய மயிர்க்கால்கள் திடீரெனச் சில்லிட்டன. வயிற்றி னுள் இருந்து பந்துபோன்ற ஏதோ ஒன்று மேலெழுந்து தொண் டைக் குழியை அடைப்பதைப்போல் ஓர் உணர்வு.

''உன்னுடைய தொழிலை எப்போது தொடங்குவதாக உத்தேசம்?''

''வருகிற வெள்ளிக்கிழமை. அன்று மத்தியானம் பதினைந்து ஏழைகளுக்கு உணவழிப்பதாக எண்ணியிருக்கிறேன்''

''அதென்ன பதினைந்து?''

''எங்க மூமினு ராத்தாவின் பிள்ளைகளையும் சேர்த்தா நாங்க பதினொரு ஏழைகள். மிச்ச நாலுபேர் பக்கத்து வீட்டிலே வசிக்கிற ஏழைகள். எல்லாமா பதினைந்து''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹிர் வாய்விட்டுச் சிரித்தான். இதுவரை கதவிடுக்கில் ஒளிந்து நின்ற பாத்திமாவுக்கும் சிரிப்பை அடக்கமுடியாமல் போய்விட்டது. வாய்விட்டுச் சிரித்தேவிட்டாள்.

சிரிப்பு ஒலியைக் கேட்ட மாஹிர் அண்ணாந்து கதவிடுக்கை நோக்கினான். அங்கு நின்ற பாத்திமாவை அவன் கண்டான். இதையறிந்த அவள் மெதுவாகக் கதவினுள் மறைந்தாள்.

''உன்னுடைய பக்கத்துவீட்டு நாலுபேரில் ஒன்றைக் கழித்துவிட்டு என்னைச் சேர்த்துக்கொள்''

''முடியாது சார். உங்களைச் சேர்க்கமுடியாது. உங்களுக்கு எங்கவிட்டு சாப்பாட்டிலே கலந்துகொள்ளத் தகுதியில்லை''

''என்ன! தகுதியில்லையா?''

''உங்க வர்க்கம் வேறே, எங்க வர்க்கம் வேறே. இது ஏழைகளுக்காகப் போடுற விருந்து. அதனாலே உங்களை அழைக்க முடியாது''

''என்னையும் ஏழையாக நினைத்துவிடேன்''

அப்போது... மறைந்துநின்ற பாத்திமா என்ன நினைத்தாளோ தெரியாது சல்மாவைக் கூப்பிட்டாள்.

''சல்மா, அவங்களைக் கட்டாயம் சாப்பிட வரச்சொல். அவங்களை நம்பித்தான் நாம தொழிலைத் தொடங்கப்போகிறோம்'' என்றாள்.

''சார், என் பாட்னர் உங்களை விருந்துக்கு அழைக்கிறாள்''

''யார் உன் பாட்னர்?''

''என் தாத்தா பாத்திமா''

''ஓ! கட்டாயம் வருவேன்'' கூறிவிட்டு மாஹிர் எழும்ப எத்தனிக்கையில் பாத்திமா தேநீர் கொண்டுவந்து சல்மாவிடம் கொடுத்தனுப்பினாள்.

வெளியே சென்றிருந்த தஸ்லீம் வீட்டுக்கு வந்தார்.

''தம்பி. இப்பத்தான் வந்தீங்களா?'' எனக் கேட்டவர் ''சல்மா நீ அதிர்ஷ்டசாலி'' என்றார் சல்மாவைப் பார்த்து.

சல்மா தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

''நான் தறி வாங்கப்போனேன் இல்லையா? யாரோ இரண்டு தறிகளுக்கு ஓடர் கொடுத்து இன்று எடுத்துப்போவதாகச் சொல்லி இருந்தாங்களாம். காலையில் வந்து தறிகளை எடுக்க வசதியில்லை என்றாங்களாம். நமக்கு வசதியாகப்போயிற்று அவைகளைக் கரத்தையிலே போட்டு அனுப்புவாங்க. வரும்போது வழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே என் பழைய நண்பன் ஒருவனைச் சந்தித்தேன். நாம நெய்கிற எல்லா சீலைகளையும் அவன் வாங்குவதாகச் சொன்னான். தேவையானால் அட்வான்ஸ் தருவதாகவும் கூறினான்''

இதைக் கேட்டதும் சல்மாவின் கண்களில் கண்ணீர் பெருகியது. அது இதுநாள்வரை அவளின் கண்களில் பெருக்கெடுத்த வேதனைக் கண்ணீர் அல்ல, ஆனந்தக் கண்ணீர்.

''வாப்பா! மீரான் நாநா அந்தப் பணத்தை வலியவே தரும்போது நான் நினைத்தேன். நம்ம குடும்பம் முன்னேற மீரான் மூலமாக ஆண்டவன் அதை அனுப்பிவைச்சிருக்கான் என்று. நாம இரவுபகலாகக் கடுமையாக உழைத்தா இந்த ஊரிலே ஓஹோன்னு இருக்கத்தான் போறோம்''

மகளின் தைரியத்தை நினைத்துத் தஸ்லீம் மனதுக்குள் மகிழ்ந்தார்.

''சல்மா, ஒரு மரக்காலையிலே அறுத்துக் கழித்த புறவட்டுகள் கொஞ்சம் வாங்கிப்போட்டிருக்கேன். ஓலைமட்டையும் வாங்கிட்டா தறிகளைப் போட ஒரு குடிலை ஏற்பாடு செய்திடலாம்''

''எல்லாம் சரியா வந்தா வருகிற வெள்ளிக்கிழமை இந்த வீட்டிலே தறிச்சப்தம் கேட்குமாக்கும்'' என்றாள் சல்மா சிரித்தவாறே.

மாஹிரும் தஸ்லீமும் சிரித்தனர். கதவிடுக்கினுள் நின்ற பாத்திமாவும் சிரித்தாள்.

★ ★ ★

வெள்ளிக்கிழமை. பிற்பகல் மூன்று மணி இருக்கும். அந்த வீட்டில் ஒரே கலகலப்பு.

சல்மாவின் வீட்டில் தறி போடுவதாகக் கேள்விப்பட்டு பெண்கள் வந்திருந்தனர். சிறுவர் பட்டாளங்கள் புழுதியைக் கிளப்பியவாறு விளையாடினர்.

மாஹிர் 'ஜும்ஆ'த் தொழுகை முடிந்து வந்தவன் பகல் உணவை அங்கேயே முடித்துக்கொண்டு பாவைத் தறியில் வைத்து நெறிப்படுத்துவதில் முனைந்து நின்றான்.

கடந்த இரண்டு நாட்களாக மரியத்துக்கும் மற்ற சகோதரிகளுக்கும் ராட்டினத்தில் நூல் சுற்றும் முறையைச் சல்மா காட்டிக்கொடுத்தாள்.

கடந்த இரவு ஆள்மாறி ஆளாக ஐம்பது பேண்களில் நூலைச் சுற்றி வைத்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூமினு எந்த வேலைகளிலும் பங்குபெருமல் கடுகடுத்த முகத்துடன் இருந்தாள். முஸம்மிலும் தன் வெறுப்பைக் காட்டி அவர்களை உதாசீனம் செய்தான்.

''சல்மா, தறியெல்லாம் செட்பண்ணியாச்சு. இனி நெய்ய ஆரம்பிக்கலாம்'' என்ருன் மாஹிர்.

''சற்றுப் பொறுங்க சார். இதை ஆரம்பிக்க மீரான் தாஞவை அழைத்திருக்கிறோம். அவர் இப்ப வந்திடுவார்'' சல்மா வாய் மூடவில்லை. அதற்குள் மீரான் அங்கு வந்துவிட்டான். கூடவே பள்ளிவாசலின் இமாமான மௌலவி ஒருவரும் வந்திருந்தார்.

''வாங்க வாங்க'' வந்தவர்களைத் தஸ்லீம் வாய்நிறைய வரவேற்ருர்.

''மரியம், ஊதுபத்தியைக் கொளுத்து'' தஸ்லீம் சுறுசுறுப் பாஞர்.

ஊதுபத்தியின் மணம் பரவியது.

''நீங்க பாத்திஹாவை ஓதுங்க''

மௌலவி கைகள் இரண்டையும் விரித்து அரபு மொழியில் பாத்திஹா ஓதிஞர்.

பிரார்த்தனைகள் முடிந்ததும் மீரான் தறியில் ஏறிக் கைப் பிடியைப் பிடித்து முதல் அடியை அடித்தான். சல்மா கண்களை மூடியவாறு நின்ருள். அவள் கண்களில் ஆனந்தக்கண்ணீர்.

பின்னர் —

பெண்கள் இருவரும் தறிகளில் ஏறினர்.

சட்டில்கள் அங்கும் இங்கும் வேகமாகப் பறக்கத்தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 11 —

குமாரலெவ்வைப் போடியார் வராந்தையில் கிடந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து சுடச்சுடக் கோப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தார்.

''கலிமா, அப்படியே வட்டாவையும் எடுத்துவா'' மனைவியிடம் உரத்துக் கூறினார்.

பாக்கையும், வெற்றிலையையும் வட்டாவில் நிரப்பி கலிமா எடுத்துவந்தாள். கூடவே படிக்கத்தையும் எடுத்துவர அவள் மறக்கவில்லை.

சாய்மணைக்குப் பக்கத்தில் கிடந்த ஊஞ்சலில் உட்கார்ந்து பாக்கை நறுக்கியவாறு ''மாஹிர் சம்பந்தமாக என்ன முடிவு செய்திருக்கிறீங்க?'' எனக் கேட்டாள் கலிமா.

''உன் மகன் சம்மதம் கொடுப்பதாகக் காணோமே. எந்த இடத்தைச் சொன்னாலும் மறுத்தேவிடுகிறானே''

''அதற்காக விட்டுவிடுவதா? கல்யாணம் செய்ய விரும்புறவங்க வலியவே வாய்விட்டுச் சொல்வாங்களா? நீங்களாப் பார்த்து இடமொன்றை ஒழுங்குசெய்து, தாலியைக் கட்டச்சொன்னாக் கட்டாமலா விடப்போறான்?''

சுண்ணாம்பு பூசிய வெற்றிலையை அவரிடம் நீட்டினாள்.

''நல்லா சொன்னே. அவன் என்ன பெண்பிள்ளையா அப்படியெல்லாம் நாம் சொல்வதற்கு. அவன் படித்தவன். நம்மைவிட நாலும் தெரிந்தவன். அவனாக ஒரு நல்ல முடிவுக்கு வருவான். ஏன் கலிமா, நீதான் அவனிடம் மெல்லக் கேட்டுப்பாரேன். ஆண்பிள்ளைகள் தகப்பனிடம் சொல்லக் கூச்சப்படுவாங்க. நான் கேட்டா எதையாவது சொல்லி சமாளிக்கிறான்''

''கேட்டுப்பார்க்கிறேன். அவன்தான் உங்க பிள்ளையாச்சே. உங்ககிட்ட சொல்லாதவன் என்னிடம் சொல்லவாபோகிறான்? அங்க யாரோ வர்றாங்க'' என்றவாறு சடாரென எழுந்து சரிந்து கிடந்த முந்தானையை இழுத்துப் போர்த்தியவாறு வீட்டினுள் நுழைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியார் வாசலைப் பார்த்தார். சின்ன முதலாளி சுபைர் அங்கு நின்றார்.

''வாங்க''

சுபைர் ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

கடதாசியில் சுற்றி கையோடு கொண்டுவந்த இரண்டு சீப்பு யானை வாழைப்பழத்தை அங்குகிடந்த சிறிய ஸ்டூலில் வைத்தார்.

''போடியார், நீங்க ஒரு முடிவும் சொல்லி அனுப்பல்லே. அதுதான் கேட்டுட்டுப் போகலாம்னு'' சுபைர் பீடிகையுடன் ஆரம்பித்தார்.

''நானும் என்னாலே முடிஞ்ச அளவு அவன்கிட்டே சொல்லிப்பார்த்தேன். அவன் ஒரு முடிவும் தாறதா இல்லையே. நான் என்ன செய்ய?''

''போடியார், என் மகளிலே என்ன குறையிருக்கு? புடை போட்ட தங்கம்போல அவ்வளவு அழகா இருக்கா. நான் தாறதா சொன்ன பத்தாயிரம் காணிண்ணு பதினையாயிரம் தாறன். இரண்டுபோகம் விளைகிற காணி பத்து ஏக்கர் தாறன். பத்தாயிரம் ரூபா நகையிருக்கு. எல்லாமே உங்க மகனுக்குத்தான். இப்படி எல்லாமே தாறப்போ எதற்காக மறுக்கணும்?''

போடியார் சிந்தித்தார். இதுவரை மாஹிரைக் கேட்டுவந்த இடங்களில் இவ்வளவு பெரும் சீதனம் தருவதாக யாரும் வரவில்லை.

திடீரென மாஹிர் சுபைரைப்பற்றிக் கூறியவைகள் ஞாபகத்திற்கு வந்தன.

''இதோ பாருங்க... உங்க வீட்டிலே பெண் எடுக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லே. என் மகன் மட்டும் சம்மதிப்பதாக இல்லே. என் மகன் மட்டும் சம்மதிச்சா... இந்தக் கல்யாணத்தை நடத்திடலாம்''

''நான் வந்ததே அதற்காகத்தானே. மகனை சம்மதிக்க வைப்பது உங்க பொறுப்பு. எனக்கு நீங்க எப்படியாவது மாப்பிள்ளையை ஒழுங்குசெய்து தந்தால் சரி''

அப்போது வாசற் கேட்டைத் திறந்தவாறு மாஹிர் உள்ளே நுழைந்தான்.

சல்மாவின் வீட்டில் உலாவும் வறுமைப் பேயை விரட்டி அடிக்கத் தொழிலொன்று தொடங்கி இருப்பதையும், தன் மனதில் அணையா விளக்காகச் சுடர்விடும் சல்மா என்ற அந்த ஒளிக்கதிரை அடிக்கடி தரிசிக்கத் தனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் எண்ணிவாறு அவன் வந்தபோது எதிரே சுபைர் தகப்பனுடன் உரையாடுவது எரிச்சலை ஏற்படுத்தியது அவனுக்கு.

'இந்த மோசடிக்காரன் எதற்காக இங்கு வந்திருக்கிறான்?'

மாஹிர் வீட்டினுள் நுழைந்ததும் சுபைர் மரியாதைக்காக எழுந்துநின்று ஊஞ்சலில் அமர்ந்தார்.

'என்ன மரியாதை வேண்டிக்கிடக்கிறது? எல்லாமே போலி' மாஹிர் நினைத்தான்.

''மாஹிர், இவங்க உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்காங்க'' என்றார் போடியார்.

''எதற்காக என்னைப் பார்க்கணும்?'' குரலில் கடுகடுப்பு.

''உன் முடிவு தெரிந்தாகணுமாம்''

''எதைப்பற்றி?''

''அவர் எத்தனை தடவை நம் வீட்டுக்குவந்து அலைகிறார். முடிப்பதானால் சம்மதம் கொடுக்கணும் இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லிடணும்''

''அதாவது இவருடைய மகளை நான் முடிக்கணும். அப்படித்தானே? அது எப்படி முடியும்?''

''ஏன் முடியாது?''

''அவர் எந்த முகத்துடன் என்னை மாப்பிள்ளை கேட்டு வந்தார் என அவரிடம் கேளுங்க. அவர் எப்படிப் பணம் உழைத்தாரு, வீடு கட்டினாரு என்பதையெல்லாம் கேளுங்க. அவரது மோசடிக்கு உடந்தையாகாத காரணத்தால் அவரால் பழி வாங்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை என்று கேளுங்க. அவரிடம் பணம் இருக்கலாம். ஆனா அது என் கால் தூசிக்குத்தான் சமம் என்று அவரிடம் சொல்லுங்க''

மாஹிர் கூறக்கூற சுபைர் கோபத்தால் கொதித்தார். அவன் இப்படி முகத்திற்கு நேரில் கதைப்பான் என அவர் எதிர் பார்க்கவில்லை.

''போடியார், உங்க மகனை நாவை அடக்கிப் பேசச்சொல்லுங்க. நான் அவரைக் கல்யாணம் கேட்டுத்தான் வந்தேன். அவருடைய ஏச்சுக்களைக் கேட்க வரல்ல''

''உண்மையைச் சொன்னா எதற்காகக் கோபப்படணும்? மோசடி செய்தா... குட்டு வெளியே வரத்தான்செய்யும்''

''போடியார், உங்க மனுக்குக் கதைக்கத்தெரியாது. பெரிய மனுசர்களோட கதைப்பதற்கு உங்க மகன் இன்னும் படிக்கல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக உங்க மகன் வருந்தப்போகிறான். நான் வருகிறேன்'' என்று கூறியவாறு சுபைர் எழுந்தார்.

''வாப்பா, இவருடைய மோசடிக்கு உடந்தையாகாம வேலையை இழந்த அப்பாவி தஸ்லீம்போல ஆள் நானில்ல... என அவருக்கு சொல்லிவைங்க. அதோட இந்தப் பார்சலையும் எடுத்துப்போகச் சொல்லுங்க...''

சுபைர் எழுந்து வெளியேறினார்.

'இவன் எங்கே திருமணம் செய்யப்போகிறான் என்பதையும் பார்த்துவிடுவோம்' என்று மனதுக்குள் கறுவிக்கொண்டு நடந்தார் அவர்.

★ ★ ★

சல்மாவின் வீட்டில் தறிவேலை தொடங்கி ஐந்து நாட்களாகிவிட்டன.

மாஹிர் ஓய்வுநேரங்களை சல்மாவின் வீட்டிலேயே கழித்தான். அறுந்துகிடக்கும் நூல்களைக் கட்டிக்கொடுத்தான். மிதிகளைச் சரிசெய்து கொடுத்தான். தொய்ந்துகிடக்கும் ஹீல்ஸ்களை சரிப்படுத்தினான்.

சல்மா பாடசாலையில் தறி நெய்யப் பழகிய அனுபவம் போதாமல் இருந்தது. பாத்திமாவும் திறமை பெற்றிருக்கவில்லை. தறிகளில் கிடந்த இரண்டுமே சாரி பாவுகள்.

இருவரும் நெய்த துணிகளில் பல இடங்களில் இழை போடிக்கிடந்தன. அழுத்தம் போதாமல் இருந்தது.

இரண்டு நாட்களிலேயே கை வலிப்பதாகப் பாத்திமா முணுமுணுத்தாள்.

''பாத்திமா. நீ இப்படிச் சொல்லலாமா? எத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியில் நாம் இதைத் தொடங்கி இருக்கிறோம். நாம் சோர்ந்துபோய்விட்டால் மூமினு கைகொட்டிச் சிரிப்பான். வறுமையை எதிர்த்து இரவுபகலாகப் போராடுவதாக நாம் சங்கற்பம் பூண்டுள்ளோம். கை வலித்தால், தோள் கடுத்தால் சுடுநீரில் ஒத்தடம் கொடு'' சல்மா உற்சாகம் ஊட்டினாள்.

இரண்டு நாட்கள் மாஹிர் அங்கு வரவில்லை. அவனுக்குப் பாடசாலையில் தவணைப்பரீட்சை. நிறைய வேலை இருந்தது.

இன்று அவன் சல்மாவின் வீட்டுக்குச் சென்றான்.

பாத்திமாவின் தறியின் நீட்டை அசைக்க இயலாதவாறு இருந்தது. நூற்றுக்கணக்கான நூல்கள் அறுந்துகிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சல்மா, என்ன உன் ராத்தா தறியை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறு ? நெய்யவே முடியாதவாறு இருக்கே''

''அவ உங்களைத்தான் சார் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறு. இப்படி ஆகும் என நானும் நினைக்கவில்லை. இப்ப என்ன செய்யலாம்..?''

பாத்திமாவின் பாவு இப்படி ஆகிவிட்டதில் அவளுக்கு உள்ளூரத் துக்கம். பாவு பழுதாகிவிட்டால் எத்தனை நஷ்டம் ஏற்படும் என நினைத்தாள்.

''இப்போது ஒன்றும் செய்யமுடியாது. அறுத்துவிட்டுத் திரும்பக் கோர்க்கவேண்டும். சரிவர நெசவு செய்யத் தெரியாமல் நெய்யத்தொடங்கிஞல் இந்த நிலைதான் ஏற்படும்'' என்றுன் மாஹிர் பாத்திமாவைக் கடைக்கண்ணுல் பார்த்தவாறு.

அவன் இவ்வாறு கூறியது பாத்திமாவுக்கு வெட்கத்தை ஏற்படுத்தியது. அவள் தலையைக் குனிந்துகொண்டாள்.

''சல்மா, நான் உன் தறியில் சில நாட்களுக்குப் பழகுகிறேன். அதுவரை என் தறி சும்மா கிடக்கட்டும்'' என்றுள் பாத்திமா.

''சல்மா, உன்னுடைய ராத்தா அவவுடையதைப் பழுதாக்கியது மட்டுமல்லாமல் உன்னுடையதையும் பழுதாக்கப் போருவாக்கும்'' என்று சிரித்தவாறே மாஹிர் கூறியபோது பாத்திமாவும் கீழே குனிந்தவாறு வாய்க்குள் சிரித்தாள்.

''சார், பாத்திமா சொல்லுறபடி செய்துடலாம். நாங்கள் ஆள்மாறி ஆள் இதிலே பழகுகிறோம். அதன்பின் ஆளுக்கொரு தறி எடுத்துக்கொள்ளலாம்''

''நீ விரும்பியபடியே செய்யலாம். இதிலும் உன் ராத்தா சரியாகப் பழகாவிட்டால் பிறகு அடித்துத்தான் பழக்கவேண்டி வரும்'' கடைக்கண்ணுல் மீண்டும் பாத்திமாவைப் பார்த்தான் மாஹிர்.

பாத்திமாவுக்கு சிரிப்பு பொத்துக்கொண்டுவந்தது. அடிக்கடி அவன் ஹாஸ்யமாகக் கதைப்பது அவளுக்குப் பிடித்திருந்தது. 'தறியைச் சரிவர நெய்யப் பழகாவிட்டால் இவர் அடிப்பாராமே. அவருடைய கையால் அடிபடுவதற்காகவாவது நான் பழகாவிட்டால் என்ன?' என நினைத்தாள்.

மாஹிர் சேர்ட்டைக் கழற்றித் தறியில் கொழுவிவிட்டு, பெனியனுடன் நின்று பாத்திமாவின் தறியில் நூல்களைக் கத்தரித்து முடிந்துகொண்டு நின்றுன். திரண்டிருந்த தோள்களும், சதைப் பிடிப்புள்ள கைகளும் அவனுடைய அழகை உயர்த்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டின. பாத்திமா மனதால் அவனைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். 'நான்மட்டும் ஒரு பணக்கார வீட்டில் பிறந்திருந்தால் இப்படி உள்ளூர ஏங்கவேண்டி ஏற்பட்டிருக்குமா ?'

மாலைப்பொழுது மங்கி இருள் பரவத்தொடங்கியது. வௌவால்கள் சிறகடித்தவாறு பறந்தன. தூரத்தே தந்திக் கம்பிகளில் சிட்டுக்குருவிகள் அடைக்கலம் தேடின.

''சல்மா, இன்றைக்கு இவ்வளவு போதும். உன்னுடைய தறி நெய்வதற்கு ஏற்றாப்போல ஒழுங்காக உள்ளது. உனது ராத்தாவின் தறியை நாளை சரிசெய்து தருகிறேன், ஆனால் அது இருக்கும் நிலையில் சரிசெய்யலாம் என்பது சந்தேகம்தான்''

மாஹிர் சென்றுவிட்டான். மூமினு அங்கு வந்தாள்.

''என்ன முதலாளியம்மா. துரை சொல்லிவிட்டுப் போறாரே விளங்கிச்சா. அஞ்சு நாளையிலே முன்னூறு ரூபா நட்டம். அடுத்த அஞ்சு நாளையிலே உங்கட பாவும் பழுதாகிட்டாத் தறிகளை விறகுக்கு எடுத்துடலாம். உம்மா, நீ நீண்ட நாட்களாக விறகு வாங்கல்லன்னு முணுமுணுத்தாயே... இப்போ உன் செல்ல மகள் ஆயிரம் ரூபாவிற்கு விறகு வாங்கியிருக்கிறாள். இன்னும் அஞ்சு நாள் பொறு, விறகெல்லாம் குசினிக்கு வந்திடும்''

இதைக் கேட்டதும் சல்மாவின் முகத்தில் கோபம் வெடித்தது.

''ராத்தா, இதை நாங்க தொடங்கியதே உனக்குப் பிடிக்கல்லை. நாங்க எப்போ பிழை விடுவோம் எனக் காத்துக்கொண்டிருக்கிறே! இப்போ சந்தர்ப்பம் வந்ததும் களித்துக்கொட்டுறே! உன் பணத்திலே நாங்க ஒன்றும் தறி போடல. நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டிரு'' என்றாள்.

''ஏன்டி... அது என் பணமில்லாம வேறே யாரிட பணம் ? அது எனக்குச் சேரவேண்டிய பணம்டி. வாப்பாவை தாஜா பண்ணி என் பணத்தை வாங்கி இப்படி நாசமாக்கிப்போட்டியே! பெட்டைக் கோழி கூவிப் பொழுது விடியாதடி''

''இப்ப என்ன நட்டம் வந்துட்டு...? மாஹிர் மாஸ்டர் சொல்லிட்டுப் போறார், நாளைக்கு வந்து சரிக்கட்டித் தாறதாக. அதன்பிறகு பாரேன். ஆரம்பத்திலே இதெல்லாம் ஏற்படத்தான் செய்யும்'' என்றாள் பாத்திமா சல்மாவுடன் சேர்ந்து.

''யாருடி அந்த மாஹிர் மாஸ்டர்? குமருப்பிள்ளைகள் இருக்கிற வீட்டில அவனுக்கு என்னடி வேலை? பொம்பிளை பார்க்கத்தான்டி அவன் இங்கே வாறான்'' என்றாள் மூமினு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ராத்தா, வாயை அடக்கிப் பேசு. நீ பிறந்த வயிற்றிலே தான் நாங்களும் பிறந்தோம். உனக்கு உள்ள ரோசம், மரியாதை எங்களுக்கும் இருக்கு. ஊரார் கதைப்பதற்கு முதலிலேயே நீ எதையாவது கிளப்பிவிட்டு எங்க முயற்சியைத் தடைபண்ணி விடாதே. நாங்க உழைக்க நினைப்பது எங்க குடும்பத்தின் வறுமைப் பிணியை விரட்டத்தான். நீ எதையாவது கதைக்கப்போய் அது மாஹிர் மாஸ்டரின் காதில் விழுந்து அவர் வராமவிட்டுட்டா எல்லாமே பாழாய்ப்போயிடும். தயவுசெய்து நீ தலையிடாதே'' என்று சல்மா கூறியபோது அவள் குரல் கரகரத்துக் கண்களில் நீர் திரைகட்டியது.

''மூமினு, நானும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு தான் நின்றேன். நீ உள்ளே போ. லாபமோ நட்டமோ அதைப் பிறகு பார்க்கலாம்'' என்றார் தஸ்லீம் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தவாறு.

''வாப்பா, பாவு பழுதா போயிட்டு. அவங்க நெய்த சாரிகளும் இழை ஓடிப் பழுதாயிட்டு. அவைகளை யாரும் விலை கொடுத்து வாங்கமாட்டாங்க. நாம் அங்கேயும் இங்கேயும் கடனுக்கு வாங்கி விற்கமுடியாத பொருட்களை எதற்காக உற்பத்தி செய்யணும்?'' என்றாள் மூமினு மீண்டும்.

அப்போது அவர்களின் வீட்டருகில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து யாரோ இறங்கிவருவது அந்த மங்கலான இருட்டில் தெரிந்தது.

''நஜீமா...!'' தறியிலிருந்து இறங்கியவாறு சல்மா கூவினாள்.

''என்ன சல்மா, ஸ்கூலுக்கு முழுக்குப் போட்டுட்டே. நான் ஒருத்தி இருப்பதையே மறந்திட்டே? எப்போதாவது ஸ்கூலுக்கு வந்து எங்களையெல்லாம் பார்த்துட்டுப் போகக் கூடாதா?'' என்றாள் சல்மாவை அணைத்தவாறே நஜீமா.

''நஜீமா. உள்ளே வா. ஆறுதலாகக் கதைக்கலாம்''

''வீட்டினுள் போகமுன் உன் பெக்டரியைப் பார்க்கவேண்டாமா? ஸ்கூலெல்லாம் உன்னைப்பற்றிய கதையாகவே இருக்கிறது''

''என்னைப்பற்றிய கதையா! அப்படி நான் என்ன தவறு செய்தேன்?''

நல்லது செய்தால் நாலுபேர் கதைப்பார்கள். கெட்டது என்றால் ஊரே கதைக்கும் என்பது அவளுக்குத் தெரியும். 'ஸ்கூல்ல எல்லோரும் என்னைப்பற்றிக் கதைப்பதானால் ஏதோ நடந்திருக்கணும்' என அவள் நினைத்தாள்.

''நீ ஒன்னும் செய்யல்ல, எல்லாம் மாஹிர் மாஸ்டர் தான்'' என நஜீமா கூற சல்மாவின் சந்தேகம் இன்னும் வளர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாஹிர் மாஸ்டர் இங்கு வருவதையிட்டு யாராவது கதைகட்டி விட்டார்களோ? மூமின்கூட ஏதோ கதைத்தானே. ஊரார் கதைக்கக் கேட்கவாவேண்டும்? எங்களது கஷ்டங்கள் இவர்களுக்கு என்ன தெரியும்? வாப்பா மோசடிக்கு உடந்தையாக மறுத்ததாலே அவரே மோசடி செய்ததாகக் கதை கட்டி விட்டார்கள். மாஹிர் மாஸ்டரைப்பற்றியும் ஏதும் கதை கட்டி விட்டார்களோ? அப்படி இருந்தால் அவர் இனிமேல் இங்கு வரமாட்டார். நான் தொழிலை மூடிவிடவேண்டியதுதான். எல்லாம் என் தலைவிதி! நான் பெட்டைக்கோழி. நான் கூவி எங்கே விடியப்போகிறது......?'

சல்மா மனதுக்குள் அழுதாள்.

''நஜீமா... மாஹிர் மாஸ்டரால் என்னைப்பற்றி ஏன் கதைக்கிறாங்கள்?''

''நேற்றுக் காலை அஸெம்பிளி நேரத்தில் மாஹிர் மாஸ்டர் உன்னைப்பற்றி அரைமணி நேரம் லெக்சர் அடித்தார். உன்னுடைய வீட்டில் உள்ள அத்தனைபேருக்கும் தொழில் கொடுக்க நீ ஒரு 'பெக்டரி' தொடங்கி இருப்பதாகவும், சிறுகத் தொடங்கிய இது நாளாவட்டத்தில் பெரியதாகுல் இந்தப் பகுதியில் உள்ள பலருக்கு வாழ்வு கொடுக்குமென்றும் சொன்னார். உன் முயற்சி ஏனைய மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்றும் சொன்னர். நீ எதிர்நோக்கும் கஷ்டங்களைக் கூறி மற்ற மாணவிகள் உன் முயற்சிக்கு ஆதரவு தரவேண்டுமென்றும் கூறினர்''

இதைக் கேட்டதும் சல்மாவின் மனம் பூரித்தது. உண்மையில் மாஹிர் மணம்வீசும் ஒரு மலர்தான்.

''நஜீமா, நான் இதைத் தொடங்கக் காரணமாய் இருந்தவரே அவர்தான். அவருடைய ஒத்துழைப்பை நம்பித்தான் நான் இதைத் தொடங்கினேன். எனைப்போன்ற ஏழைகள் முன்னுக்கு வரப் பாடுபடும் அவர் நல்லா இருக்கணும்''

''சல்மா, உனக்குத் தெரியுமா? நம்ம ஸ்கூல்ல இருந்து அதிபர் உட்பட ஒரு பெரிய பட்டாளமே உன்னைப் பார்க்க இங்கு வர இருக்கிறாங்க. உன்னிடம்தான் அவங்க இனி சாரி வாங்கப்போறாங்களாம்''

''அப்படியா! ஆனா அவங்க இப்போ வராம ஒரு மாதம் கழித்து வரட்டும். அப்போது எங்க தொழிலைச் சற்று விரிவாக்கி விடுவோம். நீ அதிபரிடம் கூறி அவங்க இப்போது வருவதைத் தடைசெய்துடு. ஏனெனில் நாங்க இதுவரை நெய்தவை பாவனைக்கு உதவாமல் பழுதாப்போய்விட்டன. அவைகளை நான் மற்றவர்களிடம் காட்ட விரும்பல்ல''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதற்கென்ன. அதிபரிடம் கூறிவிடுகிறேன். எங்கே உன் பழுதான சாரிகள்? எடு பார்க்கலாம்''

நஜீமாவை விட்டினுள் அழைத்துச்சென்று நெய்து வைத்திருந்த ஐந்து சாரிகளையும் விளக்கொளியில் காட்டினுள்.

''பரவாயில்லையே. சில இடங்களில் இழைகள் அறுந்துவிடுகின்றன. ஆரம்பத்தில் இப்படி ஏற்படத்தான் செய்யும். இவைகளை என்ன செய்யப்போகிருய்?'' கேட்டவாறு ஒவ்வொரு சாரியாக எடுத்துப் பார்த்தாள் நஜீமா.

''என்ன செய்யலாம்? இவைகளை விற்கமுடியாது. நட்டம் தான்''

''நீ கவலைப்படாதே! இவைகளை நானே எடுத்துக்கொள்கிறேன். வூலி சாரி வாங்குவதற்காக வாப்பா எனக்கு முன்னூறு ரூபா தந்திருக்கிருர். அந்த முன்னூற்றுக்கும் இந்த ஐந்து சாரிகளையும் எனக்குத் தா'' என்று கூறிய நஜீமா முன்னூறு ரூபாவை நீட்டினுள்.

''வேண்டாம் நஜீமா. இவைகளை நீ உடுக்கமுடியாது. நான் எப்படியாவது குறைந்த விலைக்கு இவைகளை விற்றுவிடுவேன். காசை நீயே வைத்துக்கொள்'' பணத்தை வாங்க மறுத்தாள்.

''அட பைத்தியமே! விற்கிறவங்கதான் பொய்களைச் சொல்லிப் பொருட்களை விற்க முயற்சிப்பாங்க. இங்கே வாங்குகிற நானல்லவா பலாத்காரமாக வாங்கவேண்டி இருக்கு'' தன் கையிலிருந்த ரூபா நோட்டுக்களைச் சல்மாவின் கையில் திணித்தாள்.

மரியம் கொண்டுவந்த தேநீரை நஜீமா குடித்தாள். பாத்திமா சாரிகளைப் பார்சலாகக் கட்டிக்கொடுத்தாள்.

''நான் வருகிறேன் சல்மா''

நஜீமா துள்ளிக்குதித்து நடந்துசெல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த சல்மாவின் கண்களில் நீர் திரையிட்டது.

நஜீமாவோ 'எப்படித்தான் இந்தக் காசைச் சல்மாவுக்குக் கொடுப்பேன் என்று சிந்தித்தேன். நல்லகாலம் பழுதான சாரிகள் உதவிவிட்டன' என நினைத்து மகிழ்ந்தவாறே நடந்துகொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

சுமார் மூன்று மாதங்கள் கடந்துவிட்டன.

மாஹிர் அடிக்கடி சல்மாவின் வீட்டுக்குப் போவதைக் குறைத்துக்கொண்டிருந்தான். இருந்து இருந்துவிட்டு எப்போதாவது ஒருமுறை அங்குசென்று பார்த்துவிட்டு வருவான்.

அவனுடைய நண்பர்கள் சிலர் அவன் அடிக்கடி அங்கு போவதைப்பற்றிச் சற்றுப் பிழையாகக் கதைத்ததே இந்த முடிவுக்குக் காரணமாக அமைந்தது.

நாளாந்தம் சல்மாவின் முகத்தைப் பார்க்காமலும் அவனால் இருக்கமுடியவில்லை.

நாளாக ஆக அவன் திருமணம் செய்யவேண்டுமென்ற பெற்றோரின் நச்சரிப்பு அதிகரித்தது. அதைவிடக் கூடுதலாக சல்மா தொடர்பான எண்ணம் அவனுள்ளத்தில் ஆலவிருட்சமாகக் கிளைகள் விட்டு வளர்ந்தது.

திருமணம் செய்வதானால், அது சல்மாவாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவன் இப்போது வந்துவிட்டான்.

சமீபத்தில் ஒருநாள், அவனுடைய தாய் அவன் திருமணம் செய்யாமல் இருப்பதன் காரணத்தைக் கேட்டு வற்புறுத்தினாள்.

''உம்மா, நீ இவ்வளவு வற்புறுத்துவதாலே சொல்கிறேன். நான் திருமணம் செய்வதானால் அது ஏழைப் பெண்ணாக இருக்க வேண்டும். அப்படியான ஒரு பெண்ணை எனக்குத் தெரியும். காலம் வரும்போது அதை நான் உன்னிடம் சொல்வேன்''

கலிமா அவனிடம் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவனது முடிவுக்கு அவள் குறுக்கே நிற்கமாட்டாள். அந்தப் பெண் யாரென அறிவதில் மட்டும் அடம்பிடித்தாள்.

அவனை மாப்பிள்ளை கேட்டு வருபவர்களின் எண்ணிக்கையும் நாளாக ஆக அதிகரித்தது.

சல்மா அவனை விரும்புகிறாளா என்பது அவனுக்குத் தெரியாது. அவன் அவளுடைய வீட்டுக்குப் போகும்போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் நடந்துகொள்ளும் பாங்கிலிருந்து அவனால் ஒன்றும் அறிய முடியவில்லை. அவள் தூர நின்றே அவனுடன் பழகினாள். 'சார்' என்று மரியாதையுடன் அழைத்தாள். அவனைக் காணும்போதெல்லாம் அடக்கத்துடன் நடந்துகொண்டாள்.

'சல்மா என்னைக் காதலிப்பாள் என்று எப்படி நினைக்க முடியும்? அவள் என்னுடைய அந்தஸ்தைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருப்பாள். அவளுடைய மூத்த சகோதரி பாத்திமாவுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்த நிலையில் சல்மா... திருமணத்திற்குச் சம்மதிப்பாளா?' மாஹிர் சிந்தித்தான்.

சல்மாவின் வீட்டுக்குப் போகாமல், அவளைப் பார்க்காமல் இருப்பதென்பது அவனைப் பொறுத்தவரை இயலாத காரியம். அதேநேரம் பெற்றோரின் தொல்லை வேறு.

இருதலைக்கொள்ளி எறும்பாக அவன் தவித்தபோது — மின்னல் கீற்றென அந்த முடிவு மனதில் பளிச்சிட்டது.

'என் எண்ணத்தை அவளிடம் தெரிவித்தால் நிச்சயம் சம்மதிப்பாள். அவள் சம்மதித்தால் விவாகப்பதிவு செய்து கொள்ளலாம். பாத்திமாவின் திருமணத்திற்குப்பின் அவளைத் திருமணம் செய்யலாம். இது நடந்துவிட்டால் கூச்சமோ வெட்கமோ இல்லாமல் அங்கு என்னால் போய்வரமுடியும்'

இதைப்பற்றி அவன் மீண்டும் மீண்டும் சிந்தித்தான். இந்த முடிவுதான் அவனுக்குச் சரியெனப்பட்டது.

இப்போது அவனுக்குள்ள பிரச்சினை, இதை எப்படி அவளிடம் வெளிப்படுத்துவது என்பதுதான்.

பலவழிகளில் சிந்தித்தான். ஒன்றுமே சரியானதாகப் படவில்லை.

சல்மா பாயிஸா மூலமாக அனுப்பிய கதைக்கொப்பி இன்னும் அவன் வசம் இருப்பது ஞாபகத்துக்கு எழுந்தது.

'சல்மா கடைப்பிடித்த யுக்தியை நானும் பின்பற்றலாம். பரீட்சைக்குப் பணம் கட்ட கதை மூலமாக அவள் கடன் கேட்டாளே! அதே யுக்தியை நானும் கையாளப்போகிறேன். அந்தக் கதையைத் தொடர்ந்து எழுதுவதன்மூலம் என் எண்ணத்தை வெளிப்படுத்தப்போகிறேன்'

கதைக் கொப்பியை எடுத்து சல்மா விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து எழுதத்தொடங்கினான்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டில்கள் போர்க் குதிரைகளைப்போல் அங்கும் இங்கும் பாய்ந்தன. நீண்ட வாள்களால் எதிரிகளை மாறிமாறி வெட்டுவது போல் அந்த நான்கு பெண்களும் கையில் பிடித்திருந்தகயிறு களை இயந்திர கதியில் மாறிமாறி அடித்தனர். போர் ஆயுதங் களைச் செய்து குவிக்க நெருப்பு உலைத் துருத்திகளைக் கொல்லர் கள் கைகளால் ஆட்டுவதுபோன்று மரியமும், மூமினுவும், வேறு இரு பெண்களும் ராட்டினத்தை ஆட்டிக்கொண்டிருந்தனர். தஸ்லீம் கிணற்றடியில் நூலுக்குப் பசை போட்டுக்கொண்டிருந் தார். மூஸம்பில் உதவியாக நின்றான்.

ஆம்! அவர்கள் இப்போது தங்கள் குடும்பத்தை வாட்டி வதைத்த வறுமைப் பேய்க்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டிருந் தனர்.

கடந்த மூன்றுமாத காலத்தில் தொழில் பல முன்னேற் றங்களைக் கண்டு இருந்தது. இரண்டு தறிகள் நான்காக ஆகி இருந்தன. நஸானுவும், பாயிஸாவும் பாடசாலைக்குப் போவதை நிறுத்திக்கொண்டு பகல் முழுதும் நெய்வதில் ஈடுபட்டிருந்தனர். இன்னும் இரண்டு தறிகளுககு ஓடர் கொடுத்திருந்தனர்.

காலிதீன் ஆரம்பப் பாடசாலைக்கு ஒழுங்காக, ஒழுங்கான உடைகளும் அணிந்து போய்க்கொண்டிருந்தான்.

நெசவு செய்யும் ஒவ்வொரு பெண்ணின் பெயரிலும் வங்கி யில் சேமிப்புக் கணக்குத் திறந்திருந்தனர். ஆடை நெய்வதால் நாளாந்தம் கிடைக்கும் கூலிப் பணத்தில் வீட்டுச் செலவுபோக மிகுதியை வங்கியில் போட்டுவைத்திருந்தனர்.

அதிகாலையில் சைனுச் சேவல் கூவும் ஒலிக்கு இப்போது அந்த வீட்டிலுள்ளவர்கள் எல்லோருமே எழும்பிப் பழக்கப்பட்டு விட்டனர்.

சைனுச் சேவலுக்குக்கூட இப்போது பொறுப்புக்கள் அதிகம். முன்னர் அங்கு நின்ற நாலைந்து கோழிகளுக்குப் பதிலாக இப் போது இருபது கோழிகள் மேய்ந்தன.

மூமினு தன் பிடிவாத குணத்தைவிட்டு சற்றுக் கீழிறங்கி அவர்களுடன் சேர்ந்துகொண்டாள். அவளையும் கணவனையும் மீண்டும் இணைப்பதற்கு முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன.

வீட்டில் மூன்று நேரமும் உலை பொங்கியது.

சென்றமாதம் சல்மாவின் பாடசாலையில் இருந்து ஆசிரியை களும் மாணவர்களும் வந்து பல நூறு ரூபாவிற்கு ஓடர் கொடுத் துச்சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டில் இப்போது எல்லோருமே சிரித்த முகத்துடன் இருக்கும்போது, பாத்திமாவின் முகம்மட்டும் ஏனோ வாடியிருந்தது. அவள் எதையோ பறிகொடுத்தவள் போலிருந்தாள்.

மாஹிர் அந்த வீட்டுக்கு வரும் நாட்களில்மட்டும் பாத்திமாவின் முகம் மலர்ந்து சிரிக்கும். ஏனைய நாட்களில் அது வாடிய மலராகிவிடும்.

பாத்திமாவின் மனம் ஓயாது மாஹிரைப்பற்றியே எண்ணியது. அவன் மறுதரம் எப்போது வருவான் என எதிர்பார்த்தது. அவன் வராவிட்டால்... என்று நினைத்து அவள் ஊமை உள்ளம் அழுதது.

அன்று இரவு...

பகலெல்லாம் வேலைசெய்த களைப்பால் எல்லோரும் நேரத்தோடு படுக்கையறைக்குச் சென்றனர். முன் அறையில் சல்மா மட்டும் சிக்காகிவிட்ட சில பேணகளை பிரித்துக்கொண்டிருந்தாள்.

வெளியே சென்ற தஸ்லீம் திரும்பிவந்தார்.

''போன காரியம் என்னாச்சு?'' மரியம் கேட்டாள்?

''இரண்டாயிரம் ரூபா இருந்தால் காரியம் முடியும்போல் இருக்கு. அவங்கிட வீட்டுக்கே பெண்ணை அனுப்பிவிடலாம்''

''பணத்துக்கு எங்கே போறது?... அவருக்கு மூன்றும் தாரம்தானே... இரண்டு தாரத்திலும் ஐந்து பிள்ளைகள் இருக்காமே?.. அந்தப் பிள்ளைகளை எல்லாம் வளர்க்கணும். கைக்கூலி வேறு கேக்கிறாங்க''

''நீ இப்படிச்சொல்றே...அவங்க கதை வேறமாதிரி. அவருக்குப் பெண் கொடுக்கப் பலர் ஆயத்தமாயிருக்காங்களாம்... நமது பெண் தறி நெய்கிறவள்தானே என்று இளப்பமாக் கதைத்தாங்க''

பெற்றோரின் உரையாடல் சல்மாவின் செவிகளிலும் விழுந்தது. தொடர்பற்ற அந்த உரையாடலிலிருந்து அவளால் சரிவர ஒன்றையும் புரிந்துகொள்ளமுடியவில்லை.

''உம்மா. வாப்பா எங்கே போயிட்டுவந்தாங்க?''

''பாத்திமாவுக்கு ஒரு கல்யாணம் சகதியாக வந்திருக்கு.. வாப்பா அங்கே போய்விட்டுத்தான் இப்போ வந்திருக்கார்''

''யாரும்மா மாப்பிள்ளை?...''

''அவரை உனக்குச் சொல்லி விளங்காது''

''ஏதோ மூன்றும்தாரம் என்று சொன்னியே?''

''ஆமா... ஏற்கனவே இரண்டு கல்யாணம் முடிச்சித் தீர்த்துவிட்டு இருக்கார்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவருக்குத்தான் பாத்திமாவைக் கொடுக்கத் திட்டமா? இதுவரை இரண்டு பெண்களை விவாகரத்து செய்தவரு. பாத்திமாவையும் முடிச்சிக் கொஞ்ச நாளிலே விட்டுட்டாருண்ணு... என்னம்மா செய்வது?... அவரிடம் பணம் இருக்குதாக்கும். அதுதான் இப்படி ஒவ்வொரு பெண்ணை முடிச்சித் தள்ளுறாராக்கும்'' என்றாள் சல்மா வெறுப்பாக.

''சல்மா வாயை மூடு!... உனக்கு ஒன்றும் தெரியாது. இந்த இடத்திலேயாவது சரியென்று சொன்னாங்களே. ஒரு பெண்ணை ஒப்பேத்தக்கூடிய நிலையிலேயா நாம இருக்கோம்? கிலம்கிலமாக வெடிச்சிப்போன வீடு. வீட்டிலே கிடக்கிற நாலு தறியைவிட அஞ்சுசதம் மேலதிகமாக் காசில்ல... கல்யாணம் கேட்டுப்போனா சீதனம் கேக்காங்க!... அப்படி இருக்க, வீடு வளவு, பணம் எதுவும் இல்லாம இரண்டாயிரம் ரூபாவோட இப்போ ஒப்பேத்தக்கூடியதாக இருக்கு'' என்றார் தஸ்லீம்.

''வாப்பா! நீங்க சொல்வதெல்லாம் உண்மைதான். ஏழை என்பதற்காக ஐந்து பிள்ளைகளோட இருக்கிற ஒருவருக்கு மூன்றும் தாரமாகக் கட்டிவைத்து வேடிக்கை பார்க்கணுமா? அவ உங்ககிட்டே கல்யாணம் செய்துதருமாறு கேட்டாளா? அவ தன்பாட்டுக்குத் தறி நெய்கிறு, அப்படியே கொஞ்சநாளைக்கு இருக்கட்டுமே''

''பெரிய நெசவு!... கல்யாணம் கேட்டுப்போனப்ப நெசவு செய்கிறவயென்று இளப்பமாக் கதைத்தாங்க...''

தன்னுடைய தொழிலை இளப்பமாகக் கதைத்ததைக் கேட்டதும் சல்மா போர்க்கோழியாக மாறினாள்.

''யார் வாப்பா கதைத்தாங்க?... அவங்கிட மானத்தை மறைப்பதற்காகத்தான் நாங்க நெய்துகொண்டிருக்கிறோம். செத்த சவத்தை வெட்டும் டாக்டர் தொழில் அவங்களுக்குப் பெரிசாத் தெரியுது. சீழ்வடியும் சிரங்கைச் சுத்தப்படுத்தி மருந்து கட்டும் தொழில் அவங்களுக்கு உயர்வாத் தெரியுது. ஆனா எங்க தொழில் அவங்களுக்கு இளப்பம்! நாங்க பகலெல்லாம் கஷ்டப்பட்டா கிடைக்கிறது பத்தோ பதினைந்துதானே! அதனாலே எங்க தொழிலில அவங்களுக்கு வெறுப்பு...'' மூச்சுவிடாமல் இரைந்தாள்.

''சரிசரி... போய்ப் படு. வீட்டில தீர்மானம் எடுக்கிறவங்க நாங்க. நாங்க யோசித்து ஒரு முடிவுக்கு வர்றோம்''

சல்மா வழக்கமாகத் தான் படுக்கும் பாயை விரித்துப் படுத்தாள். அவளின் மனதில் அமைதியில்லை. பாத்திமா மூன்றாந் தாரமாக வாழ்க்கைப்படுவதை அவளால் கற்பனைசெய்தே பார்க்க முடியாமல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் தாரம்! ஐந்து பிள்ளைகளை வளர்க்கவேண்டிய பொறுப்பு! ஆண்டவனே! என்ன கொடுமை இது! ஏழையாகப் பிறந்த குற்றத்திற்காகப் பாத்திமா இந்த வேதனைகளை அனுப வித்துத்தான் தீரவேண்டுமா ...?

நேரம் கரைந்தது —

வீட்டில் எல்லோரும் உறங்கிவிட்டனர். தூரத்தில் சுவர்க் கோழிகள் கிச்சிடும் ஒலி கர்ணகடூரமாகக் கேட்டது. தெருநாய்கள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதும் விட்டுவிட்டுக் கேட்டது.

இருந்தாற்போல்... யாரோ ஏங்கியழும் சத்தம் கேட்டது. சல்மா சத்தம்வந்த திசையை நோக்கி கண்களைத் திறந்துபார்த் தாள்.

மீண்டும் சத்தம். அவளுக்கு இரண்டு அடிகள் இடைவெளி யில் படுத்திருந்த உருவம் குலுங்குவது அந்த இருட்டில் தெரிந்தது.

சந்தேகமே இல்லை. பாத்திமாதான் அழுகிறாள். ஏன் அழுகிறாள்...? இந்த நள்ளிரவில் எதற்காக அழுகிறாள்...? திரும்பவும் பாத்திமா அழுவது அவளுக்குக் கேட்டது.

சல்மா மெதுவாக எழுந்து பாத்திமாவின் அருகில் சென் றாள். பாத்திமாவின் அழுகைக்குக் காரணம் கேட்டாள்.

அன்று இரவு தஸ்லீமும், மரியமும் கதைத்த அந்த மூன்றும் தார விடயம்தான் பாத்திமாவுக்கு அழுகையை ஏற்படுத்தியிருந் தது.

''அப்படி ஏதாவது நடந்தால் நீங்கள் என்னைப் பார்க்க முடியாது'' என்று பாத்திமா அழுகையின் மத்தியில் சல்மாவிடம் கூறினாள்.

பாத்திமா யாரையோ மனதிற்குள் விரும்புகிறாள் என்று சல்மா சந்தேகப்பட்டாள். சந்தேகத்தைப் பாத்திமாவிடமே கேட்டாள்.

''அப்படியென்றால் நீ யாரையாவது விரும்புகிறாயா?'' மெதுவாகக் கேட்டாள் சல்மா.

பாத்திமா பிகுபண்ணினாள். சல்மா வற்புறுத்தினாள். பாத் திமா மறுத்தாள். சல்மா விடவேயில்லை. ஈற்றில் பலத்த பிடிவாதத் தின் இடையே தன் உள்ளக்கிடக்கையைக் கூறியேவிட்டாள்.

''பாத்திமா! இதெப்படி நடக்கும்? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?'' சல்மா சப்தமிட்டே கேட்டு விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சல்மா, மெள்ளக் கதை. நான் முடிப்பதென்றால் அவரைத்தான் முடிப்பேன். அது நடக்காவிட்டால் எனக்குத் திருமணமே நடக்காது. இது சத்தியம்''

பாத்திமாவின் முடிவைக் கேட்டதும் சல்மாவின் தலை சுற்றியது.

உலகம் சுழல்கிறதா என்ன?

மனிதர்களை ஆண்டவன் உணர்ச்சிகளோடு படைத்து விட்டான். ஏழை பணக்காரன் என்ற பேதத்தை மனிதர்களே ஆக்கிக்கொண்டார்களே.

ஏழைகளின் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் இல்லையா? ஏழை பணக்காரன் என்ற வர்க்கத்தை வளர்த்தவர்கள் ஏழைகளின் எண்ணங்களைக் கட்டுப்படுத்த ஏன் எதையுமே கண்டு பிடிக்கவில்லை?

சல்மா சிந்தித்தாள். பொழுது புலரும்வரை அவள் சிந்தித்துக்கொண்டே இருந்தாள். அந்தச் சிந்தனைகளில் ஒன்றாவது மாஹிரையும், பாத்திமாவையும் ஒன்றாக இணைக்க அவளுக்கு ஒரு வழியைக் காட்டிக் கொடுக்கவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 13 —

அன்று சனிக்கிழமை. பாடசாலை விடுமுறைநாள்.

காலை ஆகாரத்தை முடித்துக்கொண்ட மாஹிர் கதைக் கொப்பியை எடுத்துத் தான் எழுதியவைகளை வாசித்துப்பார்த்தான்.

இதுவரை நூறு தடவைகளுக்குமேல் அவன் அதை வாசித்திருப்பான்.

இது அவனுடைய வாழ்வுப் பிரச்சினை. எப்போது சல்மா பாடசாலைக்குப் போகமுடியாமல் ஆகிவிட்டாள் என அறிந்தானோ, அப்போதே அவளுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவி செய்ய வேண்டுமென அவன் நினைத்திருந்தான்.

இப்போது அந்த எண்ணம் இந்த ரூபத்தில் நிறைவேறப் போகிறது என்பதை நினைக்கும்போது அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

'நான் சல்மாவை விரும்புவதை அறிந்ததும் அவள் என்ன நினைப்பாள்? எனது காதலை அவள் ஏற்றுக்கொள்வாளா? மறுத்து விட்டால் எனது அடுத்த நடவடிக்கை என்ன? அவளுடைய தகப்பனைக் கண்டு என் எண்ணத்தை அறிவிக்கமுடியாதா?'

கதைக்கொப்பியை எடுத்துக்கொண்டு சல்மாவின் வீட்டை நோக்கி நடந்தான்.

வழியில் அவனுடைய நண்பன் ஒருவன் இடைமறித்தான்.

''என்ன மாஹிர், உன்னுடைய வீட்டுக்குப் போகிறாயாக்கும்?''

''இல்லை. வீட்டிலிருந்துதான் வருகிறேன்''

''அது எனக்குத் தெரியும். இப்போது நீ போவதும் உன் வீடுதானே'' நண்பன் கண்சிமிட்டியவாறு கூறினான்.

''நீ என்ன சொல்கிறாய்?''

''அதுதான் ஊரெல்லாம் கதைக்குதே. ஊர் வாயை மூட உலைமூடி போதாது ராஜா. நீ கொடுத்துவைத்தவன். அனுபவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருய். அதுக்கெல்லாம் உன்னைப்போல் அழகாகப் பிறந்திருக்கணும்'' பெருமூச்சு விட்டவாறு அகன்றுசென்முன்.

அவன் கூறியது உண்மைதான். ஊர் வாயை மூடமுடியாது தான். 'நான் சல்மாவை ஊரறிய விவாகப்பதிவு செய்துகொண்டால் ஒரு பயனும் வாலாட்டமுடியாது' நினைத்தவாறு மாஹிர் நடையைத் தொடர்ந்தான்.

★ ★ ★

சல்மாவின் கால்களின் வேகத்துக்கமைய கைகளும் இயங்கின. கடந்த இரவு முழுவதும் நித்திரை இல்லாததால் ஒரே நித்திரை மயக்கமாக இருந்தது. பாத்திமாவின் நிலையும் அப்படித்தான்!

''சல்மா, அதோ அவர் வருகிறுரடி'' என்முள் நெய்துகொண்டிருந்த பாத்திமா.

சல்மா திரும்பிப்பார்த்தாள்.

''வாங்க சார். நீண்ட நாட்களாக வரவில்லையே?''

''இல்லையே. கடந்த ஐந்து நாட்கள்தானே வரவில்லை''

''அந்த ஐந்து நாட்களுமே ஐந்து யுகமாகத் தெரியுது சார்'' எனச் சல்மா கூற... மாஹிர் அதைக்கேட்டு அகமகிழ்ந்தான்.

நான் வராமல்விட்டால் அவள் துக்கப்படுகிருள். அவள் என்னைத் தினமும் பார்க்கவிரும்புகிருள். அதன் அர்த்தம் அவள் என்னைக் காதலிக்கிருள் என்று கொள்ளலாமா — என்று நினைத்த மாஹிர், ''எனக்குகூட அப்படித்தான். அதுசரி தறியில் ஏதாவது பிழைகள்...?'' எனக் கேட்டான்.

''இல்லை சார். ஆனல் பாத்திமாவின் ஹீல்ஸ்தான் அடிக்கடி கரைச்சல் கொடுக்கிறது'' என்முள் பாத்திமாவைப் பார்த்து.

''பாத்திமா, தறியைவிட்டு இறங்கு பார்க்கலாம்'' மாஹிர் கூறியவாறு அவளின் தறியின் அருகே வரவும் அவள் நாணத்துடன் அவசர அவசரமாக இறங்கவும்... அங்கிருந்த ஆணி ஒன்றில் அவளது சேலைத்தலைப்பு சிக்குண்டு .. அவள் தொப்பென விழுந்தாள்.

''பாத்திமா...'' கூவினர் மாஹிரும் சல்மாவும் ஏககாலத்தில்.

மாஹிர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஆணியில் கொழுவப்பட்ட சேலைத்தலைப்பை எடுத்துவிட்டான்.

கீழே விழுந்த பாத்திமா ஒரு நொடியில் தன்னைச் சுதாகரித்தவாறு எழுந்து முந்தானையைச் சரிசெய்து முதுகுப்புறமாக அதை எடுத்துப் போர்த்திக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் அவசரமாகக் கீழே விழுந்துவிட்டாய்? என்னைப் பார்த்துப் பயப்பட... நான் என்ன சிங்கமா? புலியா?'' என்றான் மாஹிர்.

பாத்திமாவிற்கு வெட்கம் பிடுங்கித்தின்ன அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

தறியைச் சரிசெய்துவிட்டு இறங்கிய மாஹிர் சல்மாவை நோக்கினான்.

''சல்மா நான் போய்வருகிறேன்... என்னோடு வாசல்வரை வருகிறாயா?'' என்று கேட்டான்.

சல்மா இறங்கிவந்தாள்.

''சல்மா, பத்திரிகைக்கு அனுப்புவதற்கு ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன். இதைப் படித்துவிட்டு உன் அபிப்பிராயத்தைச் சொல்லு'' என்று கூறி அந்தக் கொப்பியை அவளிடம் கொடுத்தான் மாஹிர்.

''நாளை பிற்பகல் நான் இங்கு வருகிறேன். உன் முடிவை எனக்குச் சொல்'' என்றான்.

'உன் முடிவை எனக்குச் சொல்' என்ற வார்த்தையிலிருந்த அழுத்தத்தை அவள் அப்போது புரிந்துகொள்ளவில்லை.

''கட்டாயம் சொல்றேன் சார்...''

''சல்மா, எனக்குத் தேவை உன் அபிப்பிராயம் மட்டும் தான். ஆகவே, வேறு யாரிடமும் இதைக் காட்டவேண்டாம். பத்திரிகையில் கதை வரும்போது அவர்கள் வேண்டுமானால் வாசிக்கட்டும்''

அவளுடைய பதிலுக்குக் காத்திராமல் நடந்தான் மாஹிர்.

* * *

மூமினா பளிச்செனக் காட்சி அளித்தாள். தனது பிள்ளைகள் இரண்டுக்கும் புதுச் சட்டைகள் தைத்துப் போட்டிருந்தாள்.

வீடு கலகலப்பாக இருந்தது.

''மூமினா, இன்னும் சிறிது நேரத்தில் உன் மாப்பிள்ளை வருவார். அவருடன் ஒற்றுமையாக முயற்சிசெய். உன் முன் கோபத்தைக் காட்டி அவரைத் திருப்பி அனுப்பிவிடாதே. அவருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை இன்னும் சில மாதங்களில் கொடுத்துவிடலாம். அதுவரை எதற்காக நீயும் அவரும் பிரிந்து இருக்கணும்?'' என்றார் தஸ்லீம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாப்பா சொல்வது உண்மைதான் மூமினு. வாழ்க்கை என்று நாலும் நடக்கத்தான் செய்யும். அதற்காகப் புருஷனைத் தூக்கி எறிந்து கதைத்துவிட்டு இப்படி வரக்கூடாது. குடும்பம் சந்தோஷமாக இருக்க யாராவது ஒருவர் மற்றவருக்கு அடங்கித்தான் நடக்கணும்'' என்றுள் ரூட்டினத்திலிருந்து பேனைக் கழற்றியவாறு மரியம்.

''உம்மா, நீ நினைப்பதுபோல நான் பழைய மூமினு இல்லே. அவருக்கிட்டே இருந்து பிரிந்து வாழ்ந்த இந்த ஆறு மாதமும் நான் நிறையப் படிச்சுட்டேன்''

அவள் அடிக்கடி வாசலைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

வாசலெங்கும் ஓரே இருட்டு.

''மூமினு. உன் புருஷனுடன் ஒற்றுமையாவது சரி. அவருடைய நடவடிக்கையிலே சற்றுக் கண்ணுக இரு'' என்றுர் தஸ்லீம் எதையோ நினைத்துக்கொண்டவராக.

''வாப்பா... நீங்க என்ன சொல்றீங்க? நீங்க சந்தேகப் படக்கூடியவாறு அவர் ஏதாவது......?''

''நம்ம மாப்பிள்ளையைச் சின்ன முதலாளி சுபைரோடு பார்த்ததாகப் பலர் சொன்னுங்க. அவங்க ரெண்டுபேரும் ஒன்றுகச் சூது விளையாடப்போறதாகக் கேள்வி''

அப்போது கேட்டைத் திறந்தவாறு மூமினுவின் கணவன் ஜெமீல் வருவது தறிக் குடிலுக்குள் வைக்கப்பட்டிருந்த விளக்கொளியில் தெரிந்தது.

''வாங்க மாப்பிள்ளே'' தஸ்லீம் வரவேற்றுர்.

மூமினுவின் மூத்த புதல்வன் ''வாப்பா வந்துட்டார்'' என்றுன் மழலையாக.

ஓடிச்சென்று அவனின் காலைக் கட்டிப்பிடித்தான். மூமினு எழுந்துநின்று மரியாதை செய்தாள். மரியம் உள்ளே ஓடி மறைந்தாள்.

''மாமா, மூமினு என்ன சொல்லு? இன்னும் இங்கேயே இருக்கப்போருவா, அல்லது வீட்டுக்கு வரப்போருவா?'' ஜெமீல் கேட்டான்.

''அவ தவறை நினைத்து வருந்துரு. ஆளைப் பார்த்தாலே தெரியுதே! வீட்டுக்குப் போறதுக்கு ஆயத்தமா இருக்கிரு என்று''

''வீட்டுக்கு வருவது சரிதான். ஆனு அடிக்கடி சண்டை பிடிக்கக்கூடாது என்று உங்க மகளிடம் சொல்லிவைங்க''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க நினைக்கிற பழைய மூமினு இல்ல நான். உங்களைப் பிரிந்து நான் அடைந்த வேதனைகள் போதும். இனி மவுத்துக்கும் அதெல்லாம் நடக்காது'' என்றவாறே கைக்குழந்தையைக் கணவனிடம் நீட்டினாள் மூமினு.

''பெரிய பக்டரியெல்லாம் போட்டு இருக்காமே. திறப்பு விழாவுக்கு என்னைக் கூப்பிட மறந்துட்டீங்களே. சல்மா எங்கே?''

''அவள் இங்கேதான் நிற்பாள். இதைத் தொடங்கியது எல்லாமே சல்மாதான். உங்களுக்குத் தரவேண்டிய பாக்கியைக் கூட இரண்டொரு மாதங்களிலே தந்துடலாம் போலிருக்கு'' என்றார் தஸ்லீம்.

''அதை எப்போதாவது எடுத்துக்கொள்ளலாம். சல்மாவைக் கூப்பிடுங்க. சொல்லிட்டுப் போயிடலாம்'' என்று அவன் கூற... அதற்கிடையில் சல்மாவே வந்துவிட்டாள்.

அவளின் முகத்தில் இனம்புரியாத கலவரம். எதைப்பற்றியோ ஆழமாகச் சிந்திப்பதுபோலக் காணப்பட்டாள்.

''என்ன சல்மா, ஸ்கூலை விட்டுட்டுத் தொழிலிலே இறங்கிட்டே போலிருக்கு. அதுசரி .. ஏன் உன் முகம் வாடியிருக்கு?''

''கடந்த இரவு சரிவர நித்திரை இல்லை. அதனால்தான் ஒரு மாதிரி இருக்கு'' என்றாள் சல்மா. அவளுடைய குரலில் வழக்கமான துடுக்குத்தனம் இல்லை.

''இதோ பாருங்க... ஒரு விசயத்துக்கு நீங்க எனக்குச் சம்மதம் தரணும்'' என்றாள் மூமினு கணவனைப் பார்த்து.

''என்ன விசயம்...? எதற்குச் சம்மதம்?''

''நான் இங்கே நூல் சுற்றி ஒருநாளைக்குப் பத்து ரூபாவுக்குமேல் உழைத்துக்கொண்டிருந்தேன். இப்போ வேலை செய்து பழகிட்டு. அந்த ராட்டினத்தையும் வீட்டுக்குக் கொண்டுசெல்வதாக எண்ணியிருக்கிறேன். அங்கேயிருந்து நூல் சுற்றி இங்கே அனுப்பிக்கொண்டிருக்கலாம். நமது உழைப்புக்கும் கூலி கிடைக்கும். தறி வேலையும் ஒழுங்கா நடக்கும்''

மூமினுவின் கூற்று சல்மாவுக்குப் பெருத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

சுத்த சோம்பேறியான மூமினு எப்படி மாறிவிட்டாள்?

உழைப்பில் இன்பம் காண்பது எனக் கூறுவார்களே, அதற்குச் சான்று மூமினுதான். பொறுப்பும் உழைப்பும் இருந்துவிட்டால் சோம்பலற்ற வாழ்க்கை ஏற்படுமோ? சல்மா நினைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதற்கு என்ன... நீ விரும்பியபடியே செய்யலாம். நான் இவங்களை இப்போ வீட்டுக்குக் கூட்டிப்போறேன். நாளை பகல் உங்க எல்லோருக்கும் எங்க வீட்டிலே விருந்து. வந்திடுங்க''

''மும்மு. அவங்களை இருந்து சாப்பிட்டுட்டுப் போகச் சொல்லு! அவங்களுக்கும் சேர்த்துத்தான் சமைச்சிருக்கு'' என்றாள் மரியம் உள்ளிருந்தவாறு.

இரவு சாப்பாட்டுவேளையில் அந்த வீடு ஒரே கலகலப்பாக இருந்தது.

★ ★ ★

கதையை வாசித்த நேரம் தொடக்கம் சல்மா ஒரு நிலையில் இல்லை. மாஹிரின் கோரிக்கை அவள் சற்றுமே எதிர்பார்க்காத ஒன்று.

அவள் அதைத் திரும்பவும் வாசித்தாள். பலதடவைகள் திரும்பத் திரும்ப வாசித்தாள்.

அவன் எழுதியிருந்த கடைசி வசனங்களை வாசிக்கும்போது மெய்சிலிர்த்தது.

'தன் அன்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமான அந்த ஏழை மாணவிக்கு உதவி செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்துக்காக அந்த ஆசிரியன் காத்திருந்தான். அதற்காகப் பல வழிகளை விட்டு ஆராய்ந்தான். ஈற்றில் அவளையே தனது வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்வதைத் தவிர்ந்த வேறொரு சிறந்த உதவி இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. அந்த உதவியைச் செய்ய அவன் ஏங்குகிறான். அதற்கு அவள் சம்மதிப்பாளா!'

இந்த இறுதி வரிகள் சல்மாவின் மனதில் மகிழ்ச்சியையும், அதேநேரம் இனம்புரியாத வேதனையையும் ஏற்படுத்தியது.

மாஹிர் எழுதிய கதைமூலம் அவன் சல்மாவின் உள்ளத்தில் இமயமாக உயர்ந்து நின்றான்.

'அவரைப்போன்ற உயர்ந்த அந்தஸ்தில் உள்ள ஒருவர் ஏழையான என்னை விரும்புவதா...? ஏன் கூடாது...? இளவரசனை சலீம் ஆடல் அழகி அனார்கலியை விரும்பவில்லையா...? இளவரசி அமராபதி அம்பிகாபதி என்ற கவிஞனைக் காதலிக்கவில்லையா...? காலம் காலமாகக் காதல் வர்க்க பேதங்களை மறந்து மலர்ந்து மணம் பரப்பவில்லையா..? மாஹிர் மாஸ்டர் என்னை விரும்புவதாயின் அந்த அன்பில் உண்மை இருக்கவேண்டும்'

அவளின் தொடர்ச்சியான சிந்தனையைப் பாத்திமாவின் எண்ணம் கலைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை! நான் அவருடைய காதலுக்கு அருகதையற்றவள். முடித்தால் அவரைத்தான் முடிப்பேன் எனப் பாத்திமா ஏங்கிக் கொண்டிருக்க நான் அவரை முடித்து எப்படி இன்பமாக வாழ முடியும்..? அவள் என்னைவிட நாலு வயது மூத்தவள். மூன்றாந் தாரமாக அவளை ஒப்படைக்க முயற்சிகள் நடக்கின்றன'

சிந்தனைச் சுழியில் சிக்கித் திணறினாள். அதிலிருந்து மீண்டு கரைசேரமுடியாமல் இருந்தது அவளால்.

நீண்டநேரம் கதைக் கொப்பியை மடியில் வைத்தவாறு தன்னை மறந்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

வாசலில் நின்ற பலாமரக் கிளையில் இரண்டு காகங்கள் அருகருகே அமர்ந்து சொண்டினால் ஒன்றையொன்று கொத்தின.

தூரத்தே இரண்டு புறாக்கள் ஜோடியாகப் பறந்தன. பாதைக்கு அருகே நின்ற வேம்பு மரத்தில் இரண்டு அணில் பிள்ளைகள் ஒன்றை ஒன்று துரத்தி விளையாடின.

'இந்த ஜோடிகளில் ஒன்று மாஹிர் மாஸ்டர். மற்றது பாத்திமாவா...? நானா...?

'நானென்றால் ஒன்றாகப் பறக்கலாம், துரத்தி விளையாடலாம், கொத்திக்கொண்டிருக்கலாம். ஆனால், அந்த ஜோடிகளில் ஒன்றை மாற்றிவிட்டால் என்ன நடக்கும்...?

'காகங்கள் பறந்துபோய்விடுமா...? புறாக்கள் திசைமாறிப் பறக்குமா...? அணில்கள் வேறு கிளைக்குத் தாவிவிடுமா...?'

நேரம் ஊர்ந்தது.

பாத்திமாவை விட்டுவிட்டு அவள் மாஹிரைத் திருமணம் செய்வது என்பதை அவளால் நினைத்துப்பார்க்கவே முடியாமல் இருந்தது.

பாத்திமா பொருத்தமானவ ஒருவனைத் திருமணம் செய்தால், நாளைக்கே அவள் மாஹிருக்குக் கழுத்தை நீட்டத் தயாராக இருந்தாள்.

பாத்திமா விரும்புவதே மாஹிராக அல்லவா இருக்கிறது.

நீண்ட சிந்தனையின்பின் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்? தனக்குப் பதிலாகப் பாத்திமாவை மணப் பெண்ணாக ஆக்குவ தென்பதே அந்தத் தீர்மானம்!

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சல்மா ! இதுதான் உன் முடிவா?'' மாஹிர் கேட்டான். அவனது குரல் தழதழத்தது.

''சார்... இதைவிட வேறு ஒரு முடிவுமே என்னால் எடுக்க முடியாமல் இருக்கிறது. என் நிலை உங்களுக்குத் தெரியும். நான் மட்டும் தனியாக இருந்தால்... இந்த வீட்டின் பொறுப்புக்களைத் தாங்கும் சுமைதாங்கியாக நான் இல்லாமல் இருந்தால்... உங்க கோரிக்கைக்கு உடனேயே சம்மதம் அளித்திருப்பேன். நான் நினைத்துப்பார்க்கவே முடியாத அதிஷ்டம் கிடைக்கிறது என நினைத்து மகிழ்வேன். என்னைப் பொறுத்தவரை மகிழ்ச்சி என்ற வார்த்தைக்கு அர்த்தம் 'தியாகம்' என்பதுதான்'' என்றாள் சல்மா கண்களைத் துடைத்தவாறு.

''இல்லை சல்மா. நீ சரியாகச் சிந்திக்காமல் ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக நான் நினைக்கிறேன். உன் முடிவை மாற்றிக் கொள்ள உனக்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது''

''என் வாழ்க்கையில் எடுத்த ஒவ்வொரு தீர்மானமும் நீண்ட சிந்தனைகளின்பின் எடுத்தவைதான் சார்... பாத்திமா எனக்கு நாலு வயது மூத்தவள். என்னைவிட அழகானவள். படித்தவள், பண்புள்ளவள், கெட்டிக்காரி. அவள் மூன்றும் தாரமாக விலைபோக இருக்கிறாள். ஆனால், அந்த ஏழை தன் பிஞ்சு மனதுக்குள் ஒருவரை நினைத்து ஏங்குகிறாள்.. திருமணம் முடிப்பதானால் அவரைத்தான் முடிப்பேன் என்கிறாள். இல்லாவிட்டால் கன்னியாகவே இருப்பேன் என என்னிடம் சத்தியம் செய்து இருக்கிறாள். என் கூடப்பிறப்பான அவள் வாழ்க்கையெல்லாம் மூளியாக இருக்க, நான்மட்டும் என்னை விரும்புபவருடன் எப்படி சார் வாழ்வது...?''

''சல்மா நீ என்ன சொல்கிறாய்? உன் சகோதரி யாரையோ விரும்புவதற்கும், நாம் இருவரும் திருமணம் செய்யாமல் இருப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நாம் இப்போது திருமணம் செய்யத் தேவையில்லை. விவாகப் பதிவு செய்து வைக்கலாம். பாத்திமாவின் திருமணம் முடிந்தபின் நமது திருமணத்தை வைத்துக்கொள்ளலாம்'' என்று மாஹிர் கூற.....

''அதுதானே முடியாது'' என்றாள் சல்மா.

''ஏன் முடியாது...? சல்மா என் முகத்தைப் பார்த்துச் சொல். நீ உண்மையாகவே என்னை விரும்புகிறாயா? இல்லையா...? இந்த முடிவு மட்டும்தான் எனக்குத் தேவை!''

''சார்... தயவுசெய்து அப்படிக் கேட்டு நான் நன்றி மறந்தவள் என்ற நிலைக்கு என்னை ஆளாக்காதீங்க. நான் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்கு விடை அளிப்பதற்குமுன் பாத்திமா யாரை விரும்புகிறுள் என்று நீங்கள் அறியவேண்டும்''

''யார் அது...? முடிந்தால் நானே முன்னின்று அந்தக் கல்யாணத்தை நடத்திவைக்கிறேன்'' என்ருன் மாஹிர்.

சல்மா சிறிதுநேரம் மௌனமாக நின்ருள்.

''அது வேறு யாருமில்லை...! பாத்திமா மனதார விரும்புவது உங்களைத்தான். அவள் மனதில் சதா சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருப்பது நீங்கள்தான்...'' என்ருள். அவள் குரல் கம்மியது.

இதைக் கேட்டதும் மாஹிருக்கு உலகமே சுழல்வதுபோ லிருந்தது.

அவன் கலங்கும் கண்களுடன் சல்மாவைப் பார்த்தான். அவன் சற்றும் எதிர்பாராத தகவல் இது!

''என்ன...? பாத்திமா விரும்புவது என்னையா?'' மாஹிர் விழித்தான்.

''ஆமாம். அவளுடைய ஊமை உள்ளத்தினுள் குடியிருப்பவர் நீங்கள்தான். நீங்கள் என்னை விரும்புகிறீர்கள். உங்களுக்குக் கிடைக்க இருக்கும் பணம், காணி, எல்லாவற்றையும் இழந்து இந்த ஏழையை முடிக்க விரும்புகிறீர்கள். ஏழைப் பெண்களை விளையாட்டுப் பொம்மைகளாக மற்றவர் நினைக்கும் இந்தக் காலத்தில் என்னை நீங்கள் உண்மையாகவே திருமணம் செய்ய விரும்புகிறீர்கள். அப்படியென்ருல் .. அந்த வாழ்க்கையை நீங்க பாத்திமாவுக்குக் கொடுங்க. அவள் என்னைவிட அழகானவள். உங்களையே நினைத்துக்கொண்டிருக்கிருள். எங்கள் குடும்பத்துக்கு உதவி செய்யவேண்டுமென்று நீங்க மனப்பூர்வமா நினைத்தா... இதைவிட ஒரு நல்ல காரியம் நீங்க செய்யமுடியாது'' என்று கூறியவாறு அவனின் முகத்தை உற்றுப்பார்த்தாள் சல்மா.

''சல்மா, ஒரு பெண்ணை மனதில் நினைத்துக்கொண்டு இன்னொரு பெண்ணுடன் வாழமுடியுமா? பெண்களெல்லாம் ஓரேமாதிரி இருக்கலாம். ஆனல், என் நினைப்பெல்லாம் உன்னைப் பற்றித்தான் சல்மா'' என்ருன். அவன் நா குளறியது.

''அப்படிப் பார்த்தால் பாத்திமா உங்க நினைப்போடு இன்னொருவனுடன் குடும்பம் நடத்தமுடியுமா? திருமணம் ஆகி நீங்களும் நானும் ஒன்ருகக் குடும்பம் நடத்துவதைப் பார்த்து அந்த ஊமை உள்ளம் எத்தனை வேதனைப்படும்? உங்க காலிலே விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன். தயவுசெய்து எங்க பாத்திமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு வாழ்வு கொடுங்க. கிழட்டுக் குரங்கொன்றுக்கு அவன் பலியாகப்போவதைத் தயவுசெய்து தடுத்து நிறுத்துங்க'' கூறிய வாறு திடீரெனக் குனிந்து அவன் கால்களைக் கட்டிப்பிடித்தாள்.

மாஹிர் இதை எதிர்பார்க்கவே இல்லை.

''சல்மா. பைத்தியமா உனக்கு? காலை விடு''

நேரம் கரைந்தது.

மாஹிர் நிசப்தத்தைக் கலைத்தான்.

''சல்மா. தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் டைம் கொடு. நான் யோசித்துச் சொல்றேன்'' பதிலையே எதிர்பாராமல் அவன் வெளியேறினான்.

மாஹிர் போவதைச் சிலைபோல் பார்த்துக்கொண்டிருந்த அவள் அருகே நின்ற காலிதீனின் குரல் கேட்டுத் தன் நிலைக்கு வந்தாள்.

அவசர அவசரமாகக் கதவைப் பூட்டிக்கொண்டு காலிதீனுடன் மூமினாவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். வீட்டிலுள்ளவர்கள் ஏற்கனவேயே அங்கு போயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 14 —

எதிர்பாராத அந்தச் செய்தியைச் சின்ன முதலாளி சுபைர் கேட்டதும் திணறிப்போனார். தன் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை.

''ஒருக்காலும் இப்படி நடக்கமுடியாது'' என்றார் மனைவியைப் பார்த்து.

''நான் என்ன பொய்யா சொல்றேன்? வேண்டுமானால் விசாரித்துப்பாருங்க''

''அது எப்படிச் சாத்தியமாகும்? கிளியைப்போலப் பெண். பல ஆயிரம் ரூபா பணம். இத்தனைபெரிய வீடு. எல்லாவற்றையும் விட்டுட்டுத் தறி நெய்பவனை முடிப்பாளா? அது உண்மையென்றால் அவனுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கணும்''

சுபைர் கைகளைப் பிசைந்தார்.

தான் பிடிப்பதற்குக் கன்னி வைத்த பறவையைப் பாதையில் வந்த யாரோ ஒருவன் பிடித்துவிட்டானே என்ற எண்ணம் அவருக்கு.

''அவனுக்குப் பைத்தியம் இல்லை. அவங்க ரெண்டுபேருக்கும் இதுவாம். அதுதான் யாருக்கும் தெரியாம காதும் காதும் வைத்தாப்போலக் கல்யாணம் நடக்கப்போகுதாம்''

''அப்படியா! நான் அப்போதே நினைச்சேன். நான் கல்யாணம் கேட்டுப்போனப்போ என்னைத் தூக்கி எறிந்து கதைத்தானே. அப்போதே நினைச்சேன். மடப்பயல். அன்றைக்கு என்னமாக் கதைச்சான்? அவனுடைய கழுத்தைப் பிடிச்சு நான் அங்கேயே அவனைக் கொலைசெய்து இருக்கணும். போடியாருடைய மூகத்துக்காக விட்டுவைத்தேன்''

''போகட்டும் விடுங்க. நம்ப பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்காமலா போயிடும்? அங்க இங்க தொடர்புள்ளவனை எடுத்தா நம்ம மகளுக்குத்தான் அலைச்சல்''

''எப்படி விடுவது? அந்தக் கிழவன் தஸ்லீமும், மீரான் என்பவனும் சேர்ந்து போட்ட மொட்டைக் கடதாசியாலேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வியாபாரம் போச்சு. இப்போ நான் கேட்டுக்கொண்டிருந்த மாப்பிள்ளையை அவங்க எடுப்பதா?''

சுபைர் கொதித்தார்.

''நான் சாதாரண ஆளில்ல. எனக்கு நாலும் தெரியும். இந்தக் கல்யாணத்தை நான் தடுத்து நிறுத்துவேன். முடியாது போனு...? அந்தக் கிழவனின் குடும்பத்துக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிப்பேன்'' என அவர் உறுமினுர்.

அவர் என்னதான் உறுமினுலும், எத்தனை நடவடிக்கைகள் எடுத்தாலும், மாஹிர் — பாத்திமா கல்யாணம் என்னவோ மங்களகரமாக நடைபெறத்தான் செய்தது.

★ ★ ★

மாஹிர் — பாத்திமா கல்யாணம் முடிந்து ஆறு மாதங்கள் பறந்தோடிவிட்டன.

இந்த இடைவெளிக்குள் அந்த வீட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன.

நான்கு தறிகள் மளமளவென வளர்ந்து பதினைந்து தறிகளாகின. பாவு ஓடுவதற்காகச் சொந்தமாக வாப்பீஸ் ரோல் வாங்கியிருந்தனர்.

நூல் சுற்றும் ராட்டினங்கள் பல்கிப் பெருகியிருந்தன. நெசவில் திறமையுள்ள பெண்ணொருத்தி மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டிருந்தாள்.

சுமார் இருபதுபேர் சல்மாவின்கீழ் நெசவுத் தொழிற்சாலையில் இயங்கிக்கொண்டிருந்தனர்.

நாளாந்தம் பல சாரன்கள், சாரிகள், உற்பத்தியாகின. வியாபாரிகள் வருவதும் போவதுமாக இருந்தனர். சல்மா இப்போதெல்லாம் நெய்வதைக் குறைத்துக்கொண்டாள்.

பெக்டரியை நிருவகிப்பதிலேயே அவளுடைய பெரும் பொழுது கழிந்தது.

முஸம்மில் பெரிதும் மாறியிருந்தான்.

நூலுக்கு சாயமிடுதல், பசை போடுதல் போன்ற வேலைகளை அவனே செய்தான். அவன் இதனுல் நிறையச் சம்பாதித்தான்.

இந்தப் பணத்தையெல்லாம் எப்படிச் செலவழிக்கிறுன் என்பது இன்னும் புரியாத புதிராகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெக்டரி தொடர்பான வெளி வேலைகள் தஸ்லீமைப் பொறுத்தவை. நூல் வாங்குதல், கணக்கு எழுதல், உற்பத்தியான ஆடைகளை விற்றல் ஆகிய வேலைகளை அவர் உற்சாகமாகச் செய்தார்.

இருபது வருடகாலம் பிச்சைச் சம்பளத்துக்குக் கணக்கு எழுதியதை அவர் அடிக்கடி நினைத்துப்பார்ப்பார். தன்னுடைய சொந்தக் கணக்கை எழுதும்போது கிடைக்கும் மன அமைதிக்கு ஈடே இல்லை என அவர் நினைத்தார்.

இப்போதெல்லாம் மரியம் நூல் சுற்றுவதில்லை. மற்றவர்கள் நூல் சுற்றுவதை மேற்பார்வைசெய்யும் பொறுப்பு அவளுடையது.

இவர்களது வீட்டைப் பொறுத்தவரையும் பல மாறுதல் கள் நடந்திருந்தன.

வீட்டுக்குப் பக்கத்தில் கிடந்த வளவொன்றை வாங்கி, நவீனமாகச் சிறிய வீடொன்றைக் கட்டிக்கொண்டிருந்தனர். விருந்தாளிகள் வந்தால் இருப்பதற்குப் பல கதிரைகள் கிடந்தன. ஒவ்வொருவருக்கும் படுப்பதற்கு இப்போது ஒவ்வொரு கட்டிலும் கிடந்தன.

ஒவ்வொரு வியாழக்கிழமை பிற்பகலும் பெக்டரியில் வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுபடும். சல்மாவே தனது கையால் கொடுப்பாள்.

சம்பளம் கொடுக்கும் வேளைகளில் ஓர் உண்டியல் வைக்கப் பட்டிருக்கும். சம்பளம் பெறுபவர்கள் தங்களால் இயன்ற தொகையை அதனுள் போட்டுவிட்டுச் செல்வார்கள்.

உண்டியலில் சேரும் பணம் அந்த ஊரில் மேல்வகுப்புப் படிக்கும் ஏழை மாணவ மாணவிகளுக்கான இலவச டியூசன் வகுப்பு நடாத்துவதற்கும் பரீட்சைக்குப் பணம் கட்டமுடியாமல் தவிப்பவர்களுக்கு உதவுவதற்கும் பயன்பட்டது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பெக்டரியில் வேலைசெய்யும் அனைவருக்கும் சல்மாவின் வீட்டிலேயே பகல்போசனம் நடைபெறும். மூமினும், பாத்திமாவும் வருவார்கள். பாத்திமா இப்போது கருவுற்று இருப்பதால் அவளுடைய கையாலேயே வெள்ளிக்கிழமைகளில் விருந்து பரிமாறுவாள்.

மூமினின் மாப்பிள்ளையின் பாக்கிப் பணத்தை இப்போது கொடுத்துவிட்டிருந்தனர்.

* * *

பெக்டரியில் பொருத்தப்பட்டிருந்த மணிக்கூட்டில் ஐந்து மணி என்பதைத் தெரிவிப்பதற்கான மணிச் சத்தம் அடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்துகொண்டிருந்த பெண்கள் அன்றைய வேலையை முடித்துக்கொண்டு எழுந்தனர்.

வாசலில் போட்டிருந்த இரும்புக் கேட்டைத் திறந்து கொண்டு அவசர அவசரமாகத் தஸ்லீம் உள்ளே நுழைந்தார்.

''மரியம்... மரியம்...'' சப்தமிட்டு அழைத்தார்.

''ஏன் கூப்பிடுறீங்க?...''

''உன் செல்லமகன் முஸம்மில் எங்கே?''

''ஏன்?... வெளியே எங்கேயோ போயிருக்கான்''

''உன் செல்லமகன் எங்கே போனான்னு எனக்குத் தெரியும். ஊரெல்லாம் ஒரே கதையாய்க் கதைக்கிறாங்க. சல்மா ஓடிப் போய் அலுமாரியைத் திறந்துபார். நூல் வாங்குவதற்காக வைத்த இரண்டாயிரம் ரூபா இருக்குதா எனப் பார்''

சல்மா ஓடிச்சென்று அலுமாரியைத் திறந்துபார்த்தாள்.

அங்கு ஆயிரம், ஆயிரமாகக் கட்டிவைத்திருந்த இரண்டு கட்டுக்களில் ஒன்றுமட்டுமே இருந்தது.

சல்மா வாயைப் பிளந்தாள்.

★ ★ ★

''சொல்லுங்களேன். முஸம்மில் எங்கே போயிட்டான்?'' மரியம் ஒப்பாரி வைத்தாள். நடக்கக்கூடாதது ஏதோ நடந்து விட்டது என அவள் நினைத்தாள்.

''யாரோ ஒரு தேவடியாளுடன் கூடிக்கொண்டு எங்கேயோ போயிட்டான்டி. என் மரியாதை எல்லாம் போயிட்டு... நான் இனி இருந்து என்ன பலன்?'' புலம்பத்தொடங்கினார் தஸ்லீம்.

''தயவுசெய்து கொஞ்சம் புரியும்படியா சொல்லுங்களேன். என் பெத்த வயிறு பத்தி எரியுது''

''அந்தப் பயல் நம் மானத்தை வாங்கிறதுக்குத்தான்டி பொறந்திருக்கான். ஊரெல்லாம் காறித் துப்புறாங்கடி''

சல்மாவுக்கு இன்னும் பொறுத்துக்கொண்டிருக்க முடிய வில்லை. தாயும், தகப்பனும் அப்படியே ஆள்மாறி ஆள் ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கிறார்களே!

''வாப்பா!... முஸம்மில் வீட்டில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு யாரையோ கூட்டிக்கொண்டு ஓடிவிட்டான். அப்படித்தானே?'' சல்மா கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாரையோ இல்லடி... ஒரு தேவடியாளை''

''அது எப்படி அவ்வளவு உறுதியாக உங்களுக்கு தெரியும்?''

''ஊரிலே கதைக்கிறுங்க... அதைவிட வேறு என்ன உறுதியாகணும்?''

''வாப்பா. ஊரிலே பலதையும்தான் கதைப்பாங்க. தான் விரும்பும் ஒருவனோட ஒரு பெண் போனு அவ நடத்தைகெட்டவ என்றுதான் ஊராரின் அர்த்தம். நம் பாத்திமாகூட மச்சான் மாஹிர் மாஸ்டரை விரும்பிக்கொண்டுதான் இருந்தா. நாம எல்லோரும் சந்தர்ப்பத்தில் தலையிட்டதால அவங்க கல்யாணம் முடிந்திடுச்சி. இல்லாவிட்டால் மூன்றுந் தாரமா நீங்க அவளைப் பலிகொடுக்க நினைத்திருக்கும்போது உங்களிடமிருந்து தப்ப தான் விரும்பும் ஒருவனோட அவள் ஓடிப்போனு உங்க மகளையும் நடத்தைகெட்டவ என்றுதான் ஊர் கதைக்கும். தீர விசாரிக்காம ஒரு முடிவுக்கு வரக்கூடாது''

தகப்பனின் மனவேதனையைச் சற்றுத் தணிப்பதற்காக அவள் இப்படிக் கூறினுலும் முஸம்மிலை நினைக்கும்போது அவளுக்குக் கோபமே ஏற்பட்டது.

மீரான் கொடுத்த ஆயிரம் ரூபா பணத்தில் முஸம்மில் பங்கு கேட்டதும் அவன் பெக்டரியில் உழைக்கும் பணத்தை எவ்வாறு செலவழிக்கிறுன் என்பதும் சல்மாவிற்கு ஏற்கனவே சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

''நீ என்ன சொன்னுலும் என் மனம் ஆறுதல் அடையாது. அவன் எனக்கு மகனுகவே பிறந்திருக்கக்கூடாது''

''வாப்பா. முஸம்மில் இப்படிப் போனதற்கு நீங்களும் ஒரு காரணம்''

''நான் என்னடி காரணம்? அந்தத் தேவடியாளுடன் கூடிக்கொண்டு நானு போகச்சொன்னேன்?'' தஸ்லீம் ஆத்திரம் மேலிடக் கேட்டார்.

''இப்ப அவனுக்கு வயதென்ன?''

''இருபத்தியெட்டு''

''இந்த வயதில் அவனோடு ஒத்தவங்க எல்லாம் கல்யாணம் செய்துகொள்கிறுங்க. நீங்க அவனைப்பற்றிக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? காலாகாலத்தில் அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணிவைத்திருந்தா இதெல்லாம் நடக்குமா?'' கூறிவிட்டுத் தகப்பனின் முகத்தை உற்றுப்பார்த்தாள் சல்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன்னோடு கதைக்க என்னாலே முடியாது. இப்போ நூல் வாங்க வைத்திருந்த ஆயிரம் ரூபாவைக் கொண்டுபோயிட்டானே? அதற்கு என்ன செய்வது?''

''கொண்டுபோகட்டுமே. அந்தப் பணத்திலே அவனுக்கு உரிமை இல்லையா?'' சல்மா திருப்பிக் கேட்டாள்.

''நீங்க வாப்பாவும் மகளும் சண்டை பிடிப்பது இருக்கட்டும். என் மகன் என்ன ஆனானோ?'' மரியம் மீண்டும் ஒப்பாரி வைத்தாள்.

''சும்மா இரும்மா. எங்கே போவான்? எங்கேயாவது போயிட்டு இங்கேதான் வருவான். எனக்குள்ள கவலையெல்லாம் பெக்டரியில அவனுக்குள்ள பொறுப்புக்களை அம்போன்னு விட்டுட்டு போயிட்டானே என்றுதான்'' என்றாள் சல்மா.

''நீயும் உன் பெக்டரியும்'' முகத்திலடித்தாற்போல் கூறினாள் மரியம்.

''நீ இருந்துபாரேன்! நாளைக்கு அவனிடமிருந்து கடிதம் வரும். எதற்கும் பொறுத்துப் பார்ப்போம்''

அவள் எவ்வளவுதான் கூறினாலும் தஸ்லீமின் கோபம் தணிந்ததாக இல்லை. மரியம் ஆறுதல் அடைந்ததாகவும் இல்லை.

★ ★ ★

அடுத்தநாள். சல்மா கூறியதுபோன்றே முஸம்மிலிடமிருந்து கடிதம் கிடைத்தது. பக்கத்துக் கிராமத்திலிருந்து நெசவு நெய்யவரும் பெண்ணொருத்தி மூலமாக அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தான்.

கடிதம் சல்மாவின் பெயருக்கு எழுதப்பட்டிருந்தது. கடிதத்தைப் பிரித்தாள்.

'நான் வீட்டைவிட்டு யாரோ ஒரு பெண்ணுடன் ஓடிவிட்ட தகவலை நீ இப்போது அறிந்திருப்பாய். அலுமாரியில் இருந்த பணத்தில் ஆயிரம் ரூபாவை நான் எடுத்துச்சென்றதும் உனக்குத் தெரிந்திருக்கும்.

'இதற்காக நீ என்னைப்பற்றித் தவறான அபிப்பிராயம் கொண்டிருப்பாய். உண்மை உனக்குத் தெரியாது. நான் ஆரம்பத்தில் உன் பணத்துடன் அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு எங்கேயாவது ஓடிவிடத்தான் நினைத்திருந்தேன். ஆனால் திட்டத்தை மாற்றிக்கொண்டேன். அந்தப் பெண்ணை அவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா முறையான ஒருவரின் வீட்டில் விட்டிருக்கிறேன். என்னுடைய எதிர்காலத்தைப்பற்றி உன்னுடன் கதைத்தபின் ஒரு முடிவுக்கு வர இருக்கிறேன்.

'என்னைப்பற்றி முழுதாகத் தெரிந்த ஒருத்தி வீட்டில் நீ மட்டும்தான். என்மேல் உனக்கு உண்மையான பாசம் இருந்தால் இன்று காலை பத்து மணியளவில் நான் மூமினுவின் வீட்டுக்கு வரும்போது நீயும் அங்கே வந்து என்னிடம் கதை. நீ வராவிட்டால் என் தலைவிதியை நானே தீர்மானிக்கவேண்டிய பரிதாப நிலை ஏற்படும். உன் பணம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது'

கடிதத்தை வாசித்து முடித்த சல்மாவுக்குத் திடீரென ஓர் உண்மை தெரிந்தது.

'மூஸம்மில் முரடன்தான். ஆனால் மான அவமானத்துக்குப் பயப்படுபவன்'

சல்மா பெக்டரியில் வேலைகளைப் பகிர்ந்து கொடுத்தாள்.

சுமார் ஒன்பது மணி அளவில் காலிதீனையும் துணைக்கு அழைத்துக்கொண்டு மூமினுவின் வீட்டை நோக்கி நடந்தாள்.

★ ★ ★

''சல்மா, என் கடிதம் கிடைத்ததா?'' மூஸம்மில் கேட்டான்.

''கிடைக்காவிட்டால் இங்கே வந்திருப்பேனா?''

''நீ இப்போதுதான் வந்தாயா?''

''நான் வந்தது கிடக்கட்டும். நான் உடனேயே போகணும். பெக்டரியில் நிறைய வேலை கிடக்கு. உன்னைப்போலப் பொறுப்புக்களை அப்படியே விட்டுட்டு ஓடிப்போகக்கூடிய பொறுப்பற்றவள் அல்ல நான்'' சல்மா கோபமாகக் கூறினாள்.

''தயவுசெய்து கோபப்படாதே! உண்மையாக என்ன நடந்தது என நீ அறிந்தால் என்னைப் பிழையாக நினைக்கமாட்டாய்''

''நான் அதை அறியத்தான் வந்திருக்கிறேன். சொல் பார்க்கலாம்''

ராட்டினத்தில் நூல் சுற்றிக்கொண்டிருந்த மூமினு, சுற்றுவதை இடைநிறுத்திவிட்டு வந்து சம்பாஷணையில் கலந்துகொண்டாள்.

''தான் ஒரு பெண்ணுடன் ஓடிவிட்டதாகப் பேசிக்கொண்டார்களே. அவள் யாரென உனக்குத் தெரியுமா?''

''இல்லை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் ஒரு அனாதை. தகப்பன் காலஞ்சென்றுவிட்டார். தாய் கண் தெரியாத கிழவி. அவள் நம்ம ஊரிலே ஒரு பெரிய முதலாளியின் வீட்டில் வேலைக்கிருந்தாள். எப்படியோ எனக்கும் அவளுக்கும் தொடர்பு ஏற்பட்டுப்போச்சு. வீட்டுக்காரங்க விடிந்தது முதல் நள்ளிரவு வரை அவளிடம் வேலை வாங்கிருங்க. பதிலாக பழைய சோற்றையும் எஞ்சின கறியையும் கொடுத்தாங்க. சம்பளம் சதமுமே கொடுக்கல்ல. கண் தெரியாத தாய்க் கிழவியைக் காப்பாற்ற யாருமே இல்லை. கடந்த ஒரு வருடமா அந்தக் கிழவியை நான்தான் பராமரித்துவருகிறேன்"

முஸம்மிலுக்கு எதற்காகப் பணத்தேவை இருந்தது என்பதை சல்மா உடனே புரிந்துகொண்டாள்.

"அப்புறம்?"

"வீட்டுக்காரனின் மகன் கொழும்பில் படித்துக்கொண்டிருக்கிருன். அவன் சில நாட்களுக்குமுன் வீட்டுக்கு வந்தான். வந்ததும் வராததுமாக அவனுடைய புத்தி வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. முந்தாநாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அவளைக் கெடுக்க முயற்சித்திருக்கிருன். அவள் எப்படியோ தன்னைக் காப்பாற்றிக்கொண்டுவிட்டாள். ஆத்திரமுற்ற அவன் பெற்ருேர் வந்ததும் அவளைப்பற்றி அபாண்டமாகப் பழி சுமத்தியிருக்கிருன். அவர்கள் மகனின் கூற்றை உண்மையென நம்பி அவளுக்கு 'வேசி' பட்டத்தைச் சூட்டினர்"

"அப்புறம்?"

"அவளுக்கு அந்த வீட்டில் இருக்கமுடியாத சூழ்நிலை. கண் தெரியாத தாயின் வீட்டுக்கும் செல்லமுடியவில்லை. இந்த சமூகத்துக்குப் பயந்து அவள் தற்கொலை செய்ய எண்ணியிருந்தாள். இதை அறிந்த நான் அவளுக்குக் கைகொடுத்து உதவினேன். அவளை எங்கேயாவது கூட்டிக்கொண்டு போவதற்காக உன் பணத்தை எடுத்தேன். நான் அவளை ஏற்கனவே திருமணம் செய்திருக்கலாம். ஆனல் வீட்டில் குமர்கள் இருக்கும்போது அவ்வாறு செய்ய நான் விரும்பவில்லை. என்னுடைய உணர்ச்சி வேகத்தில் நான் அவளுடன் கிளம்பினேன்"

"பின் எதற்காக அவளுடைய மாமாவின் வீட்டில் அவளை விட்டாய்?"

"நான் ஆறுதலாகச் சிந்தித்தேன். உன்னுடன் இது தொடர்பாகக் கதைத்தபின் ஒரு முடிவுக்கு வர நினைத்தேன். அதுமட்டும் அவளை அங்கே இருக்கவைத்தேன். இப்போது சொல். நான் செய்தது சரியா? தப்பா?"

பதில் சொல்வது சல்மாவுக்கு தர்மசங்கடமாகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபட எண்ணமுள்ள முதலாளியின் மோசடிக்கு உடந்தையாகாத குற்றத்துக்காக வாப்பா தண்டிக்கப்பட்டார். இப்போது முதலாளியின் மகனின் ஆசைக்கு இணங்காததற்காக ஓர் அபலை விபச்சாரி என்ற பெயரைப் பெறுகிறாள். சே! என்ன உலகம். பணக்காரர்கள் செய்வது, சொல்வது எல்லாமே சமூகத்தின் கண்களுக்கு உண்மைதானா?

முஸம்மிலையிட்டு சல்மா சிந்தித்தாள். அவனைப்பற்றி இவ்வளவு நாளும் குறைவாக மதிப்பிட்டேனே என வருந்தினாள். அவனைச் சகோதரனாகப் பெற்றதற்காகப் பெருமைப்பட்டாள்.

முஸம்மில் இப்போது திருந்திவிட்டான். அவனுக்குக் கொடுத்த பொறுப்புக்கள் அவனைத் திருத்திவிட்டன என நினைத்தாள் அவள்.

''முஸம்மில். நீ அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு இங்கே வா. இன்று இரவைக்கு உனக்கும் அவளுக்கும் திருமணம். ஆனால்...''

''என்ன...?'' முஸம்மில் பதறியவாறு கேட்டான்.

''திருமணம் முடிந்ததும் நீயும் உன் மனைவியும் பெக்டரியில் வேலை செய்யணும்''

''பூ! இதுதானா? நாங்க அப்படி வேலை செய்வதா சத்தியம் செய்துதருவோம். வாப்பாவை எப்படி இதற்குச் சம்மதிக்க வைப்பே?''

''அந்தப் பொறுப்பு என்னுடையது. இரவைக்கே உனக்குக் கல்யாணம் நடக்கும். நீங்க இருவரும் குடியிருக்கக் குறைந்த வாடகைக்கு ஒரு வீடு பார்''

''தேவையில்லை சல்மா. அவளின் தாயின் குடிசையில் நாங்க தங்கலாம்''

''சரி. நீ எடுத்த காசைக் கொடு. கல்யாணத்துக்கு வேண்டிய செலவை நான் செய்கிறேன்'' கூறியவாறு முஸம்மிலை நோக்கிக் கையை நீட்டினாள்.

ஆயிரம் ரூபா பணம் கைமாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 15 —

நெசவு பெக்டரி தொடங்கப்பட்டு இரண்டு வருடங்களாகிவிட்டன. முப்பது தறிகள் முழுமூச்சுடன் இயங்கின. உற்பத்திக்கான கூடிய ஆடர்கள் உள்ள நாட்களில் இரவு பத்து மணிவரை வேலை நடைபெற்றது. பெக்டரி முழுவதும் குளுகுளுடியூப் பல்ப்கள் வெளிச்சத்தைக் கக்கின.

புதிய கல்வீடு கட்டி முடிவடைந்துவிட்டது. பழைய களிமண் வீடு உடைக்கப்பட்டு அங்கும் புதுக் கல்வீடு ஒன்றுக்கான அடித்தளம் போடப்பட்டிருந்தது.

மாஹிர் இப்போதெல்லாம் அடிக்கடி பெக்டரிக்கு வருவான். அவனுடைய ஓய்வுநேரம் அங்கேயே கழிந்தது.

அன்று மாஹிர் வந்தான். கூடவே பாத்திமா கைக் குழந்தையைத் தோளில் போட்டவாறு வந்தாள்.

வேலை முடிந்து வேலை ஆட்கள் சென்றுவிட்டனர். தறிகளில் வெட்டியெடுத்த உற்பத்திப் பொருட்களைச் சல்மாவும் பாயிஸாவும் சீராக மடித்துப் பொலிதீன் உறைகளில் போட்டுக் கொண்டிருந்தனர்.

பாத்திமாவின் கைக்குழந்தையைக் கண்டதுதான் தாமதம் வேலையை அப்படியே விட்டுவிட்டுக் குழந்தையாக மாறி நாக்கை வெளியே நீட்டிச் சிரித்தவாறு ஓடோடிவந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டாள் சல்மா.

தஸ்லீம் வீட்டிலேயே இருந்தார். மாஹிர் கதிரையொன்றில் உட்கார்ந்தான். பாத்திமா மின்சார விசிறிக்கான சுவிட்சைத் தட்டிவிட்டாள்.

''மாமா, சல்மாவை இப்படியே வைத்துக்கொண்டிருப்பது தானா? வீடும் முடிந்துவிட்டதே'' தஸ்லீமைப் பார்த்துக் கூறினான் மாஹிர்.

''அதுதான் நானும் யோசிக்கிறேன். ஒரு நல்ல இடம் வந்தால் முடித்துவிடலாம். அவளுக்கு வயதுகூட இருபதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாகிட்டு. எதற்காக வைத்துக்கொண்டிருக்கணும்?'' தஸ்லீம் திருப்பிக் கேட்டார்.

''அதைப்பற்றிக் கதைக்கத்தான் நாங்க இங்கே வந்தோம். சல்மாவுக்காக நான் ஓர் இடம் பார்த்துவைத்திருக்கிறேன்''

''யாரைப் பார்த்து இருக்கிறீங்க?''

கதவோரம் நின்ற மரியம் கேட்டாள்.

''ஓர் ஆசிரியர். எனக்குத் தெரிந்தவர். பதினையாயிரம் ரூபா கைக்கூலி கேக்கிறாங்க''

''பதினையாயிரம் ரூபாயா?''

''மாப்பிள்ளைமாருக்கு இருக்கிற விலைக்குப் பதினையாயிரத் துக்குச் சம்மதித்தாங்களே என்று சந்தோசப்படணும்.''

''ஆள் எப்படி?''

''எனக்கு நல்லாத் தெரிஞ்சவர். நம்ம சல்மாவுக்கு ஏற்ற வர். உங்களுக்குச் சம்மதம் என்றால், காசை ஒழுங்குபண்ண வேண்டியதுதான்''

''கைவசம் ஐயாயிரம் ரூபா இருக்கு. சல்மாவின் கணக்கில் இரண்டாயிரம் அளவில் இருக்கணும். மிகுதியை உடனடியாக ஒழுங்குசெய்வது கஸ்டம்தான். வீடுகட்டினதிலே நிறையப் பணம் செலவாயிட்டு'' என்றார் தஸ்லீம். பெக்டரியின் கணக்குகளை எழுதுபவர் அவர்தானே. நாக்கு நுனியில் கணக்குகள் தயாராய் இருந்தன.

''நான் மூவாயிரம் தாறன், எல்லாம் பத்து தேறும். பாக்கி ஐயாயிரத்துக்கு ஒழுங்குசெய்தால் சரி''

''அது எப்படி முடியும்? இப்போ கையிலிருக்கும் காசை எடுத்தாலோ பெக்டரி பாதிக்கப்படும். அப்படியிருக்க இன்னும் ஐயாயிரம் எப்படி எடுப்பது?''

அவருக்குச் சல்மாவின் திருமணத்தைவிட, பெக்டரி நடை பெறுவதில்தான் முழுக் கவனமும் இருந்தது. அவரும் இப்போது ஒரு வியாபாரியாக மாறிக்கொண்டுவருபவர் அல்லவா?

''உங்கள் வாடிக்கையாளர்கள் யாரிடமாவது கடனுகப் பெறமுடியாதா? வலியவேவரும் இந்த இடத்தை ஐயாயிரம் ரூபா குறைவதற்காகக் கைவிடுவது எனக்கு நல்லாத் தெரியலே''

''உங்களுக்கு நல்லாத் தெரியாமல் விடலாம். ஆனால், பணத்துக்கு எங்கே போவது? தறிகளைத்தான் விற்கணும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மாவின் திருமணம் தொடர்பாக அவர் காட்டிய பாராமுகப்பான்மை குறித்து மாஹிர் சிந்தித்தான். பெக்டரியை அமைக்க அவள் காட்டிய ஆர்வம், பட்ட சிரமங்கள், அனுபவித்த வேதனைகள், எல்லாமே அவன்முன் தோன்றின.

தஸ்லீம் வேலையிலிருந்து விலக்கப்பட்டபின்பு அந்தக் குடும்பத்தினர் பட்ட தொல்லைகள்... பட்டினியுடன் போராடியது... எல்லாமே அவன் மனத்திரையில் காட்சியளித்தன. அந்தக் குடும்பம் இன்று செல்வச் செழிப்பில் இருக்கக் காரணகர்த்தாவான சல்மாவுக்குத் திருமணம் செய்விக்க அவர் காட்டிய அலட்சிய மனப்பான்மை அவனைத் திகைக்கவைத்தது.

''பரவாயில்லை. உங்களால் எடுக்கமுடியாமல் இருக்கலாம். சல்மாவைக் கேட்டுப்பார்ப்போம்'' என்ற மாஹிர் சல்மாவை அழைத்தான்.

பாத்திமாவின் குழந்தையுடன் கொஞ்சிக்கொண்டிருந்தாலும் அவர்களின் உரையாடல் சல்மாவின் காதுகளிலும் விழுந்துகொண்டே இருந்தது. மாஹிர் அழைப்பது எதற்காக என்பது அவளுக்குத் தெரியும்.

''கூப்பிட்டீங்களா?'' கேட்டவாறு சல்மா வந்தாள்.

''சல்மா. இப்போது உன்னிடம் இருக்கும் பணத்தைத் தவிர ஓர் அவசரத் தேவைக்கு ஐயாயிரம் ரூபா தேவைப்படுது. பணத்தை ஒழுங்குபண்ண முடியுமா?''

''முடியுமே. றஸானுவின் கணக்கிலும் பாயிஸாவின் கணக்கிலும் சேமிப்பு வங்கியிலே நாலாயிரம் ரூபா கிடக்கு. மிகுதி ஆயிரம் உம்மா பிடிக்கும் சீட்டிலே எடுக்கலாம்''

சல்மா கூறி வாய் மூடவில்லை.

''அவர்களின் கணக்கில் கிடக்கும் பணத்தை இதற்கு எப்படிச் செலவழிக்கலாம்? றஸானு சல்மாவைவிட வளர்ந்து இருக்கிறாள். பாயிஸா வேறு குமராக இருக்கிறாள். நாளைக்கு அவங்களுக்கு ஒரு காரியம் பார்க்கப் பணம் வேண்டாமா?'' என்றார் தஸ்லீம்.

''பணம் எதற்காக?'' சல்மா கேட்டாள்.

மாஹிர் அவளிடம் எதையும் ஒளிக்கவில்லை. காரணத்தைக் கூறினான்.

''எனக்கு எதற்கு இப்போது கல்யாணம்?'' என்றாள். தகப்பன் கூறியவைகளைக் கேட்டபின் அவளுக்கு விரக்தியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படிச் சொன்னால்மட்டும் போதுமா? அவங்கபேரில் கிடக்கும் பணத்தை எடுத்து இந்தத் தேவைக்குப் பயன்படுத்தலாம். அப்புறம் நீயே உழைத்து அந்தத் தொகையை அவங்க சணக்கிலே போட்டுவிடு. நான் எதற்கும் நாளை பிற்பகல் வருகிறேன்''

அவள் ஒன்றும் பேசவில்லை. அவளும் பெண்தானே! அவளுக்கும் ஓர் இதயம் உண்டுதானே! ஒவ்வொரு பெண்ணுக்கும் வயதுக்குவரும் உணர்ச்சிகள் அவளுக்குமட்டும் இல்லாமல் போய்விடுமா?

வீட்டில் எல்லோரும் உறங்கிவிட்டனர். மின்சார விசிறியின் கீழ் குஷன்போட்ட கட்டில்களில் அவர்கள் ஆழ்ந்து நித்திரை செய்தனர்.

சல்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது.

தனக்குக் கிடைக்கப்போகும் மாப்பிள்ளையைப்பற்றிய கற்பனைகளில் மூழ்கினாள்.

எத்தனை மணிக்கு நித்திரை செய்தாளோ தெரியாது.

கனவில் ஓர் அழகான வாலிபன் அவள்முன் தோன்றி அவளை அங்கும் இங்குமாக.. நீர்வீழ்ச்சிக்குப் பின்னால்...பூங்காவில்.. கூடாரத்தினுள்.. கடற்கரையின் புதைந்த மணல் தரையில்... பௌர்ணமி நிலவில்... தெளிந்த நதிகளில்... அவளை அலைக்கழித்தான்.

அந்த வாலிப உருவம் உண்மையான ஒன்று என அவள் நம்பினாள். பாவம்! அது போலி என்பதை அப்போது அவள் அறிவாளா என்ன?

* * *

அடுத்தநாள். காலை பத்துமணி இருக்கலாம். பெக்டரியில் வேலை மும்முரமாக நடைபெற்றது.

புதிதாக வாங்கிய தறியொன்றைப் பொருத்துவதில் சல்மா ஈடுபட்டாள்.

'எப்போது பிற்பகலாகும்? எப்போது மாஹிர் மச்சான் வருவார்?' என்று அவளின் மனம் அலைபாய்ந்தது.

நேரம் நகர்ந்தது.

''சல்மா. கொஞ்சம் வந்துட்டுப்போயேன்'' என்ற குரல் அவளைத் திடுக்குற்றுத் திரும்பவைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்வந்த திசையைப் பார்த்தாள் சல்மா. அங்கு மூமினு நின்ருள்.

அவள் முகம் வாடி இருந்தது. கண்களில் கண்ணீர்த் துளிகள். தலை பரட்டையாகக் கிடந்தது. அழுக்குச் சீலையொன்றைச் சுற்றிக்கொண்டிருந்தாள். இந்தச் சீலையுடனும் இந்தக் கோலத்துடனும்தான் பாதையில் நடந்துவந்தாளா?

'அவளுக்கு என்னவோ நடந்து இருக்கணும். திரும்பவும் கணவனுடன் கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு வந்துவிட்டாளோ?'

ஆயிரம் சிந்தனைகளுடன் அவள் அருகில் சென்ருள் சல்மா.

வீட்டிற்குள் சென்றதும் செல்லாததுமாக... திடீரென்று கீழே குந்தி மூமினு சல்மாவின் கால்களைக் கட்டிப்பிடித்தாள்.

''சல்மா, நீதான் எங்களை இந்தச் சிக்கலில் இருந்து காப்பாத்தணும். உன்னைவிட்டால் எங்களுக்கு வேறு வழியே கிடையாது. நீ சரியென்று சொன்னுல்தான் நான் உன் காலை விடுவேன்''

''ராத்தா. உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? காலை விடு. என்ன நடந்தது?''

காலைப் பிடித்திருந்த மூமினுவின் கைகளைப் பிடித்து விலக்கி விட்டாள்.

''இல்லை. விடமாட்டேன். நீ சரியென்று சொல்லுமட்டும் நான் விடமாட்டேன்'' சிறு குழந்தையைப்போல அடிம்பிடித்தாள்.

''சரி. காலை விடு''

மூமினு பிடித்திருந்த சல்மாவின் காலை விட்டாள்.

''இப்ப சொல்லு. என்ன நடந்தது?''

''உன் மச்சானைப் பொலிஸ் புடிச்சிக்கொண்டு போயிட்டு; அவர் வேலை செய்த கந்தோரிலே பத்தாயிரம் ரூபா மோசடி பண்ணிப்போட்டாராம். உடனேயே அந்தக் காசைக் கொடுத்திட்டா அவரை விட்டுடுவாங்களாம்'' என்ருள் ஒவ்வொரு வார்த்தையாக.

''என்ன...? உன் புருஷனைப் பொலிஸ் பிடித்துக்கொண்டு போயிட்டா?'' என்ருர் அலறியவாறே சாய்மணையில் படுத்திருந்த தஸ்லீம்.

''ஓம் வாப்பா. அந்த சின்ன முதலாளி சுபைரோட இவர் நெருக்கமாப் பழகிக்கொண்டிருந்தாரு. அவங்க ரெண்டுபேருமா சூது விளையாடப் போவாங்க. நான் அவரைப் பலமுறை எச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரித்து இருக்கிறேன். கந்தோரிலே பண மோசடி செய்து அதுக்கு சூது விளையாடி இருக்கார். இந்த விஷயம் பொலிஸ் வந்தபின் தான் எனக்குத் தெரியவந்தது. அவரைத் தப்பவைக்கணும்னு மோசடி செய்த பணம் முழுவதையும் உடனடியாகக் கட்டிவிடணும் எனச் சொல்ருங்க. அப்படிச் செய்யலேன்னு அவர் ஜெயிலுக்குப் போகவேண்டி வருமாம்''

மூமினாவின் கணவன் ஜெயிலுக்குப் போவதைச் சல்மா நினைத்துப்பார்த்தாள்.

''நான் அப்போதே சொன்னேன். அந்த மோசடிக்காரனுடன் உன் மாப்பிள்ளை பழகக்கூடாதென்று'' என்ருர் தஸ்லீம்.

''சல்மா. நேரம் போகுது. ஒரு முடிவைச் சொல். இந்தச் சந்தர்ப்பத்தில் எங்களைக் காலைவாரி விட்டுடாதம்மா''

'ஆண்டவனே, இது என்ன சோதனை! எனக்காக ஒரு வாழ்க்கையை அமைக்க இருக்கும் இன்று, என் கூடப்பிறந்த சகோதரியின் வாழ்வு நாசமாவதா?'

மாஹிர் நேற்றுக் கதைத்தது... தகப்பனின் அலட்சிய மனப்பாங்கு... கடந்த இரவெல்லாம் கண்ட கனவுகள்... எல்லாமே அவள் மனதில் எழுந்தன.

நீண்டநேரம் அவள் சிந்தித்தாள்.

''வாப்பா, நம்மிடம் இருக்கும் ஏழாயிரத்தையும் ஒழுங்கு செய்து எடுங்க. காலையில புடவை வியாபாரி ஒருவர் தந்துவிட்டுச் சென்ற மூவாயிரம் எங்கிட்டே இருக்கு. பத்தாயிரத்தையும் எடுத்துக்கொண்டு மூமினா ராத்தாவுடன் போங்க'' என்ருள்.

அவளால் இந்த முடிவுக்கு வராமல் இருக்கமுடியவில்லை. அவள் என்னசெய்வாள்? மகிழ்ச்சி என்ற வார்த்தைக்கு அவளைப் பொறுத்தவரை தியாகம் என்பதுதானே அர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# —16—

சல்மாவின் திருமணம் தடைப்பட்டுச் சுமார் ஆறு மாதங்களாகிவிட்டன. அவளின் திருமணத்திற்குப் பயன்படுத்த வைத்திருந்த பணம், மூமினுவின் கணவனைத் தப்புவிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் திருமணத்தைப்பற்றி நினைக்கவே முடியாமல் இருந்தது.

அவள் செய்த முடிவுபற்றி மாஹிர் கோபப்பட்டாலும் அவளுடன் எதிர்க்க அவனால் முடியாமல் இருந்தது.

சல்மாவுக்கு ஒரு வரன் பார்ப்பதில் அவன் இன்னும் முனைந்தான்.

''என்னங்க, இப்படியே அவளை வைத்துக்கொண்டிருப்பதா? எங்கேயாவது ஒரு இடம் பாருங்களேன்'' என மரியம் தஸ்லீமை அடிக்கடி நச்சரித்தாள்.

''நீ என்ன பைத்தியகாரியாட்டம் கதைக்கிறே? தறியும் நடக்கணும், கல்யாணமும் முடியணும். எப்படி இரண்டையும் செய்வது? கொஞ்சம் கொஞ்சமா மிச்சம் பிடித்துத்தான் அவளுக்குக் கல்யாணம் முடிக்கணும்'' என்பார் கோபமாக.

''மிச்சம் பிடித்துக் கல்யாணம் முடிக்கிறதுக்கு இடையிலே அவளுச்கு வயது போயிடும். றஸானு அவளைவிடப் பெரிசா வளர்ந்து இருக்காள்'' என்பாள் மரியம்.

ஒருநாள் இரவு மாஹிர் அங்கு வந்தான்.

''மாமா. நான் சல்மாவுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து வைத்திருக்கேன். என்னுடன் படிப்பிக்கும் ஓர் ஆசிரியையின் தூரத்து முறையான ஆள். அவங்களுக்கு சல்மாவைத் தெரியாதாம். அதனுமேல மாப்பிள்ளையின் உம்மா பெண்ணைப் பார்க்க வருவதாக இருக்காங்க''

''கைக்கூலி எவ்வளவு?'' தஸ்லீம் கேட்டார்.

அந்தக் கேள்வியும், கேட்ட தோரணையும் மாஹிருக்குப் பிடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தைக் கொடுப்பது போலல்லவா கேட்கிறார்? இத்தனை வயதுக்கும் ஒரு நல்ல தொழில் தேடிக்கொள்ள முடியவில்லை. நாலுசதம் மிச்சம்பிடித்துத் தனக்காக ஒரு வீடு கட்டிக்கொள்ளத் தெரியவில்லை. ஆண்டுக்கொரு பிள்ளையைப் பெற்றுத்தள்ளமட்டும் தெரிந்திருக்கு. அந்தப் பிள்ளைகள் பசியோட பட்டினியோட கிடந்து தவிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கத் தெரிந்திருக்கு.

இப்போது என்னவென்றால், யாரோ இரவும் பகலும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்துக்குச் சிலையாக இருந்து வரவுக்கும் செலவுக்கும் கணக்குப் பார்க்கிறார்.

நாலுபேர் அவரை நல்லவர் என்று கருதலாம். ஆனால், பிள்ளைகள் தொடர்பாக அவர் காட்டும் அலட்சிய மனப்பான்மை அவரை ஒரு கொடியவராக அவனை நினைக்கவைத்தது.

''பணத்தைப்பற்றி நீங்க கவலைப்படத் தேவையில்லை. நாளைக்கு வெள்ளிக்கிழமை. பிற்பகல் பெண் பார்க்க ஆட்கள் வருவாங்க''

மாஹிரின் இந்தச் சூடான பதில் தஸ்லீமைச் சிந்திக்க வைத்தது.

'ஒருவேளை கைக்கூலியை மருமகன்தான் கொடுக்கப்போகிறாரோ? அவர்தான் போடியாரின் மகனாச்சே' தஸ்லீம் நினைத்தார்.

மாஹிர் சல்மாவைத் தனியே அழைத்தான். தான் வந்த நோக்கத்தை அவளிடம் கூறினான்.

அவளிடமிருந்து அவன் விடைபெற்றுச் செல்லும்போது அவனுடைய மனம் அமைதியாக இருந்தது. கைக்கூலி ஏழாயிரத்தில் நாலாயிரத்தை ஒழுங்குசெய்து தருவதாக சல்மா அவனிடம் கூறியிருந்தாள்.

★ ★ ★

பெண் பார்க்கவந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் போய்விட்டனர்.

தானே நெய்த கைத்தறிச் சேலையொன்றை உடுத்துச் சிம்பிளாக அலங்கரித்துக்கொண்டிருந்த சல்மா அவர்கள் போனதும் சேலையைக் களைவதற்காக அறைக்குள் சென்றாள். அந்த வீட்டுக்கு வந்த பெண்களை வரவேற்பதற்காக அழகிய பட்டுச்சேலை அணிந்து அங்கும் இங்கும் ஓடியாடித் திரிந்த றஸானா நின்று சாரியைக் களைந்துகொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சல்மா, உன்னை இன்னும் இரண்டொரு நாட்களுக்குத் தான் நாங்க பெயர்சொல்லிச் சல்மான்னு கூப்பிடலாம் இல்லையா? அப்புறம் ராத்தா என்றுதான் கூப்பிடனும்'' என்றாள் றஸானு.

''ஏன் அப்படி சொல்றே?''

''கல்யாணம் முடிஞ்சபின்னாலே உன் பேரைச் சொல்லிக் கூப்பிட்டா மச்சான் கோபிப்பார் இல்லையா?'' கூறி வாய்விட்டுச் சிரித்தாள். இயற்கையிலே மிக அழகியான அவள் அப்படிச் சிரிக்கும்போது இன்னும் அழகாகக் காட்சியளித்தாள்.

''இன்னும் நாலைந்து மாதங்களில் நான்கூட உன்னைப் பெயர்சொல்லிக் கூப்பிடமுடியாமல் போய்விடும் இல்லையா?''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''எனக்குக் கல்யாணம் முடிந்ததும் அடுத்தது நீதானே, உன் அழகுக்குப் போட்டிபோட்டு மாப்பிள்ளைமார் வருவாங்க. உனக்குக் கல்யாணம் ஆகிட்டா உன்னைப் பெயர்சொல்லி நாங்க கூப்பிடலாமா?''

இரு சகோதரிகளும் வாய்விட்டுச் சிரித்தனர்.

★ ★ ★

இரவு சுமார் எட்டுமணி இருக்கும்.

மாஹிர் பாத்திமாவுடன் அங்கு வந்தான். அவன் முகம் சோம்பி இருந்தது. எதையோ நினைத்து மனதுக்குள் அழுகிறான் என முகம் காட்டியது.

அவன் கூறப்போவதைக் கேட்பதற்காகக் கட்டுக்கடங்காத ஆவலுடன் ஓடிவந்து அடுத்த அறைக்குள் நின்றாள் சல்மா.

மரியம் கதவு நிலையில் சாய்ந்துநின்று ''தம்பி, அவங்க வீட்டுக்குப் போனீங்களா?'' என்றாள்.

''போனேன்''

''என்ன சொன்னாங்க? பெண் பிடித்திருக்காமா?''

''பெண் பிடித்திருக்காம். ஆனால்...''

''ஆனால்... என்ன? கைக்கூலி கூடுதலாகக் கேட்கிறாங்களா?'' தஸ்லீம் கேட்டார்.

''இல்லை, அதை எப்படிச் சொல்வது என்றுதான் எனக்குத் தெரியாமல் இருக்கு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மாவால் இருப்புக்கொள்ள முடியவில்லே. அவர்கள் என்ன தான் கூறியிருப்பார்கள்? பெண் பிடித்திருக்கிறதாம். கைக்கூலியிலும் பிரச்சினை இல்லே. அப்படியென்ருல் வேறு என்ன நடந்திருக்கும்?

மாஹிர் பேசாமல் இருப்பது அவளுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

''என்னதான் சொன்னுங்க. சொல்லுங்களேன்'' என்ருள் மரியம்.

''நான் எப்படிச் சொல்வேன்?''

''சொல்லுங்க தம்பி''

''அவங்களுக்கு சல்மாவைப் பிடிக்கவில்லேயாம். றஸாணுவைத்தான் பிடிச்சிருக்காம். றஸாணுவை முடிப்பதாணுல்... நாளேக்கே கல்யாணத்தை வைத்துக்கொள்ளலாம் எங்கிருங்க'' என்று மாஹிர் கூறியபோது —

''என்ன? றஸாணுவைப் பிடிச்சிருக்காமா?'' தஸ்லீம் உரக்கவே கேட்டார்.

சல்மாவின் தலே சுற்றியது. மயக்கம் ஏற்படுவதுபோல் இருந்தது. தலேயைத் தாங்கிக்கொண்டு மெதுவாகக் கீழே கிடந்த பாயொன்றில் உட்கார்ந்தாள்.

''அது எப்படி முடியும்? மூத்தவள் இருக்க இளேயவளுக்கு முடிப்பதா? இந்தச் சம்பந்தமே தேவையில்லே'' மரியம் மறுத்தாள்.

''உண்மைதான். சல்மாவை வைத்துவிட்டு றஸாணுவுக்கு எப்படி முடிப்பது? நாலுபேர் என்ன சொல்வாங்க? எப்படியாவது சல்மாவுக்கு ஓர் இடம் பார்த்துவிட்டு றஸாணுவுக்கு வேறு இடம் பார்க்கலாம்'' என்ருர் தஸ்லீம்.

''இப்படிச் செய்யமுடியாதா?'' மரியம் குறுக்கிட்டாள்.

''எப்படி?'' மாஹிர் கேட்டான்.

''இந்த சம்பந்தத்தைப் பேசி முடிவுசெய்து வைப்போம். அதற்கிடையில் சல்மாவுக்கு வேறு இடமொன்றைப் பார்ப்போம். அது சரிப்பட்டால் இரண்டுபேருக்குமே முடித்திடலாம்''

''அது எப்படி முடியும்? உள்ளது ஒரே ஒரு வீடு. அடுத்த வீட்டுக்கு இப்போதுதான் அடித்தளம் போட்டிருக்கிருேம். அது முடிய நாளாகும். இரண்டு கல்யாணம் என்ருல் இரண்டு மடங்கு கைக்கூலி தேவைப்படும். இதுக்கெல்லாம் காசு எங்கே கொட்டிக் கிடக்கு? ஒரு கல்யாணத்தைத்தான் இப்போது முடிக்கலாம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹிர் சிந்தித்தான். அவர் சொல்வதில் நியாயம் இருப்ப தாகப் பட்டது.

''இந்தக் கல்யாணம் சம்பந்தமாக என்ன முடிவு சொல் வது?'' மாஹிர் கேட்டான்.

''வேண்டாமென்று சொல்லிடுங்க'' தஸ்லீம் கூறிவிட்டு மரியத்தைப் பார்த்தார். அவளும் ஒத்து ஊதினுள்.

''நான்போய் சொல்லிவிடுகிறேன்'' மாஹிர் எழுந்தான்.

சல்மாவால் இன்னும் அமைதியாக இருக்கமுடியவில்லை. அவள் எழுந்து ஹர்லுக்குள் சென்ருள்.

''மச்சான். சற்று நில்லுங்க''

மாஹிர் சிலையாக நின்ருன்.

''நீங்க என்ன முடிவைச் சொல்லப்போறீங்க?''

''இந்த முடிவு உனக்குத் தேவையில்லாத ஒன்று. நீ இதில் தலையிடத் தேவையில்லை''

''ஏன் தலையிடக்கூடாது? உங்க முடிவு எனக்குத் தெரியும்''

''அப்படியென்ருல் நீ உன் வேலையைப் பார். எல்லாவற் றிலும் நீ தலையிடுவதால்தான் உனக்கு ஒரு காரியமுமே நடக் காமல் இருக்கிறது''

''நீங்க என்னைத் தவருகப் புரிந்துகொண்டிருக்கிறீங்க என்று நினைக்கிறேன்''

''இல்லை. இந்த வீட்டில் உன்னைப் புரிந்துகொண்ட ஆள் நான் மட்டும்தான. நீ இப்போது என்ன சொல்லப்போகிருய் என்பது எனக்குத் தெரியும். ஆனல் இம்முறைமட்டும் நான் உன் முடிவுக்குச் சம்மதிக்கப்போவதேயில்லை. உனக்காகக் கட்டிய வீட்டில் உனக்குத் திருமணம் நடந்தபின்புதான் மற்றவர்களுக்கு'' என்று கூறிவிட்டு மாஹிர் வெளியேறினுன்.

''நில்லுங்க''

சல்மா அவனைத் தடுத்து நிறுத்தினுள்.

''நான் சொல்வதைமட்டும் கேட்டுவிட்டுப் போங்க'' என்ருள் சல்மா.

மாஹிர் நிதானித்து அவள் முகத்தைப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க என்னை விரும்பல்ல. றஸானாவை விரும்புறாங்க. றஸானா எனக்கு இளையவள். ஆனா என்னை விட வளர்ந்து இருக்கிறாள். அவளைத்தேடி ஒரு வரன் வரும் போது அதைத் தட்டிக்கழிப்பது முட்டாள்தனம். இந்த வீடு எனக்குமட்டுமா சொந்தம்..? நான் முடித்தா என்ன? றஸானா முடித்தா என்ன? எனக்குத் தொழில் இருக்கு. அதிலே முன்னேற லாம் என்ற நம்பிக்கை இருக்கு. றஸானாவுக்கு என்ன இருக்கு? அதனாலே வலியவே வருவதை எதற்காக உதறித்தள்ளணும்? அவங்க விருப்பம்போல றஸானாவுக்கே இதை முடித்துவைப் போம்'' என்றாள் சல்மா.

''உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கு. இல்லாவிட் டால் உனக்காக வரும் ஒவ்வொரு மாப்பிள்ளையையும் இப் படியே விட்டுக்கொடுப்பாயா? வாழ்க்கையெல்லாம் கன்னியாகவே காலம் கழிக்கணும் என்பதுதான் உன் விதியா?'' மாஹிர் கோபமாகக் கேட்டான்.

''இதோ பாருங்க, நீங்க உங்க முடிவை மாற்றி, றஸானா வுக்குத் திருமணம் செய்விக்காமல்விட்டால் மாப்பிள்ளை வீட்டா ரிடம் நானே சென்று இந்தக் கல்யாணத்துக்கு ஒழுங்குசெய்வேன்''

நீண்டநேரம் ஒருவரும் பேசவில்லை.

ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் சல்மாவின் முடிவையிட்டுச் சிந்தித்தனர்.

தஸ்லீம் நிசப்தத்தைக் கலைத்தார்.

''அவ பிடிவாதக்காரி. அவ சொல்வதுபோலவே செய் துடலாம்''

அவர் இந்த முடிவுக்கு வருவார் என்பது மாஹிருக்குத் தெரியும். அவருக்கு எப்படியோ ஒரு சுமை கழன்றால் சரி.

''சல்மா! நீ எங்களை வென்றுவிட்டாய். உன் முடிவின் படியே காரியங்கள் நடக்கட்டும்'' என்றான் மாஹிர். அவன் உள்ளம் வெம்பி அழுதுகொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

ரேஸாவின் திருமணம் முடிந்து சுமார் ஒரு வருடமாகி விட்டது.

இந்த ஒருவருட காலத்தில் பெக்டரி பலவகையில் விருத்தி யாகி இருந்தது. நாற்பது தறிகள் கிடந்தன.

அறுபதுக்கும் அதிகமானோர் வேலை செய்தனர். நாளாந்தம் நூற்றுக்கும் அதிகமான சாரிகளும், சாரன்களும் உற்பத்தியாகின.

சல்மாவின் வீட்டைச் சுற்றியுள்ள சகல குடும்பங்களும் இப்போது அந்த பெக்டரியை ஏதோவகையில் நம்பி வாழ்ந்து கொண்டிருந்தனர்.

கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பெக்டரியில் வைக்கப் பட்டிருந்த உண்டியலில் கிழமைதோறும் பல நூறு ரூபாய்கள் சேர்ந்தன.

எந்த வருடங்களிலுமில்லாதவாறு கடந்த இரண்டொரு வருடங்களாகப் பல மாணவ மாணவிகள் அந்தக் கிராமத்தி லிருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டனர்.

உயர்கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்குப் பெக்டரியி லிருந்து மாதாந்தம் பணம் அனுப்பப்பட்டது.

மிகச் சமீபத்தில் ஒருநாள் —

சல்மா படித்த பாடசாலையில் சாதாரணதரப் பரீட்சையில் மிகக் கூடுதலான மாணவிகள் சித்தியடைந்தமைக்காக ஒரு பெரு விழா நடைபெற்றது.

அங்கு —

பிரதம விருந்தினராக சல்மா அழைக்கப்பட்டிருந்தாள்.

பாடசாலை அதிபர் மலர்செண்டு கொடுத்து அவளை வர வேற்றார் - பாராட்டிப் பேசினார்.

பாடசாலையின் உடனடி தேவையான விஞ்ஞான கூடத் தைத் தன்செலவில் கட்டித்தருவதாக சல்மா வாக்களித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு அந்த நிகழ்ச்சி மனநிறைவை அளித்தது.

வீட்டுக்குத் திரும்பும்போது அன்று பாடசாலையில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நினைத்து மகிழ்ந்திருந்தாள் அவள்.

அன்று —

வீட்டில் அவளுக்கு ஒரு அதிர்ச்சிச் செய்தி காத்திருந்தது.

தஸ்லீம் கட்டிலில் படுத்திருந்தார். அருகே ஒரு டாக்டர். அழுத முகத்தோடு மரியம் நின்ருள்.

தஸ்லீமுக்குக் கடந்த சில நாட்களாகக் காய்ச்சல் அடித்தது சல்மாவுக்குத் தெரியும்.

''உம்மா, வாப்பாவுக்குத் திடீரென என்ன நடந்தது?''

''நான் எப்படிச் சொல்வேன்?'' கூறியவாறு மரியம் அழுதாள்.

''உம்மா, என்ன நடந்தது சொல்லேன்.''

''பின்னேரம் ஓரே காய்ச்சலாயிருக்கு எனப் படுத்தார். நீ சென்றபின் கட்டிலிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டார். இப்போது ஒருபக்கத்துக் கையும், காலும் வழங்காமப்போயிட்டாம்''

''அதாவது வாப்பாவுக்குப் பாரிசவாதமா?'' கேட்கும் போதே அவள் கண்கள் கலங்கின.

''டாக்டர் அப்படித்தான் கூறுகிருர்'' மரியம் அழுதாள். சல்மாவால் அழுகையை அடக்கமுடியவில்லை. அவளும் அழுதாள்.

அவர்கள் இருவரும் அழுவதைக் கண்ணுற்ற தஸ்லீம், பாரிசவாதத்தால் பாதிப்புற்ற தனது கையை மெதுவாக அசைக்க முயற்சித்தவாறு அழவேண்டாமெனச் சாடைகாட்டினுர். அவர் பட்ட சிரமத்தைக் கண்ட சல்மா மேலும் அழுதாள்.

டாக்டர் மருந்துச் சிட்டையைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார்.

சல்மா தகப்பனின் அருகே அமர்ந்து அவரின் கால்களைப் பிடித்துவிட்டாள்.

அவர் தன் மற்றக் கையால் முதுகில் கருமேகமாகப் படர்ந்துகிடந்த அவளுடைய கூந்தலை மெதுவாகத் தடவிவிட்டார்.

''வாப்பா, உங்களுக்கு என்ன செய்யுது?'' அவள் மெதுவாகக் கேட்டாள்.

தஸ்லீம் ஏதோ சொல்ல வாயெடுத்தார். வாயிலிருந்து வார்த்தைகள் சரிவர வெளிவரவில்லை. அவர் திரும்பவும் முயற்சித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையோ சொல்ல நினைத்து வாயைச் சப்பினர். வார்த்தைகள் ஒழுங்காக வெளிவர மறுத்தன.

''உம்மா இங்கே வாயேன். வாப்பாவுக்குப் பேசமுடியாமலும் போயிட்டு'' என்று சல்மா கூவினள்.

குசினிக்குள் நின்ற மரியமும் பாயிஸாவும் புயலென ஓடி வந்தனர். அந்தக் கூக்குரலைக்கேட்டு அடுத்த வீட்டிலிருந்து றஸானுவும் ஓடிவந்தாள்.

''உம்மா பார்த்தாயா...? வாப்பா பேசும் சக்தியை இழந்து விட்டார்'' என்று சல்மா கூறியதைக்கேட்டு அனைவரும் அழுதனர்.

அந்தக் காட்சியைப் பார்த்துச் சகிக்கமுடியாமல் ஊமையாகத் தஸ்லீமும் அழுதார்.

* * *

பெக்டரியில் உற்பத்தியாகும் துணிகளை வாங்குவதற்காக இப்போதெல்லாம் பலர் அங்கு வந்தனர்.

அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தையில் பெரும் கிராக்கி இருந்தது. கொழும்பிலுள்ள புடவை வியாபாரிகள் அந்தப் பெக்டரியின் சாரங்களைப் பெரிதும் விரும்பி வாங்கினர்.

அந்த வியாபாரிகளில் ஒருவன்தான் நயீம்.

அவன் ஒரு வாலிபன். அடிக்கடி அங்கு வந்துபோகத் தொடங்கினன்.

சில மாதங்களாக நயீம் அங்கு வந்துகொண்டிருந்தான். சாரன்களை வாங்கி வேறுபல ஊர்களுக்குச் சென்று வியாபாரம் செய்வதில் அவன் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

அவனுக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கும். நீண்டு வளர்ந்திருந்தான். பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தான். கவர்ச்சியாக உடை அணிவான்.

நயீம் வியாபாரம் செய்யத்தொடங்கிய நாட்களில் கைக் காசுக்குத்தான் சல்மாவிடம் துணிகளை வாங்குவான். இப்போதெல்லாம சிலசமயங்களில் கடனுக்குக்கூட வாங்கினன். குறித்த தவணையில் கணக்குகளை ஒழுங்காக முடித்துக்கொளவான்.

தஸ்லீம் பாரிசவாத்துக்கு ஆளாகிப் படுக்கையில் வீழ்ந்த பின்னர், கணக்குவேலைகளைப் பாயஸாதான் கவனித்தாள்.

நயீம் தொடர்பான கணக்குகளைப் பாயிஸாதான் பார்ப்பாள். அவர்கள் இருவரும் மேசையொன்றில் அமர்ந்து நீண்ட நேரம் கணக்குகளைப் பார்ப்பார்கள. அவன கொடுககும் பணத்தை எண்ணிக் கட்டி அலுமாரியில் வைப்பாள பாயிஸா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் நயீமைப்பற்றிச் சல்மா அவ்வளவு சிரத்தை காட்டவில்லை. அங்குவரும் வியாபாரிகளில் அவனையும் ஒருவனாகவே அவள் கணித்தாள். ஆனால் அவன் அவளுடன் பழகும் பண்பு, மரியாதை, கொடுக்கல் வாங்கலில் காட்டும் நேர்மை ஆகியவை அவளுக்குப் பிடித்திருந்தது.

அவன் சல்மாவைப் பெயர் சொல்லியே அழைத்தான். அவள் அதற்காக எந்த அதிருப்தியையும் தெரிவிக்கவில்லை.

''சல்மா, உங்க உற்பத்திகள் எல்லாவற்றிற்கும் ஒரு சோல் ஏஜன்டை நியமிக்கலாமே. உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் நானே உங்க உற்பத்தி அனைத்தையும் வாங்கிக்கொள்கிறேன்'' என்றான் நயீம் ஒருநாள்.

சல்மாவுக்கு இந்த யோசனை பிடித்திருந்தது. எதற்கும் அவனைபற்றித் தீர விசாரித்துவிட்டுத்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென நினைத்தாள்.

இது தொடர்பாக விசாரித்தபோது, தனது தகப்பனை வேலையிலிருந்து விலக்கக் காரணமாயிருந்த சின்ன முதலாளி சுபைரின் மகன்தான் நயீம் என்பது அவளுக்குத் தெரியவந்தது.

நாட்கள் நகர்ந்தன.

* * *

அன்று வெள்ளிக்கிழமை. பெக்டரி விடுமுறை தினம்.

சல்மா பெக்டரிக்குள் இருந்து அந்தக் கிழமைக்குரிய உற்பத்தி தொடர்பான கணக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

கடந்த சில நாட்களாகப் பெருமழை பெய்ததால் உற்பத்தி குறைந்திருந்தது. மழைக் குளிரினால் நூல்கள் உப்பி நெய்யும் போது அடிக்கடி அறுந்தன. வேலை ஆட்கள் வருகையும் குறைந்து காணப்பட்டது.

மழை நாட்களில் வழக்கமாக ஏற்படும் ஆஸ்மா நோய் மரியத்திற்கு இம்முறையும் ஏற்பட்டு இருந்தது.

அன்று —

கேற்றைத் திறந்துகொண்டு யாரோ வருவதை சல்மா அவதானித்தாள்.

வந்தவருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கலாம். அவரை எங்கோயோ பார்த்திருப்பதாக அவள் நினைத்தாள். எவ்வளவு தான் முயன்றும் அவரை யாரென அவளால் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை.

''சல்மா என்பது நீதானா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கேள்வி அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஏகவசனத்தில் அவளை யாரும் அழைப்பதில்லை.

''ஏன்? நான்தான் சல்மா''

''நீ இங்கே பெக்டரி நடத்துகிறாயா? அல்லது பெண்களை வைத்து வியாபாரம் நடத்துகிறாயா?''

இதைக் கேட்டதும் அவள் பெண்புலியாக மாறினாள். பக்கத்தில் கிடந்த தடியொன்றை எடுத்து ஒரே அடியாக அவருடைய தலையில் அடித்து அவரைக் கொலைசெய்தால்கூட அவளின் கோபம் அடங்காதுபோலிருந்தது.

''நீங்க என்ன சொல்றீங்க?''

''ஏன் உனக்குப் புரியவில்லையா? உன் தங்கச்சிகளை எல்லாம் இங்கே வைத்துக்கொண்டு, உன்னிடம் வரும் நல்ல ஆட்களாகப்பார்த்து அவங்களோடு பழக்கப்படுத்திவிடுறே. அவன்கள் கட்டினா உன் தங்கச்சியைத்தான் கட்டுவேன் எனப் பைத்தியம் பிடித்து அலைகிறான்கள். அதற்கு ஏற்றாற்போல உன் வாப்பா வேறு இருக்கார். நீங்களெல்லாம் எதற்காகத் தொழில்செய்து ஆம்பிளைங்களை வரவழைக்கிறீங்க? பொம்பிளைங்க வீட்டிலே அடங்கி இருக்கணும். தொழில் செய்கிறாங்களாம் தொழில்! தூ!'' கூறியவாறு வெளியே துப்பினார்.

அவளை அவமதித்தது... அவளுடைய தகப்பனை அவமதித்தது... உயிருக்கு உயிராக நேசிக்கும் அவளுடைய தொழிலை அவமதித்தது... ஆகிய அத்தனையும் சேர்ந்து அவளைப் பொறுமை இழக்கவைத்தன.

''என்ன முட்டாள்தனமாகக் கதைக்கிறீங்க? நீங்க வயதானவர் என்பதற்காக மரியாதை தந்தேன். இல்லாவிட்டால்...''

''இல்லாவிட்டால் என்ன செய்வே?''

''நான் கதைத்திருக்கமாட்டேன், என் காலில் கிடப்பதுதான் பதில் சொல்லியிருக்கும்''

''என்னை உனக்கு யாரெனத் தெரியாது என நினைக்கிறேன். தெரிந்திருந்தா இப்படிக் கதைத்திருக்கமாட்டே...''

''நீங்க யாரா இருந்தா எனக்கு என்ன? வந்த காரியத்தைச் சொல்லிட்டு வெளியே போங்க''

''அதைச் சொல்லத்தான் வந்தேன். உன் தங்கச்சி பாயிஸா என்று ஒருத்தி இங்கு இருக்காளாம். கல்யாணம் செய்தா அவளைத்தான் செய்வேன் என என்மகன் ஒத்தைக்காலில் நிற்கிறான். நீங்க அவனுக்கு ஏதோ சூனியம் செய்துட்டீங்கபோல இருக்கு. அதுதான் அவன் அப்படி நிற்கிறான். ஆனா ஒன்று சொல்கிறேன், இந்தக் கல்யாணம் நடக்க நான் விடமாட்டேன். உன் தங்கச்சிக்கிட்டே அவனை மறந்துவிடச்சொல்லு'' அவர் கூறிமுடித்தபோது—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சட்டெனப் புரிந்துகொண்டாள். வந்தவர் நயீமின் தகப்பன் சுபைர் என்பதை. அவரை எங்கோயோ பார்த்ததாக அவள் நினைத்ததெல்லாம் நயீமின் முகச்சாயல் அவரில் இருந்தது தான்.

அவர் கூறிய தகவல்கள் அவளுக்குப் புதிதாக இருந்தன.

நயீமும் பாயிஸாவும் ஆளை ஆள் விரும்புகிறார்களா? அவள் சிந்தித்தாள்.

''உங்கபாட்டுக்குக் கதைத்துக்கொண்டுபோனு நான் என்ன சொல்வது? முதலிலே நீங்க யாரென சொல்லுங்க?''

''நான்தான் இங்கே அடிக்கடி துணி வாங்கவரும் நயீமின் தகப்பன். இப்ப தெரியுதா?''

இவரைப்பற்றியா அவளுக்குத் தெரியாது?

இவருக்கும் நயீமுக்கும் எத்தனை வித்தியாசங்கள்? இந்தக் குப்பையிலா அந்த முத்து உதித்தது?

பாயிஸாவுக்கும் நயீமுக்கும் காதலா? இதுமட்டும் உண்மையாய் இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு அவர் செய்த துரோகத்துக்கு அவரைப் பழிவாங்க இதைவிட நல்ல சந்தர்ப்பம் இருப்பதாகச் சல்மாவுக்குத் தெரியவில்லை.

''இதோபாருங்க, இதைப்பற்றி என்னிடம் கதைப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது. நீங்க உங்க மகனைக் கட்டுப்படுத்துங்க. எனக்கு வேலை இருக்கிறது. நீங்க போகலாம்''

''அவ்வளவு அலட்சியமா? ஆனு ஒன்று சொல்றன். நான் அறியாமல் இந்தக் கல்யாணம் நடைபெற்றுல்.. உங்க குடும்பத்தையே பூண்டோடு அழிப்பேன். ஜாக்கிரதை'' கூறியவாறு சுபைர் வெளியேறினர்.

நயீம், பாயிஸா திருமணத்தை எவ்வாறு நடத்தி வைக்கலாம் என்ற சிந்தனையில் மூழ்கினள் சல்மா.

* * *

அன்று இரவு சுமார் எட்டுமணி இருக்கும்.

தடதடவென முன்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. சல்மா தாழ்ப்பாளை அகற்றிக் கதவைத் திறந்தாள். அங்கு நயீம் நின்றுன்.

''வாங்க''

''சல்மா. என் வாப்பா இங்கு வந்தாரா?'' நயீம் ஹாலுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகக் கேட்டான்.

''பிற்பகல் வந்தார்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன சொன்னார்? உங்களை எல்லாம் ஏசினாரா?''

''என்னவோ சொன்னார். ஏன் கேட்கிறீங்க?''

''சல்மா. உங்களுக்கு இப்போது எல்லாமே தெரிந்திருக்கும். இந்த வீட்டின் தலைவி நீங்கதானே. எத்தனை நாட்கள் உங்களிடம் மறைத்துவைக்கலாம்? இதோபாருங்க, உங்க தங்கச்சியும் நானும் ஆளை ஆள் மனதார நேசிக்கிறோம். எங்க ரெண்டு பேரையும் சேர்த்துவைப்பது உங்க கையிலேதான் இருக்கு''

''அதற்கு உங்க வாப்பா சம்மதிப்பாரா?''

''அவரை விட்டுத்தள்ளுங்க. இப்போதெல்லாம் நான் அவரை ஒரு மனிதனாக மதிப்பதேயில்லை. அவர் உங்க குடும்பத்துக்குச் செய்த துரோகங்கள் எனக்குத் தெரியும். அவைகளுக்குப் பிராயச்சித்தம் உங்க தங்கச்சியை நான் முடிப்பதுதான் என்று எனக்குத் தோணுது''

இதைக் கேட்டதும் சல்மா சிந்தித்தாள்.

அவள் அறிந்ததெல்லாம் சுபைர் அந்தக் குடும்பத்துக்குச் செய்த ஒரு துரோகத்தைப்பற்றி மட்டும்தான். இப்போது இவன் துரோகங்கள் எனப் பன்மையில் கூறுகிறானே...

அப்படியென்றால்... இன்னும் ஏதோ நடந்திருக்கவேண்டும். சல்மாவின் மனம் அவைகளை அறியவேண்டுமென துடிதுடித்தது.

''உங்க வாப்பா அப்படி என்னதான் எங்களுக்குச் செய்தாரு?'' அவள் கேட்டாள்.

''கடையிலே மோசடி செய்துட்டு உங்க வாப்பாமேலே அந்தப் பழியைப் போட்டாரு. அப்புறம் உங்க மச்சான் மாஹிரை என் தங்கச்சிக்குக் கல்யாணம் முடிக்க முயற்சித்தார். நீங்க அவரை எடுத்ததாலே உங்கமேலே கோபப்பட்டு உங்க மூத்த மச்சான் ஜெமீலுடன் நட்புவைத்து அவரை அவர் வேலைசெய்யும் கந்தோரில் மோசடி செய்யத் தூண்டினார். நல்லவேளை நீங்க தலையிட்டுக் காப்பாற்றிவிட்டீங்க. என் வாப்பாவின் தொழிலே இதுதான். இப்போது பணத்துக்காக ஆசைப்பட்டு விவாகரத்துச் செய்துகொண்ட பெண்ணொருத்தியைக் கட்டிக்கச்சொல்லி என்னை வற்புறுத்துகிறார். ஆனால் அவரின் திட்டம் பலிக்காது'' என்றான் வீறாப்பாக நயீம்.

அவர்கள் இருவரும் நீண்டநேரம் உரையாடினர். அந்த உரையாடலின் முடிவு நயீம் சல்மாவின் தங்கை பாயிஸாவைக் கைப்பிடிப்பதை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 18 —

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் பாயிஸாவின் திருமணம் நடைபெற்று ஐந்து நாட்களாகிவிட்டன.

கல்யாணத்துக்காகப் போடப்பட்டிருந்த பந்தல்கள் அவிழ்த்துவிடப்பட்டிருந்தன.

வீடு மொட்டையாகக் காட்சியளித்தது.

சல்மா பெக்டரிக்குள் ஏகாந்தமாக உட்கார்ந்து இருந்தாள்.

பெக்டரியில் வேலை செய்பவர்கள் போய்விட்டனர்.

தூரத்தே நின்ற மரமொன்றில் காகம் ஒன்று கரையும் சப்தம் விட்டுவிட்டுக் கேட்டது.

பெக்டரிக்குப் பக்கத்தில் நின்ற மரமொன்றில் அணில் பிள்ளையொன்று தனியாக உட்கார்ந்து இருந்தது.

தூரத்தே வானத்தில் புருவொன்று தனியாகப் பறந்து சென்றது.

சல்மாவின் நிலையும் இப்போது இப்படித்தான். ஏகாந்தம்! ஒரே ஏகாந்தம்!

சல்மா பெக்டரியில் கிடந்த அத்தனை தறிகளையும் கண்களால் மேய்ந்தாள். தன் உழைப்புக்கு அவைகள் சாட்சி என எண்ணிக்கொண்டாள்.

திடீரென மீரானின் நினைவு அவளுக்கு எழுந்தது. பெக்டரி திறந்தநாளன்று அவரைச் சந்தித்ததுதான். பின்னர் அவர் அந்தப் பக்கம் வரவே இல்லை.

அவர் திருமணம் செய்துகொண்டு எங்கோ குழந்தை குட்டிகளுடன் இருப்பதாகச் சமீபத்தில் மாஹிர் சொல்லக் கேட்டாள்.

அவரைப் பார்க்கவேண்டும்போல் இருந்தது அவளுக்கு. அவருடைய விலாசம் தெரியாது. இல்லாவிட்டால் கடிதம் எழுதி அவரை வரவழைக்கலாம்.

மீரானின் எண்ணத்தைத் தொடர்ந்து அவளின் மனத் திரையில் ரூமினா காட்சி அளித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூமினு எப்படி இருந்தவள். இப்போது எப்படித் திருந்தி விட்டாள்? வயிற்றில் குழந்தையொன்றைச் சுமந்தவாறு இன்னும் ராட்டினத்தில் நூல் சுற்றுகிருளே? இப்போதெல்லாம் அவள் கணவனுடன் சண்டை பிடிப்பதே இல்லை.

ஜெமீல்கூடத் தலைகீழாக மாறிவிட்டார். குட்டி போட்ட பூனையாக மனைவியைச் சுற்றிக்கொண்டிருக்கிருராம்.

அவளின் சிந்தனையில் முஸம்மில் குறுக்கிட்டான்.

எத்தகைய முரடனுக இருந்தவன் அவன்! பொறுப்பு என்பதையே அறியாதவன். தாயை டாக்டரிடம் கூட்டிப்போகக் கார் பிடிப்பதற்காகக் கொடுத்த பணத்தில் வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு வந்தவன்.

இப்போதெல்லாம் இவன் இல்லாவிட்டால் பெக்டரியே இயங்காது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

தன் அருமை மனைவியுடன் என்ன அழகாகக் குடும்பம் நடத்துகிருன்.

முஸம்மிலின் சிந்தனையில் லயித்திருந்த சல்மாவின் மனதில் அடுத்ததாகப் பாத்திமா வந்தாள்.

பாத்திமா! அப்பாவிப் பெண்!

அவள் விரும்பிய கணவனையே அடைந்துவிட்டாள். அவளுடைய குழந்தைதான் எத்தனை அழகு!

இப்போதுகூட நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கிருள். பிரசவத்திற்காக நாளைக்கு இங்கு கூட்டிவருவதாக மாஹிர் மச்சான் நேற்றுச் சொன்னுரே!

அவளுடைய முதல் குழந்தையும் இங்குதான் பிறந்தது.

அடேயப்பா! அவளுடைய மாமனும், மாமியும்தான் அவளில் எத்தனை அன்பு செலுத்துகிருர்கள்.

அவள் உண்மையிலேயே பாக்கியசாலிதான்.

அடுத்து —

திடீரென மாஹிர் சல்மாவின் மனதில் காட்சிதந்தான். ஓ! மாஹிர் மச்சான் சாதாரண மனிதரேயல்ல.

அவருடைய உள்ளம்தான் எவ்வளவு விரிவு. தொடர்ந்து சல்மாவின் மனதில் றஸானு தோன்றினுள்.

றஸானு அழகிதான். அவளுடைய அழகு அவளுக்கு வாழ்க்கையைக் கொடுத்துவிட்டது. அவள்கூடக் கர்ப்பவதியாக இருக்கிருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் கணவனும் ஓர் அழகான ஆள்தான். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை பாத்திமாவின் குழந்தையைவிட அழகாக இருக்குமோ என்னவோ?

குழந்தைகள்தான் ரோஜாப் பூக்களைப்போல என்ன அழகு! எவ்வளவு மென்மை! தன்னை மறந்து நாளெல்லாம் அவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கலாமே!

குழந்தைகளைப்பற்றி நினைக்கும்போது ஏனோ தெரியாது அவள் உள்ளத்தில் எங்கோ, ஏதோ இடறுவதுபோன்று ஓர் உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

எல்லோருக்கும் திருமணம் ஆனதும் குழந்தைகள் பிறக்கின்றன. பாயிஸாகூட இன்னும் ஒருவருடத்தில் குழந்தையொன்றுக்குத் தாயாகிவிடுவாள். அந்தப்பாக்கியம் அவளுக்குக் கிடைக்குமா?

சல்மாவும் பெண்தானே! பெண்களின் பொதுவான உணர்ச்சிகள் அவளுக்குமட்டும் இல்லாமல் போய்விடுமா?

சில நிமிடங்கள் அவள் முகட்டைப் பார்த்தவாறு சிலையாக இருந்தாள்.

எதைத்தான் நினைத்துக்கொண்டாளோ திடீரென அவளின் கண்கள் குளமாகின. குளம் நீரூற்றுகமாறி அவளின் பட்டுக் கன்னங்களை நனைத்தது.

ஆம்! அவள் அழுகிறாள்.

அவளுக்காகக் கட்டியிருந்த வீட்டில் பாயிஸா திருமணம் செய்துகொண்டாள். இப்போது திருமணம் செய்வதாயின் சல்மாவுக்கு வீடு இல்லை. வளவுவாங்கி வீடுகட்டக் குறைந்தது ஒரு வருடமாவது எடுக்கும்.

அதன்பின்னர் தான் எப்படித் திருமணம் செய்வது? ஆஸ்மாவின் கோரத் தாக்குதலுக்கு ஆளாகிப் படுத்தபடுக்கையில் கிடந்த மரியம் இப்போதுதான் சற்று எழுந்து நடமாடுகிறாள்.

பாரிசவாதத்தால் கட்டிலில் ஊமையாக முடங்கிக்கிடக்கும் தஸ்லீம் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்.

காலிதீன் பாடசாலைக்குச் சென்றுவருகிறான். மாணவனான அவனால்மட்டும் எப்படிப் பெற்றோரைக் கவனிக்கமுடியும்? றஸானும் பாயிஸாவும் பெற்றோரைக் கவனிப்பார்கள் என்று நினைக்கமுடியுமா?

அவர்கள் விரும்பினாலும் கணவன்மார்கள் சம்மதிப்பார்களா?

''சல்மா. என்ன ஒரே சிந்தனை?'' – குரல்கேட்டு சல்மா திடுக்குற்று திரும்பிப்பார்த்தாள். அங்கே மாஹிர் நின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்போதுதான் வந்தீங்களா ?''

''இல்லே. சுமார் ஐந்து நிமிடங்கள் இருக்கலாம். முனிவர் தவம் கலைந்து சுயநிலைக்கு வருமட்டும் காத்துக்கொண்டிருந்தேன். அந்த நல்ல செய்தியைச் சொல்லாமல் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. அதனால் தவத்தைக் கலைத்து விட்டேன். அடியேனைப் பொறுத்தருள்க'' என்றான் சிரித்தவாறு.

அவனுடைய ஹாஸ்யத்தைக் கேட்டு அவனுக்குத் தெரியாமல் முந்தானையால் கண்களைத் துடைத்தவாறு சல்மா சிரித்தாள்.

''நீங்க எங்க வீட்டுக்கு வரும் ஒவ்வொரு தடவையும் ஏதாவது நல்ல சேதியைக் கொண்டுவருவீங்க. சொல்லுங்க''

அவன் சொல்லப்போகும் நல்ல செய்தி சில நிமிடங்களுக்கு முன்னால் அவள் நினைத்து ஏங்கிய அவளின் எதிர்கால வாழ்க்கையின் வசந்தகாலம் பற்றியதாக இருக்கமாட்டாதா என அவள் உள்ளம் ஏங்கியது.

''வெளிநாட்டுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்வதற்காக மனுப்பண்ணியிருந்தோம் அல்லவா? அந்த மனு தொடர்பாகத் தகவல் வந்திருக்கு. பத்தாயிரம் சாரன்கள் சப்ளை பண்ணுமாறு நாளைக்குக் கடிதம் வருதாம்''

அந்தச் செய்தி அவள் உள்ளம் ஏங்கிய செய்தியாக இல்லாவிட்டாலும் அதையிட்டுப் பெரிதும் மகிழ்ந்தாள்.

''உங்களுக்கு இது எப்படித் தெரியும் ?''

''அமைச்சு காரியாலயத்தில் வேலைசெய்யும் நண்பனொருவன் தந்தி அனுப்பியிருந்தான்''

''எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா ? இதற்கெல்லாம் உங்களுக்கும், மீரானுக்கும்தான் நான் நன்றி சொல்லணும்''

சல்மா தன் கவலைகளை உடனேயே மறந்தாள். இந்த நிமிடம் தொடங்கி உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பாக அவள் சிந்திக்கவேண்டியிருந்தது.

* * *

நூற்பது தறிகளும் முழுமூச்சுடன் இயங்கின. வேலையாட்களுக்கு ஊக்க அலவன்ஸ் எனப் புதிதாக ஒரு திட்டத்தைப் பெக்டரியில் அறிமுகப்படுத்தியிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல ராட்டினங்களும் சதா சுற்றிக்கொண்டிருந்தன. நான்கு வாப்பிங்ரோல்களும் ஒன்றுமாறி ஒன்றாகப் பாவுகளைப் பிரசவித்தன.

சல்மா பெக்டரி முழுதும் பம்பரமாகச் சுழன்று ஆட்களிடம் வேலைவாங்கினாள். நேரம் கிடைக்கும்போதெல்லாம் வீட்டினுள் ஓடிச்சென்று பாத்திமாவின் இரண்டாவது மழலையைத் தூக்கிக் கொஞ்சினாள்.

சிலநேரங்களில் பாத்திமாவின் முதல் குழந்தையை இடுப்பில் தூக்கியவாறு பெக்டரிக்குள் வலம்வருவாள்.

பாத்திமாவுக்குக் குழந்தை பிறந்து பத்து நாட்களாகிவிட்டன.

அன்று —

வேலையாட்கள் பெக்டரியை விட்டுச் சென்றபின்னர் அன்றைய உற்பத்தியைக் கணக்கெடுத்தாள் சல்மா.

பெக்டரியைப் பூட்டிவிட்டு வீட்டுக்குள் வந்தாள்.

இரவு சாப்பிட்டதன்பின் பாத்திமா படுத்திருந்த அறைக்குள் எல்லோரும் கூடினர்.

மாஹிர், நயீம், றஸானா, சல்மா, பாத்திமா ஆகிய அனைவரும் அங்கு இருந்தனர். சல்மாவின் மடியில் பாத்திமாவின் குழந்தை கிடந்தது.

"சல்மா, உற்பத்தி எப்படி இருக்கிறது?" பாத்திமா கேட்டாள்.

"நான் எதிர்பார்த்ததைவிட நன்றாக இருக்கிறது. இப்படியே எந்த சிக்கலும் இல்லாமல் வேலை நடந்தால் சுமார் ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களில் பத்தாயிரம் சாரன்களும் உற்பத்தியாகிடும்"

"சல்மாவுக்கு இந்த ஏற்றுமதி ஓடர் வந்ததால் எனக்குத்தான் நட்டம்" என்றான் நயீம்.

"உங்களுக்கு எப்படி நட்டம்?" பாத்திமா கேட்டாள்.

"உற்பத்திகளில் பெரும்பான்மையை நான்தானே வாங்கிக்கொண்டிருக்கிறேன். இப்போது பெரிய இடங்களின் ஆதரவு கிடைத்துவிட்டது. இந்த ஏழையை மறந்தேவிடுவாபோல் தெரிகிறது" நயீம் கூறியபோது அனைவரும் சிரித்தனர். அவர்களின் உரையாடலைக் கதவிடுக்கினுள் ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்த மரியமும் சிரித்தாள்.

"அங்கேதான் பிழை விட்டுவிட்டீர்கள். உற்பத்திகளில் கணிசமான அளவை உங்களுக்கு விற்பதற்காகத் தினமும் ஒதுக்கி வைக்கிறேன். முன்னர் என்றால் உங்களுக்குத் தராமல் விடலாம். இப்போது அப்படிச் செய்யலாமா? நீங்கள் கோபிக்காவிட்டாலும் பாயிஸா கோபிப்பாளே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கூறியதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். சிரிப்பொலி அடங்கப் பல நிமிடங்களாகின.

அனைவரும் படுக்கச் சென்றுவிட்டனர்.

முன் கதவுக்கு அடுத்த அறையில் பாத்திமா தன் கைக் குழந்தையை அணைத்தவாறு படுத்தாள். கூடவே மரியமும் அவளுக்குத் துணையாகப் படுத்தாள்.

அடுத்த அறையில் மாஹிர் படுத்தான். காலிதீனும் அதே அறையில் படுத்தான்.

வேறொரு அறையில் பாயிஸா தன் கணவனுடன் நித்திரை செய்தாள்.

வீட்டின் கடைசி மூலையில் அமைந்துள்ள அறையில் பாரிசவாதத்தால் முடங்கிக்கிடந்த தஸ்லீம் படுத்தார். அவருக்குத் துணையாகப் பாத்திமாவின் மூதற் குழந்தையை அணைத்தவாறு சல்மா உறங்கினாள்.

பாத்திமாவுக்கு நித்திரை வரவில்லை. அறையினுள் மின் விளக்கு இளமஞ்சள் ஒளியை உமிழ்ந்தது.

ஊர் உறங்கிவிட்டது. ஒரே நிசப்தம்.

சுவர்க் கடிகாரம் மூன்றுமுறை அடித்து ஓய்ந்தது.

இருந்தாற்போலிருந்து பாத்திமாவின் குழந்தை திடுக்குற்று விழித்து அழுதது. பாத்திமா மெதுவாக எழுந்திருந்து, குழந்தையை வாரி எடுத்து மடியில் போட்டு தாய்ப்பாலைப் பருக்கினாள்.

குழந்தை பாலைச் சுவைத்துக்கொண்டிருந்தது.

பாத்திமா எதேச்சையாகத் திறந்திருந்த ஜன்னல் ஊடாக வானத்தைப் பார்த்தாள்.

வானம் முழுவதும் கும்மிருட்டு. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நட்சத்திரங்கள் கண்சிமிட்டின.

பாத்திமா மடியில் கிடந்த குழந்தையைப் பார்த்தாள். பால்வடியும் அதன் அழகைத் தன்னை மறந்து பல நிமிடங்கள் பார்த்துக்கொண்டிருந்தாள்.

திரும்பவும் எதேச்சையாக ஜன்னலூடாகப் பார்வையை எறிந்தாள்.

அப்போது —

அவள் அங்கு கண்ட காட்சி அவளை மெய்சிலிர்க்க வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 19 —

கண்களைக் கசக்கியவாறு அவள் மீண்டும் அந்தக் காட்சியை உற்றுப்பார்த்தாள். ஓர் உருவம் தீப்பந்தம் ஒன்றைக் கையில் ஏந்தியவாறு சுவரில் ஏறி உள்ளே குதிக்க முயற்சித்துக்கொண்டிருந்தது.

அந்த உருவம் இப்போது கீழே குதித்துவிட்டது. கையில் இருந்த தீப்பந்தத்தைப் பின்னால் மறைத்தவாறு மெதுமெதுவாகப் பெக்டரியை நோக்கி அந்த உருவம் நடக்கத்தொடங்கியது.

யாரோ பெக்டரிக்குத் தீ வைக்க வருகிறான் என்பதை உடனே பாத்திமா புரிந்துகொண்டாள்.

அவளால் இன்னும் அமைதியாக இருக்கமுடியவில்லை. திடீரென மடியில் கிடந்த குழந்தையைக் கீழே வைத்தாள்.

சரிந்துகிடந்த முந்தானையைத் தூக்கி மேலே போட்டாள். ஓரே எட்டில் முன் கதவைநோக்கி ஓடினாள்.

''சல்மா, பாயிஸா, எழும்புங்க. யாரோ பெக்டரிக்குத் தீமூட்ட வாறான்'' பலத்த கூக்குரலெழுப்பினாள்.

மாஹிர் படுத்திருந்த அறையின் கதவைப் பலமாகத் தட்டி அவனை எழுப்பினாள்.

அவளின் குரலைக்கேட்டுப் படுத்திருந்த பலரும் நித்திரை மயக்கத்துடன் ஹாலைநோக்கி ஓடிவருவது அவளுக்குத் தெரிந்தது.

பாத்திமா முன் கதவைத் திறந்து வாசலுக்கு ஓடினாள்.

''அதோ பெக்டரிக்குத் தீமூட்ட யாரோ வாறான். ஓடி வாங்க'' எனக் கத்தினாள்.

மாஹிரும் மற்றவர்களும் வாசலுக்கு ஓடிவந்தனர்.

''அதோ... அதோ... பிடிங்க. அவன்தான்'' கூறியவாறு பாத்திமா வேகமாக ஓடினாள்.

தீப்பந்தத்துடன் வந்தவன் பெக்டரியை அண்மிப்பதற்கு முன்னர் பாத்திமா அவனை நெருங்கிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலைத் தலைப்பு காலில் சிக்கித் தொபீரென கீழே விழுந்தாள். வீழ்ந்த மறுகணம் பக்கத்தில் தீப்பந்தத்துடன் நின்றவனின் காலை இறுகக் கட்டிப்பிடித்தாள்.

வந்தவன் அங்கும் இங்கும் பார்த்தான். சில யார் தூரத்தில் மற்றவர்கள் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தனர். பாத்திமாவின் பிடி அவனை அசையவிடவில்லை.

என்ன நினைத்தானே கையிலிருந்த தீப்பந்தத்தைப் பாத்திமாவை நோக்கி வீசினான்.

தீப்பந்தம் பட்டதுதான் தாமதம். பாத்திமாவின் சேலையில் திடீரெனத் தீ பிடித்தது.

பாத்திமா அவனைப் பிடித்திருந்த தனது கைகளை விலக்கி, சேலையில் பிடித்த தீயை அணைப்பதற்காக மறுபக்கம் புரண்டாள்.

தீ மேலும் பரவிக் குபீரென எரியத்தொடங்கியது.

பாத்திமாவின் பிடியிலிருந்து விலகியவன் ஒரே பாய்ச்சலாக அடுத்த பக்கத்திற்குத் தாவிப் பாய்ந்தான். ஆனால் அங்கே வந்த நயீமின் கைகளில் அவன் சிக்கிக்கொண்டான்.

நயீம் தன் பலம் முழுவதையும் திரட்டி ஓங்கி அவன் கழுத்தில் அடித்தான். வந்தவன் சுருண்டு கீழே விழுந்தான்.

பாத்திமாவின் சேலையில் பிடித்த தீ உடலில் தாவிக் கொழுந்துவிட்டு எரியத்தொடங்கியது. வேதனை தாங்கமுடியாமல் அவள் வாய்விட்டு அலறினாள். தரையில் புரண்டாள்.

பாத்திமா தீயின் கொடுமை தாங்கமுடியாது அலறுவதைப் பார்த்து சல்மாவும் பாயிஸாவும் அவலக்குரல் எழுப்பினர்.

மாஹிர் ஓடிச்சென்று கோணிச் சாக்கு ஒன்றை நீரில் நனைத்து எடுத்துவந்து பாத்திமாவைப் போர்த்தினான்.

தீ அணைந்தது!

பாயிஸா வாசலில் பொருத்தியிருந்த மின் விளக்கைப் போட்டாள். மின் விளக்கின் ஒளியில் பாத்திமா கருகிய மலராகக் கீழே கிடந்தாள்.

மாஹிர் கையைத் தொட்டு அவளின் நாடியைப் பார்த்தான்.

''காலிதீன்! உடனே ஓடிப்போய் ஒரு கார் எடுத்துவா. பாத்திமாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகணும்''

காலிதீன் கேற்றைத் திறந்துகொண்டு சைக்கிளில் விரைந்து ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டு மயங்கிக் கீழே விழுந்துகிடந்தவனை நயீம் தூக்கி நிறுத்தி அவனது முகமூடியைப் பிய்த்து எறிந்தான்.

''வாப்பா... நீங்களா..?'' நயீம் கத்தினான்.

''யார்? உன் தகப்பனா?'' மாஹிர் கேட்டான்.

''ஆமாம். அவர்தான். இவரை உடனேயே பொலிஸில் கொடுக்கணும்''

''நயீம். அவர் உன் தந்தை''

''அப்படிச் சொல்லவே எனக்கு வெட்கமாயிருக்கு. இவரைப் பேசாமல் விட்டுவிட்டால் இன்னும் எத்தனையோ குடும்பங்களுக்கு உலைவைக்க முற்படுவார். நீ இவரைப் பார்த்துக் கொள். நான் பொலிசுக்கு டெலிபோன் செய்துவிட்டு வருகிறேன்''

காலிதீன் காருடன் வந்தான்.

பொலிசுக்கு டெலிபோன் செய்துவிட்டு நயீமும் திரும்பி வந்துவிட்டான்.

பாத்திமாவைக் காரில் கிடத்தினர். கார் பறந்தது.

பாத்திமாவின் தலை மாஹிரின் மடியில் இருந்தது. கால்கள் சல்மாவின் மடியில் கிடந்தன.

காரினுள் வெளிச்சம் எரிந்தது.

காட்டு வழியில் சுமார் இரண்டுமைல் தூரம் கார் சென்றிருக்கும்.

மாஹிர் திடீரென ''டிறைவர்! காரை நிறுத்து'' என்றான் சப்தமிட்டு.

கார் நின்றது.

சல்மா பதறியவாறு ''ஏன் காரை நிறுத்தச்சொன்னீங்க?'' என்றாள்.

மாஹிர் ஒரு விநாடி மௌனமானான்.

''சல்மா... ஆஸ்பத்திரிக்குப் போக விரும்பாமல் அவ போயிட்டா...'' கூறியவாறு காடு அதிர சப்தமிட்டு அழுதான்.

அவனுடைய அழுகையை அடக்கச் சல்மாவால் முடியாதிருந்தது. வெந்துபோயிருந்த தனது சகோதரியின் கால்களைக் கட்டிப்பிடித்தவாறு 'ஓ'வென ஒப்பாரி வைத்துச் சல்மா அழத் தொடங்கிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திமாவின் மையத்தைச் சுமந்துவந்த கார் வீட்டை அடைந்தது.

காரிலிருந்து மாஹிர் இறங்கினான்.

அவனைத்தொடர்ந்து சல்மா இறங்கினாள்.

அங்கு அவர்களை மரியத்தின் ஒப்பாரி வரவேற்றது.

மையத்தைக் காரில் விட்டுவிட்டு இருவரும் வீட்டினுள் ஓடினர்.

தஸ்லீமின் கட்டிலைச்சுற்றி நின்ற மரியமும், பாயிஸாவும் தலையில் அடித்தவாறு ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர்.

கட்டிலின் அருகே இரத்த வெள்ளம்...

ஆமாம்!

பெக்டரிக்கு நெருப்பு வைக்க யாரோ வருகிறான் எனப் பாத்திமா போட்ட கூக்குரலில் திடுக்குற்றுவிழித்த தஸ்லீம் தன்னை மறந்தவராகக் கட்டிலிலிருந்து தாவி எழும்ப முயன்றிருக்கிறார். அப்போது... பாரிசவாத நோயாளியான அவர் திடீரெனக் கீழே விழ... தலை தரையில் மோதி... வெடித்து எப்போதோ அவர் மௌனத்தாகிவிட்டிருந்தார்.

இந்த விடயமும் இப்போதுதான் அவர்களுக்குத் தெரிய வந்தது.

ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மரணங்கள் ஏற்பட்டு அந்த வீட்டில் பாரிய சூறாவளியொன்று பயங்கரமாகச் சுழன்று வீசி... பயங்கர அனர்த்தங்களை ஏற்படுத்திவிட்டு ஓய்ந்ததுபோல...

இப்போது ஒரே மயான அமைதி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — 20 —

பாத்திமாவின் குழந்தை சல்மாவின் மடியில் கிடந்தது.

சல்மா எங்கேயோ பார்த்தவாறு சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

அவள் உள்ளம் மௌனமாக அழுதுகொண்டிருந்தது.

கடந்த ஒரு வாரமாகப் பெக்டரியில் வேலை எதுவும் நடைபெறவில்லை. அதுவும் அந்த வீட்டில் நடந்து முடிந்துவிட்ட சோக சம்பவங்களுக்கு மௌனஞ்சலி செலுத்துவதுபோல மௌனமாகிப் போயிருந்தது.

வீடும் மௌனத்தில் ஆழ்ந்துகொண்டிருந்தது.

துக்கம் விசாரிப்பவர்கள் மட்டும் அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தார்கள்.

நடந்துமுடிந்த சம்பவங்களைச் சல்மா மீண்டும் நினைத்துப் பார்த்தாள்.

சற்றுமே எதிர்பாராத விதமாக எல்லாமே நடந்துவிட்டதே!

அன்று இரவு பாத்திமா தன் மழலையைக் கொஞ்சியவாறு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தாள்!

மாஹிர் தினமும் வந்து தன் குழந்தைகளைப் பார்த்துவிட்டுச் சென்றான். பாத்திமாவின் மரணம் அவனை நிலைகுலையச் செய்துவிட்டிருந்தது.

முகமெங்கும் திட்டுத்திட்டாக ரோமங்கள்... தலை சீவி எத்தனை நாட்களாகிவிட்டனவோ!

இந்த ஒரு கிழமைக்குள் அவன் பாதி உடைந்துபோய் இருந்தான்.

சல்மாவின் வீட்டுக்கு அவன் வரும்போதெல்லாம் குழந்தைகளை மடியில் போட்டுக்கொண்டு நீண்டநேரம் அழுவான். தானாக எதையெதையோ முணுமுணுப்பான். ஒச்ரார் சமயங்களில் நயீம் அவனுககு ஆறுதல் கூறுவான.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்தன.

சுமார் இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன.

ஒருநாள்.

வெளியிலிருந்து நயீம் வீட்டுக்குள் வந்து நுழைந்தான். அவனின் முகம் களையிழந்து காணப்பட்டது.

''ஏன் ஒருமாதிரி இருக்கிறீங்க?'' பாயிஸா கேட்டாள்.

நயீம் உடனேயே பதில் கூறவில்லை. நீண்டநேரம் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தான்.

''பாயிஸா. வாப்பாவுக்கு ஐந்துவருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை கொடுத்திட்டாங்க. இன்றுதான் தீர்ப்பு'' என்றவன் துக்கத்தை அடக்கமுடியாமல் வாய்விட்டு அழுதான்.

அவனுடைய துயரத்தில் பாயிஸாவும் கலந்துகொண்டாள்.

★ ★ ★

மரியம் இத்தாவில் இருந்து வெளிவர இன்னும் பத்து நாட்கள்தான் இருந்தன.

சல்மா நாடியைக் கையால் தாங்கியவாறு எதைப்பற்றியோ சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

பெக்டரி என்னவோ இயங்கிக்கொண்டிருந்தது.

ஏற்றுமதி செய்வதற்காகப் பாரமெடுத்த சாரன்களை உரிய காலத்தில் அவளால் கொடுக்கமுடியாமல் போய்விட்டது.

அவளுடைய இப்போதைய சிந்தனை பெக்டரியைப் பற்றியது அல்ல.

கடந்த பல நாட்களாக மாஹிரின் தகப்பன் உதுமாலெவ்வைப் போடியார் அவளை நெருக்கிக்கொண்டிருக்கும் அவளுடைய வாழ்க்கை தொடர்பான பிரச்சினை அது.

பலகோணங்களில் அவள் அதைப்பற்றிச் சிந்தித்தாள்.

எவ்வளவுதான் முயன்றாலும் அவரின் கோரிக்கையை அவளால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

'நான் மாஹிர் மச்சானுடன் அவருடைய சகோதரியைப் போல்தான் இத்தனை நாட்களும் பழகினேன். இப்போது நான் அவரைக் கணவனாக ஏற்றுக்கொள்வதா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அவளால் நினைத்துப்பார்க்கவே முடியாமல் இருந்தது. இது பாத்திமாவுக்குச் செய்யும் துரோகம் என நினைத்தாள்.

'அவர் எங்கேயாவது முடிக்கட்டும். ஆனல் நான் அவரை முடிக்கப்போவது இல்லை'

அன்று இரவு அவளுடைய முடிவை அறிவதற்காகப் போடியார் வந்தார்.

''சல்மா... இறுதியாக நீ என்னதான் முடிவு செய்திருக்கே ..?'' போடியார் கேட்டார்.

''நான் இதையிட்டு நன்ருகச் சிந்தித்துவிட்டேன். உங்க கோரிக்கையை என்னல் ஏற்றுக்கொள்ளமுடியாது மாமா'' என்ருள்,

''சல்மா, நன்ருகச் சிந்தித்து உன் முடிவைச் சொல். மாஹிரும் ஆரம்பத்தில் உன்னைப்போல்தான் மறுத்தான். எனினும் அவனுடைய பிள்ளைகளின் பாசம், எங்களின் வற்புறுத்தல் ஆகியவை அவனைச் சம்மதிக்கவைத்தன. நீ மாஹிரை முடிப்பதற்குச் சம்மதம் கொடுத்துத்தான் ஆகணும்.''

''நான் உங்க மகனுடன் இதுநாள்வரை ஒரு சகோதரியாகத்தான் பழகினேன். அவருடைய மதினியாக நான் பழகவே இல்லை. அவருடைய சகோதரியாகப் பழகிவிட்டபின் அவரையே என் கணவஞக ஏற்றுக்கொள்ளமுடியுமா? அவரைத் திருமணம் செய்வதை என் உடன்பிறந்த சகோதரிக்கு நான் செய்யும் பெரிய துரோகமாகவே நினைக்கிறேன்''

''நீ இதற்குச் சம்மதிக்கப்போவதே இல்லையா?''

போடியார் கோபமாகக் கேட்டார். அவரின் குரலில் ஆத்திரம் கலந்து இருந்தது.

''தயவுசெய்து என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்''

சல்மா தொடர்ந்தும் அதே வார்த்தையைத்தான் அவருக்குக் கூறினள்.

ஆரம்பத்தில் .....

மாஹிர் சல்மாவிடம் 'கதை மூலம்' தான் அவளை மணம் முடிக்க விரும்புவதாகத் தெரிவித்தபோது...

சல்மா உண்மையிலேயே மாஹிருடன் வாழத்தான் விரும்பினள்.

ஆனல் —

அவளின் சகோதரி பாத்திமா மாஹிரை மனதில் வைத்துக் கொண்டு ஒருதலைக் காதல் கொண்ட விடயம் சல்மாவுக்குத் தெரியவந்தபோது... அவளால் தனது விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் பொறுத்தவரை 'தியாகம்' என்ற வார்த்தை அவள் குருதியுடன் கலந்துவிட்ட ஒன்று.

மாஹிர் பாத்திமாவைக் கைபிடித்தபின்பு மாஹிரைச் சல்மா ஒரு சகோதரனுகவே நினைத்து அவனுடன் பழகிவந்தாள்.

மாஹிரின் வாப்பாவின் வேண்டுகோளை அவளால் ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருந்தது.

''என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்று சல்மா கூறிய போது —

போடியார் அவளிடம் விடைபெறுமலேயே வீட்டைவிட்டு வெளியேறினர்.

* * *

அடுத்தநாள். இரவு எட்டுமணி இருக்கும்.

முன்கதவில் யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

சல்மா கதவைத் திறந்தாள்.

அங்கு மாஹிரின் தகப்பன் போடியார் நின்முர்.

''வாங்க மாமா''

''நான் உன்னுடன் கதைத்துக்கொண்டிருக்க வரவில்லை. ஒரு முக்கிய விசயத்தை உன்னிடம் கூறிவிட்டுப்போக வந்தேன்'' கூறியவாறு போடியார் அங்கு கிடந்த கதிரையொன்றில் உட்கார்ந்தார்.

''என்ன விசயம்?'' சல்மா கேட்டாள்.

''மாஹிரின் திருமணத்துக்கு ஒழுங்கு செய்துவிட்டோம். அதைச் சொல்லத்தான் வந்தேன்'' என்றுர் அவர்.

''அப்படியா?... ரொம்ப சந்தோஷம்!...''

''ஆனல் ...''

''என்ன ஆனல்...?''

''மாஹிர் திருமணம் செய்து பெண்ணை எங்க வீட்டுக்குக் கூட்டிவரப்போகிறுன். அதனல் உன்னிடம் இருக்கும் அவனுடைய குழந்தைகள் இரண்டையும் நீ எங்களிடம் தந்துவிடவேண்டும்!''

போடியார் இப்படிக் கூறக் கேட்டதும் சல்மாவின் தலை சுற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனதினுள் மின்னல் மின்னியது! இடி இடித்தது! நீண்ட மௌனத்தின்பின் சல்மா கேட்டாள்.

''மாமா... என்ன சொன்னீங்க...?''

'மாஹிரின் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றேன்''

''அது எப்படி முடியும்...? என் எதிர்காலமே அந்தப் பிள்ளைகள் என்றுதானே நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். என் உயிரிலும் மேலாக நான் பாசம் வைத்திருக்கும் அந்தக் குழந்தைகளை இன்னொருத்திக்குக் கொடுப்பதா? தயவுசெய்து அந்தக் குழந்தைகளை மட்டும் கேட்காதீங்க. உங்க மகனுக்கு யாரை வேண்டுமானாலும் முடித்துக்கொடுங்க... பிள்ளைகளை எங்கிட்டே விட்டுடுங்க. இன்னொருத்தியிடம் அவைகள் போய்க் கொடுமைப்பட இடம் வைக்காதீங்க. தயவுசெய்து பிள்ளைகள் வழியில் வராதீங்க உங்க காலை வேண்டுமானாலும் பிடிக்கிறேன்'' என்றாள் சல்மா கேவியவாறு.

''நல்லா இருக்கு நீ சொல்வது. பிள்ளைகள் தகப்பனுக்குச் சொந்தம். அவன் கேட்கும்போது கொடுக்கவேண்டியது உன் கடமை. மாற்றாள் ஒருத்தியிடம் சென்றால் பிள்ளைகள் கொடுமைப்படுத்தப்படும் என்று நீ நினைக்கிறாய். அதேபோல் நீ யாரை யாவது திருமணம் செய்தால் உன் கணவன் தன் பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துவான் என என் மகன் நினைக்கலாம் அல்லவா? ஆகவே நீ பிள்ளைகளைத் தந்துதான் ஆகணும்''

போடியார் கோபமாகக் கூறினார்.

''நீங்க ஆயிரம் சொன்னாலும் நான் குழந்தைகளைத் தரவேமாட்டேன். அவைகளைப் பிரிந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்!''

''நீ பிள்ளைகளைத் தர மறுத்தால் சட்டப்படி அவைகளை எடுத்துக்கொள்ள எங்களுக்குத் தெரியும். நான் வருகிறேன்'' எனக் கூறிவிட்டுப் போடியார் எழுந்து வெளியே சென்றார்.

சல்மா என்ன நினைத்தாளோ... ''மாமா. சற்று நில்லுங்க'' எனக் கத்தினாள்.

போடியார் நின்றார்.

''மாமா... உங்க மகனை நானே முடித்துக்கொள்கிறேன்... பேசிய திருமணத்தை விட்டுடுங்க...''என்றாள் எங்கோ பார்த்தவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியார் சிரித்தார்.

''அப்படி வாம்மா வழிக்கு... மாஹிருக்கு யார் திருமணம் பேசினார்? எல்லாம் பொய்.. உன்னைச் சம்மதிக்க வைப்பதற்கு இந்தத் தந்திரத்தைவிட வேறு எதையுமே என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை ..'' என்றார் போடியார்.

★ ★ ★

மரியத்தின் இத்தா காலம் முடிந்துவிட்டது.

ஒரு வியாழக்கிழமை பிற்பகல் மாஹிர் சல்மா திருமணம் நடைபெற்றது.

தாலி கட்டப்போகும் வேளையில் பாத்திமாவின் இரு குழந்தைகளும் சல்மாவின் மடியில் கிடந்தன.

மாஹிர் தாலி கட்டுவதற்காக சல்மாவை நெருங்கியபோது அவனுடைய கண்களுக்கு அங்கு பாத்திமாதான் தெரிந்தாள்.

சல்மா தன் கழுத்தில் தாலி கட்டப்படும் சமயத்தில் சகோதரியை நினைத்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து கன்னங்களில் வழிந்து மடியில் கிடந்த பாத்திமாவின் குழந்தைகளில் வீழ்ந்து சங்கமமாகியது.

— முற்றும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111
6018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாருங்கள்!

இக்கதாசிரியரின்

அடுத்த வெளியீடு

# "சாணைக் கூறை"

'தினகரனில்' தொடர்கதையாக வெளியிடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற சமூக நாவல்.

".....பிறந்து நாற்பது நாளான நஜீமாவை ஐந்து வயதுச் சிறுவனான நவாஸின் எதிர்கால மனைவியாக வரிந்து 'சாணைக் கூறை' போடப்படுகிறது. காலப்போக்கில் இருவரும் ஆளையாள் விரும்புகின்றனர். காலத்தால் அழியாத அவர்களின் பாசம்..... இரண்டாவது உலகமகா யுத்தம் முடிவடைந்த காலத்தில் கிழக்கிலங்கையின் முஸ்லிம் கிராமமொன்றின் கலை, கலாச்சாரம், பாரம்பரியங்கள்.... முற்றுமே எதிர்பாராத திருப்பங்கள்....."

பிரதிக்கு முந்துங்கள்!

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org